மாதப் பத்திரிகை

ஆசிரியர்

கா. வே. ராமசந்திரன்

நான்காவது வால்யூம் விக்கிரம வருஷம் ஆடிப் பகுதி

15—7—1940.

விஷய ஸூசிகை.

விஷயம்: பக்கம்.

கீதப் பகுதி

1.	ஆனை ஐயா அவர்களின் கீர்த்தனை ...	உ. வே. சாமிநாதையர் ...	385
2.	வாத்யேச்வரீ வீணை ...	வே. ராகவன் ...	386

சிறுவர் பகுதி

1.	கலைக்கோட்டு முனிவர் கதை ...	S. ரங்கஸ்வாமி, M.A., ...	392

பெண்டிர் பகுதி

1.	சர்க்கார் உத்தியோகமும், ஸதிரீகளின் உரிமைகளும் ...	ருக்மிணி சங்கர நாராயணய்யர் ...	394
2.	அவள் எங்கே? ...	வரகூர் வேணுகோபாலன் ...	397

கவிதா விமர்சம்

1.	கவியமுதம் ...	வே. திருப்பதி நாயுடு ...	401
2.	ஸ்ரீ ராமதரிசனம் ...	"மாயக்கூத்தன்" ...	403
3.	கவி பாடுகை ...	"விசாரதன்" ...	406
4.	சில விவசாய உவமைகள் ...	"துகளன்" ...	408

புதுக் கற்பனைகள்

4.	மானஸீ (நாடகம்) ...	K. வரதாச்சாரி, B.A., B.L., ...	409
2.	அப்பர் ...	"அஜந்தா" ...	419
3.	ஸ்வப்ன வாஸவதத்தம் ...	வே. நாராயணன், M.A., M.L., ...	424
4.	ஐயரவாளின் மாப்பிள்ளை ...	"வம்பன்" ...	436

மொழிபெயர்ப்புப் பகுதி

1.	கடற்கன்னிகையும் யவனவீரனும் ...	வித்வான் கா. ப. வேங்கடகிருஷ்ண மாச்சார்யார் பாடியது ...	437
2.	புது சிருஷ்டியின் ஆரம்ப நிலைமைகள் ...	அரவிந்தர்—P. கோதண்டராமன் ...	440

புஸ்தக விமர்சனம்

1.	ஸ்ரீ குருவசன ரமணமாலா } ...	"அகஸ்திய தாஸன்" ...	448
2.	குருரமண வசனமாலை }		

அறிவிப்பு.

'சில்பஸ்ரீ'க்குக் கட்டுரை எழுத விரும்புவோர் முதல் வால்யூம்தைப்பகுதியில் 2, 3-வது பக்கங்களில் உள்ள 'சில்பஸ்ரீ மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்' 'சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்' என்னும் குறிப்புகளைக் காண்க. அனுப்பப்படும் கட்டுரைகளைத் தாளின் ஒரு பக்கத்திலே மட்டும் எழுதுமாறு பிரார்த்திக்கிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெறவிரும்புவோர் தபால் தலையும் உடன் அனுப்புமாறு பிரார்த்திக்கிறோம்.

இப் பத்திரிகையில் வெளிவரும் புனைந்துரைகளிலுள்ள பெயர்கள் யாரையும் குறிப் பன அல்ல; எல்லாம் கற்பனைப் பெயர்களே அவை. கட்டுரைகளிலே கூறப்படும் அபிப் பிராயங்கள் அவற்றை எழுதியவர்கள் அபிப்பிராயங்களே; அவைகளுக்கு பத்திரிகாசிரியர் ஜவாப்தாரி யல்ல.

சில்பஸ்ரீ

தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்ததொரு பத்திரிகை. டபிள் க்ரௌன் (Double Crown) அளவில் 64 பக்கங்கள் கொண்டு, மாதந்தோறும் வெளிவரும்.

தனிப்பிரதி	விலை அணா 4.
வருஷ சந்தா (உள்நாட்டுத் தபால் சார்ஜு உள்பட)	ரு. 3.

கீதப் பகுதி

ஆனை ஐயா அவர்களின் கீர்த்தனம்.

(மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் உதவியது.)

இராகம் : ஸாவேரி

பல்லவி.

வர்மமா என்மீதில் தர்மஸம்—வர்த்தனேசுவரீ

அநுபல்லவி.

கர்மம் விலக்கும் நிர்மலசிவ
காரணி என்னைக் காக்க இன்னமும் (வமர்

சரணம்.

1. அஞ்சு வயது முதலுன் சரணக்—கஞ்சமலர் பதமே யான்
தஞ்ச மென்று பஞ்சரித்திடும்—நெஞ்சகம் அறிந்தும்
அஞ்சுக மொழி மயிலே இந்த—வஞ்சகம் செய்வதென்ன ஞாயம்
பஞ்சன தீசர்க்குகந்த—பஞ்சாக்ஷரீ கண் பார்க்க இன்னமும் (வர்ம)

2. செஞ்சடை யினிற் பிஞ்சுமதியும்—நெஞ்சினிற் கோடு நஞ்சணிந்திடும்
செஞ்சொல் மதுரத் தமிழ் வாக்கருள்—ஜப்யேசர்க்கு ராணி
செஞ்சிலம் பொலி மிஞ்சியதால்—கெஞ்சும் என்மொழி கேட்டிலையே
என்சொல்லுவேன் என் சரித்திரம்—ஏழை எந்தனைக் காக்கவே
இன்னமும் (வர்ம)

[மற்ற பாகம் கிடைக்கவில்லை.]

*வாத்யேச்வரீ வீணை.

(டாக்டர் வே. ராகவன்.)

[மூன்றுவது வால்யூம் ஆனி இதழின் 368-ம் பக்கத் தொடர்ச்சி.]

6.

(சண்டமஹாஸேனன் என்ற அவந்தி மஹாராஜ னின் கன்யாந்தப்புரம். கௌசாம்பி ராஜனை உதயணனும் மஹாஸேனனுடைய குமாரி வாஸ வதத்தையும்.)

வாஸவதத்தை :—உதயணமஹாராஜரே! இந்த வீணைக்கென்ன இவ்வளவு நாதம்?

உதயணன் :—வாஸவதத்தா! இதற்கு கோஷவதி என்று பெயர்; பெயருக்கு ஏற்ற நாதம்.

வாஸ :—இதைக் கௌசாம்பி ராஜதானியில் செய்த சிற்பி யாரோ?

உத :—இதை யார் செய்தாரென்று அறிய வழியில்லை; இது நான் நாகலோகஞ் சென்றிருந்தபோது, வாஸுகியினால் எனக்கு அளிக்கப்பட்டது.

வாஸ :—உங்களுக்கு இந்த வீணை வாசிப்பதில் ஆசாரியராயிருந்தவர் யாரோ?

உத :—நான் கற்றது நாகராஜன் வாஸுகியிடமே. அவர் எனக்கு கற்றுக் கொடுத்ததில் முக்கியமானது காட்டிலே மதம் பிடித்து அலையும் யானைகளை அடக்கிப் பிடிக்கும்படியான வீணாவாதனமே.

வாஸ :—யானைகளையும் விட கட்டிற்கடங்காமலிருந்து வந்த உம்மை என் தகப்பன் பிடித்து விட்டாரே?

உத :—அவராலும் பிடிக்கப்பட்டேன்; உன்னாலும் கட்டுப்படுத்தப்பட்டுப் போனேன். ஸரி, வாசி. வீணை சொல்லிவைக்க அல்லவோ உன்தகப்பன் என்னை இவ்விடம் உன் அந்தப்புரத்தில் சிறைப்படுத்தி வைத்திருக்கிறான்?

ஸமுத்ரகுப்தன் :—நீர் வாசியும் கொஞ்சம், பிறகு நான் வாசிக்கிறேன்; எங்கள் அரண்மனையில் நளகிரியென்ற பொல்லாத யானையொன்று இருக்கிறது. அதை அடக்கும் கானம் உமக்குத் தெரியுமா?

உத :—அதை அடக்கும் ஸந்தர்ப்பம் வந்தால் அதற்கு வேண்டிய வாத்தியமும் வாசிப்பேன். இப்பொழுது உன் மனதைப் பிடிக்கும் வாத்தியமே வாசிக்க வருகிறது இக் கைகளுக்கு. (உதயணன் அழகாக ஒரு மூர்ச்சனை வாசிக்கிறான்.)

7.

(பராக்ரமாங்கன் என்னும் ஸமுத்ரகுப்த மஹாராஜன் ஹரிஷேணகவியுடன் வீற்றிருந்து பேசிக் கொண்டிருக்கிறான்.)

ஸமுத்ரகுப்தன் :—ஹரிஷேணரே, நல்ல நாடகமொன்றிலிருந்து ஏதாவது ஓரிடம் எடுத்துப் படியுமே, கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

ஹரிஷேணர் :—இதோ. சூத்ரக மஹாராஜனின் மிருச்சகடிகம்; மூன்றும் அங்கம்; பாதி ராத்திரிக்குமேல் ரேபிலனுடைய வீணைப் பாட்டுக் கச்சேரியைக் கேட்டு விட்டு சாருதத்தனும் மைத்ரேயனும் வருகின்றனர்......

ஸமுத்ரகுப் :—நல்ல இடமாக எடுத்தீர். சூத்ரக மஹாராஜன் வீணையைப்பற்றி என்ன சொல்லுகிறான்?

ஹரிஷே :—வீணை யென்பது கடலில் பிறவாத ரத்தினம்; ஏங்கிக் கிடக்கும் மனதிற்கு தேறுதல் கூறும் தோழி; பொழுதுபோகாத போது பொழுதை நன்கு போக வைப்பவள்—இப்படி வீணையைப் புகழ்ந்து விட்டு கடைசியில் ரேபிலனின் வீணையோடு கூடிய இசை முடிந்துபோனாலும் இன்னும் அதைக் கேட்டுக் கொண்டே போகிறாற் போலிருக்கிறது. "கச்சாமி ச்ருண்வன்னிவ" என்று வர்ணிக்கிறார் கவி.

ஸமுத்ரகுப் :—ஹரிஷேணரே, சூத்ரகன் நல்ல ரஸிகன்!

ஹரிஷே :—தாங்களோ. சூத்ரகனைப் போலவே 'கவிராஜர்' என்று பட்டம் பெற்றிருக்கிறீர்கள்; வீணையில் 'தும்புரு, நாரதர்' என்று புகழ் பெற்றிருக்கிறீர்கள்.

* இது 22-4-40 அன்று சென்னை ரேடியோவில் பேசப்பட்டது.

ஸமுத்ரகுப் :—போதும், நீர் பிரயாகையில் என்னைப் பற்றி பிரசஸ்தி எழுதியது போதும், எனக்கெதிரிலும் புகழவேண்டாம். எங்கே, அந்த வீணையைச் சற்று எடும், கொஞ்சம் வாசிக்கிறேன்.

ஹரிஷே :—இதோ.

(ஸமுத்ரகுப்தன் வீணை வாசிக்கிறான்.)

8.

(மதுரை, ஸுந்தரேச்வரர் கோயில்; பாணபத்திரன் என்ற பாண்டிய ஆஸ்தான ஸங்கீதவித்வான் ஸுந்தரேச்வரருக்கு முன் வீணையில் 'ஸாதாரி' வாசித்து வழிபட்டுக் கொண்டிருக்கிறான். கடவுள் அவனுடன் பேசுகிறார்.)

ஸுந்தரேச்வரர் :—பாணபத்திர, இன்று மிகவும் நன்றாய் நீ வாசித்தாய்; ஆனாலும் மனதில் ஏதோ கவலை கொண்டவன் போல் காணப்படுகிறாயே, ஏன்?

பாணபத்திரன் :—பிரபோ, நான் இந்த யாழிசையை உமக்கன்றி வேறொருவருக்கென்றும் வாசிப்பதில்லை; இதையறிந்து அரசனும் கேட்கவேண்டுமானால் நான் வாசிக்கும் இடம் வந்து கேட்பானே அல்லாது, என்னைத் தன் முன் வாசி யென்று ஏவமாட்டான். அப்படியிருந்தும் நான் நாளை அயல் நாட்டு வைணிகன் ஒருவனோடு போட்டி போட்டு ஜயிக்க வேண்டுமென்று அரசன் சொல்லியனுப்பியிருக்கிறான்!

ஸுந்தரேச்வரர் :-நீ அவர்களுக்கு முன் பாடுவானேன், வாசிப்பானேன்; நானிதோ விறகு விற்பவன் போல் அந்த தேசாந்தர வித்வான் வீட்டு வாசலில் இந்தச் சாதாரியையே பாடி அவனை ஊரைவிட்டு ஓடும்படி செய்து விட்டு வருகிறேன்.

9.

(புகார் என்ற காவேரிப்பூம்பட்டணம்; இந்திர விழா; கடற்கரை; மஞ்சமொன்றில் மாதவியும் கோவலனும் இன்புற்றிருக்கின்றனர். பக்கத்தில் மாதவியின் தோழி வஸந்தமாலை வீணை யொன்றை வைத்துக் கொண்டிருக்கிறாள்.)

மாதவி :—வஸந்தமாலிகா, யாழை என்னிடம் கொடு.

வஸந்தமாலை :—இதோ. (கொடுக்கிறாள்.)

(மாதவி உறையையவிழ்த்து யாழை மடியில் வைத்து, கம்பிகளைத் துடைத்து மீட்டி, ச்ருதி பார்த்துவிட்டு கோவலனைப் பார்த்து)

மாத :—எங்கே, கொஞ்சம் நீர் பாடி வாசியும்; அதன் பிறகு நான் பாடி வாசிக்கிறேன்.

கோவல :—ஸரி, இப்படிக் கொடுத்துவிட்டு, இவ்வாற்றுவரியை முதலில் கேள். நம் காவேரியைப்பற்றிப் பாடுகிறேன்.

"திங்கண்மாலை வெண்குடையான் சென்னி
செங்கோலதுவோச்சி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய்
வாழி காவேரி"

10.

(திருக்குறுங்குடி யென்ற க்ஷேத்ரம்; கார்த்திகை மாதம், சுக்லபக்ஷம், த்வாதசி, அதிகாலை நேரம்; கடவுள் தனக்குள் பேசிக் கொள்ளுகிறார்.)

கடவுள் :—சந்திரன் அஸ்தமனமாகப் போகிறானே, ஏன் இன்று நம் காதலன் நம்பாடுவான் நம் கோயிலுக்கு முன் வந்து தன் கைசிகப்பண்ணை நமக்கு அர்ப்பணம் செய்யவில்லை. (வீணையில் கைசிகம் தொடங்குகிறது.) ஆகா, என்ன இனிமையாயிருக்கிறது! இந்த புனிதமான காலை வேளை, இந்த சந்திரிகை, இவன் நம்பால் கொண்ட அன்பு, இக்கைசிகப் பண், இவை ஒன்றுக்கொன்று ஒப்பாக விளங்குகின்றன. நம்பாடுவா, ஏன் இன்று தாமதித்து வந்தாய்?

நம்பாடுவான் :—பகவானே! வழியில் பிரம்மராக்ஷஸ் ஒன்று என்னை உணவாய் அடைய விரும்பிற்று; அதனுடன் வாதித்து, உமக்கு இன்று வீணை வாசித்துவிட்ட உடனே ஓடி வந்து, என்னை ஆகாரமாய் அந்த பிரம்மராக்ஷஸ்ஸுக்கு அர்ப்பணஞ் செய்கிறேனென்று வாக்குக் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன். அனுமதிக்கவேண்டும். இன்று நான் தங்களுக்கு வாசித்தது கடைசி கைசிகம்!

கடவுள் :—ஆகா! அதுதான் இவ்வளவு மதுரமாய் இன்று வாசித்தனையோ! போகட்டும், நீ பிரம்மராக்ஷஸுக்கு ஆகாரமாக வேண்டாம்.

நம்பாடு:—ஸ்வாமி, ஸத்யம் தவறமுடியாது; வாக்குக் கொடுத்தபடி நான் அவ் பிரம்மராக்ஷஸுக்கு ஆகாரமாக வேண்டியது தான்.

கடவுள் :—ஆனல் நான் உன்னைக் காக்க வேண்டாமா?

நம்பாடு :—ஆனல் நான் உண்மையைக் காக்க வேண்டாமா?

கடவுள் :—இரண்டையும் இருவரும் காப்போம்; இதோ பிரம்மராக்ஷஸ் வருகிறது; எனக்கு இனி யார் உன்போல் இப்படி வீணை வாசித்தருளப் போகின்றனர்; நீ போய்விடும் முன் இன்னும் கொஞ்சம் வாசித்துவிட்டுப் போகமாட்டாயா!

நம்பாடு :—தடை யென்ன? கட்டளை யிடும் கடவுள் கேட்டும் செய்யாமல் ஏன் இருப்பேன்? இதோ (வீணையை மறுபடியும் எடுக்கிறன்.)

கடவுள் :—நம்பாடுவா, உனது கைசிக கானத்தால் பெற்ற புண்ணியத்தில் ஒரு திவலையை இந்த ப்ரம்மராக்ஷஸுக்குக் கொடு; அவனும் உன்னுடன் கடைத்தேறட்டும்.

நம்பாடு :—அப்படியே! இந்த ரக்ஷஸ் நற்கதியடையவே இதோ வாசிக்கப் போகிறேன்:

(மறுபடியும் கைசிக கானம், வீணையில்.)

11

(ஸ்ரீரங்கம்; ரங்கநாதரின் கர்ப்பகிருஹம்; ரங்கநாதனுக்குப் பணிவிடை செய்பவரும் ரங்கநாதரும் பேசிக்கொள்ளுகின்றனர்.)

பணிவிடை செய்கிறவர் :—பிரபோ! இதென்ன நெற்றியில் ரத்தம்!

ரங்கநாதன் :—லோகஸாரங்கன் என்னைக் கல்லால் அடித்துவிட்டான்!

பணி :—லோகஸாரங்கன் இங்கில்லையே! காவேரிக்கல்லவோ தங்கள் நீராட்டத்திற்குத் தீர்த்தங் கொண்டுவரச் சென்றிருக்கிறன்!

ரங்க :—ஆமாம், காவேரிக்கரையிலேதான் என்னை கல்லெறிந்து காயப்படுத்தி விட்டான்.

பணி :—ஸ்வாமி எனக் கொன்றும் விளங்கவில்லையே!

ரங்க :—பக்தா! என் சிறந்த பக்தன் திருப்பாணன் உறையூரன் காவேரியின் அக்கரையிலிருந்து என்னை வீணையிழைத்துப் பாடிக்கொண்டு மெய்மறந்திருக்க, 'லோகஸாரங்கன் அவனைக் கேவலம் சண்டாளனய் எண்ணி 'நகரடா' என்று சொல்லி, கல்லைவிட்டடித்து விட்டான். நீ நம் திருப்பாணரை இங்கழைத்து வந்து என் முன்னிலையிலேயே பாடச் சொன்னல் எனக்கு நெற்றியிலிருந்து கொட்டும் ரத்தம் நிற்கும்.

பணி :—உத்தரவு.

(அப்படியே பகவானின் திருச்சன்னிதானத்திற்கே கொண்டுவரப்பட்ட திருப்பாணழ்வார் வீணையிலிட்டுப் பாடுகிறர்.)

கொண்டல்வண்ணனைக் கோவலனய்
வெண்ணை
யுண்டவாயன், என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்கன் என்னமு
தினைக்
கண்ட கண்கள் மற்றென்றினைக் காணவே.

12

(பிரம்மபுரம், த்ரோணிபுரம் என்ற சீர்காழி; ஞானஸம்பந்தர் தம் வீட்டிலமர்ந்திருக்கும்போது, நீலகண்ட யாழ்ப்பாணர் வருகிறர்.)

நீலகண்டர் :—ஸ்வாமி! நமஸ்காரம்.

ஞானஸம்பந்தர் :—நீலகண்டா! எந்த சிவக்ஷேத்திரத்திலிருந்து இப்பொழுது வந்துகொண்டிருக்கிறய்?

நீல :—ஆரூரனைக் கண்டு அவருக்கு இந்த யாழிசையை அர்ப்பித்துவிட்டு, இங்கு வந்தேன். தங்களது புதுப்பாட்டு என்ன? அதைக் கொஞ்சம் பாடலாமா? அடியேன் யாழில் முடிந்தவரையில் உம்மிசையை பின்தொடர்ந்து பார்க்கிறேன்.

ஞான :—பாடுகிறேன் அப்பா; என் புதுப்பாட்டு உன் யாழுக்கேங்கி உன்னையே எதிர்பார்த்ததாயிருக்கிறது. இதோ,

"சிறையாரு மடக்கிளியே யிங்கேவா
தேனேபோல்
முறையாலே யுணத்தருவன் மோய்பவளத்
தொடுத்தரளங்
துறையாருங் கடற்றேணிபுரத்தீசன் துள
ங்குமிளம்
பிறையாளன் திருநாம மேனக்கோருகாற்
பேசாயே."

13

(காஞ்சியில் ராஜஸிம்ஹேச்வரன் கோயில்; அக் கோயிலை யெழுப்பிய பல்லவமன்னன் ராஜஸிம்ஹன், பரிவாரங்களுடனும் தனது ஆஸ்தான ஸங்கீத வித்வானுடனும் கடவுளை ஸேவிக்க வந்திருக்கிறான்; உள்ளே, பூஜை நடந்து கொண்டிருக்கிறது; முன் மண்டபத்தில் அரசன் தன் ஆஸ்தான ஸங்கீத வித்வானுடன் பேசிக்கொண்டிருக்கிறான்.)

ராஜஸிம்ஹன் :—ருத்திராசார்யரே! நம் பாட்டனார் மஹேந்திரவர்மன் வீணை வாசித்து நான் கேட்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று எனக்கு அடிக்கடித் துயரம் மேலிடுகிறது. அன்று குடுமியாமலைக்குச் சென்று சிகாநாத ஸ்வாமியை ஸேவித்து வரும்போது பாட்டனார் அம்மலையில் வெட்டுவித்த ஏழு ராகங்களுடைய ஸ்வராகமங்களையும் பார்த்தேன்; சிகாநாதரின் முன் அவர் உட்கார்ந்து தம் பரிவாதினியில் அந்த ஏழு ராகங்களையும் அவர் வாசித்துக்கொண்டிருக்கும் தோற்றமொன்று என் மனக்கண்ணின் முன் எழுந்தது; பிறகு அதுபோலவே திருமய்யத்தில் ஸத்யமூர்த்தீச்வரனுக்குமுன் அந்த குணஸேன மஹாராஜன் வாசித்த தோற்றத்தையும் கண்டேன். நேற்றிரவு தனக்கு 'ஸங்கீர்ண ஜாதி' என்ற பிருதைக் கொடுத்த எட்டாவது ராக ஜாதியை அவர் வாசித்த கனவையும் கண்டேன். அதன்மேல் தாங்கள் எனக்குக் கற்பித்த இசையை இந்த மஹேந்திரமேள வீணையான பரிவாதினியில் இக்கோயிலில் வாசித்து கடவுளிற்கு முன் அரங்கேற்ற வேண்டுமென்ற அவா எனக்கேற்பட்டது.

ருத்ராசார்யர் :—ராஜஸிம்ஹ! கடவுளுக்கின்றி வேறு யாருக்கு இதை அர்ப்பணஞ் செய்வது! உன் பாட்டன் வீணாதர தக்ஷிணாமூர்த்தியை உபாஸித்தவன்; அவருக்கே தன்னிசையை நிவேதனஞ் செய்து வந்தான். இதோ தேவபூஜகர் பூஜையை முடித்துவிட்டார்; நீ வாசிக்கலாம்.

(ராஜஸிம்ஹன் வீணை வாசிக்கிறான்.)

ருத் :—ஆகா! மஹேந்திரவர்மனுக்கிருந்த கைலாகவம், பிசகற்ற விரலோட்டம், அதே கம்பீரமான நாதம்! ராஜஸிம்ஹ! உனக்கு "வாத்ய வித்தியாதரன்" "ஆதோத்ய தும்புரு" "வீணா நாரதன்" என்று பெயர்கள் கொடுத்தால் தகும்!

14

(தஞ்சை அரண்மனை; ஸங்கீத மஹால்.)

ரகுநாத நாயக்கர் .—யக்ஞநாராயணரே! வேங்கடமகி! எங்கே உம் தந்தை கோவிந்த தீக்ஷிதர் இன்னும் வரவில்லை? நீர்மட்டும் முன்னால் வந்திருக்கிறீர்?

வேங்கடமகி :—மஹாராஜாவே! அத்வைத வித்தியாசார்யர், தஞ்சை ஆஸ்தான மஹா மந்திரி, ஸங்கீத வித்தியாகுரு, எம் தந்தை இன்று உமக்கு ஒரு காணிக்கை கொண்டுவரப் போகிறார்.

ரகு :—ஆசாரியர் கோவிந்த தீக்ஷிதருக்கு நான் காணிக்கை கொடுக்க வேண்டியவனாயிருக்க, அவர் எனக்கு காணிக்கை கொடுப்பதா?

யக்ஞநாராயண தீக்ஷிதர் :—இது ஒரு அபூர்வ காணிக்கை; உமது பெயரையிட்டு "அச்யுத ரகுநாத மேளவீணை" யென்றொரு வீணையைத் தந்தை ஏற்படுத்தி யிருக்கிறார்.

வேங் :—இதோ புது வீணையுடன் தந்தை வந்துவிட்டார்.

ரகு :—குரோ! நமஸ்காரம்.

கோவிந்த தீக்ஷிதர் :—வைணிக சக்கிரவர்த்தி, இது உம் பெயரால் அங்கிதம் செய்யப்பட்ட புதிய வீணை. இதில் ஸர்வ மேளங்களிலிருந்தும் பெருகும் எல்லா ராகங்களையும் வாசிக்கலாம்.

ரகு :—ஜயந்தஸேனு ராகத்தை வாசிக்கமுடியுமோ?

கோவி :—அதென்ன ராகம்? உன் கல்பனையோ?

ரகு :—ஆம், குரோ.

கோவி :—வாசிக்கலாம்; நீரே வாசியும். எந்த மேளமோ இந்த ஜயந்தஸேனை? என்ன லக்ஷணம்?

ரகு :—பைரவி மேளம்; ஷாடவம்; ரிஷப வர்ஜம். நியாஸ க்ரஹாம்சங்கள் மத்யமத்தில்.

கோவி: —எடுப்பு, விதாரி, ராகவர்த்தனி, ஸ்தாயி, வர்த்தனி, நியாஸம்—இப்படி க்ரமமாய் இந்த ஜயந்தஸேனையை வர்ணிக்கலாமா?

ரகு :—நாமொரு சிறந்த ஸங்கீத நூலென்று எழுதினல் லோகோபகாரமாயிருக்குமா.

யக்ஞ :—அவசியம் எழுதவேண்டும்; அதற்கு 'ஸங்கீத ஸுதை' யென்று பெயரையும் நான் இப்பொழுதே கொடுத்துவிடுகிறேன்.

கோவி :—மஹாராஜாவே கவியாயிருக்கும்போது நான் எழுதுவானேன்? அதுபோகட்டும். இந்த ஜயந்தஸேனையைக் கொஞ்சம் வாசித்துக் காட்டும்.

ரகு :—ஆக்ஞை.

(ரகுநாதன் ஜயந்தஸேனையை சிறிது வாசிக்கிறான்.)

15.

(திருவாரூர்; மேல வடம்போக்கித் தெரு; முத்துஸ்வாமி தீக்ஷிதரின் கிருஹம்; ஒரு ஸங்கீத ரஸிகர் தீக்ஷிதர் அவர்களைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்; வீட்டிலுள்ள ஒருவரைக் கேட்கிறார்.)

ஸங்கீத ரஸிகர் :—எங்கே, தீக்ஷிதர் ஆத்தில் இல்லையோ?

வீட்டிலுள்ளவர் :—இன்று ஸரஸ்வதீ பூஜையல்லவா? கோவிலுக்குப் போய் ஸரஸ்வதீ தீர்த்தத்தில் ஸ்நானம் செய்துவிட்டு, கமலாம்பாள் ஆலயத்திலுள்ள ஸரஸ்வதீ ஸன்னிதியில் உட்கார்ந்து பாடப்போயிருக்கிறார்.

ரஸி :—சிஷ்யர்களெல்லாங்கூடப் போயிருக்கிறார்கள் போலிருக்கிறது?

வீட்டி :—சிஷ்யர்கள் மட்டுமல்ல; அனேகர் கோவிலில் கூடியிருப்பார்கள்.

ரஸி :—ஆனல் வேகமாய்ப் போகிறேன். இன்று புதிய கீர்த்தனம் ஏதாவது அரங்கேற்றப் போகிறாரோ என்னமோ?

வீட்டி :—ஆமாம்; வேகவாஹினியில், "வீணா புஸ்தகதாரிணீம்" என்ற கீர்த்தனம். அனேகமாய் கீர்த்தனங்களை வாய்பாட்டாய் அரங்கேற்றி விடுவார்; இன்று வீணையில் வாசித்தே அரங்கேற்றப்போகிறார்.

ரஸி :—இதோ ஓடுகிறேன்.

(வீணையிலும் வாய்ப்பாட்டிலும் வேகவாஹினியில் வீணாபுஸ்தகதாரிணீம் என்ற கீர்த்தனம் பாடப்படுகிறது.)

16.

(தஞ்சை மஹாராஷ்டிர மன்னர் சிவாஜியின் சயனக்கிருஹம்; சிவாஜி மஹாராஜனுக்கு உடம்பு அஸௌக்யமாயிருக்கிறது; வைத்தியரும், பல வித்துவான்களும் சூழ்ந்திருக்கின்றனர்.)

சிவாஜி :—வைத்தியரே! உடம்பெரிச்சல் அல்லவோ தாங்கவில்லை! இந்த சாமரங்களும், மயில் விசிறிகளும் நெருப்புக் காற்றை என் மேல் விழச்செய்கின்றன.

வைத்யர் :—சற்று நல்ல காற்றடித்தாலும் போதும், மஹாராஜாவிற்கு உடம்பெரிச்சல் தணியும். இன்றைக்கென்னமோ இவ்வளவு உஷ்ணமாயிருக்கிறது!

சிவாஜி:—வைத்தியரே! இங்கு ஸங்கீத வித்துவான்கள் இருக்கிறார்கள் போலிருக்கிறதே!

ஒருவர் :—இதோ நான் கிருஷ்ணய்யர் இருக்கிறேன்.

சிவாஜி :—வீணை கிருஷ்ணய்யரா?

ஒருவர் :—ஆம், மஹாராஜ!

சிவாஜி :—நல்ல ஸங்கீதமென்றால் என்னென்னமோ அத்புதங்களை யெல்லாம் செய்து

விடுமென்று ஸங்கீத வித்துவான்கள் பெருமை கொள்ளுகிறார்களே! நல்ல காற்று அடிக்கும்படி செய்ய இந்தச்சங்கீதத்திற்கு முடியாதோ?

கிருஷ்ணையர் :—முடியாமலென்ன!

சிவாஜி :—என்னமோ பக்கஸாரணியை மீட்டிக்கொள்ளாமற்கூட வாசிப்பீர் என்று பெயரெடுத்திருக்கிறீர். எங்கே, முடியுமானால் உம் வீணையைத் தொட்டு, என்மேல் குளிர்ந்த தென்றல் வீசும்படி, இசையை எழுப்பும் பார்க்கலாம்.

கிருஷ்ணய்யர் :—மஹாராஜ! இதையே நான் சிறிது நேரமாய் யோஜித்து 'ஸல்ல காலி' அதாவது 'மலயமாருதம்' என்று ஒரு ராகத்தை ஸ்ருஷ்டி செய்திருக்கிறேன். அதை அனுமதித்தால் வாசித்துத் தங்கள் உடலும் உள்ளமும் குளிர மலயமாருதம் வீச வைக்கிறேன்.

சிவாஜி :—தயக்கமென்ன, ஆகட்டும்.

(வீணை கிருஷ்ணய்யர் மலயமாருதம் வீணையிலும் வாய்ப்பாட்டிலுமாய் வாசிக்கிறார்.)

சிவாஜி :—ஆகா, என்ன ஆச்சர்யம்! ஸங்கீதம் செய்யும் விந்தைகள், நூல்களிலும் கதைகளிலுமே இருக்கின்றன என்று எண்ணியிருந்தேன். கிருஷ்ணய்யரே! இன்று ஸங்கீதத்தின் மஹிமையை நீர் நிரூபித்துவிட்டீர். ஆகா, என்ன தென்றல்! இனி உம்மை அனைவரும் 'ஸல்ல காலி கிருஷ்ணய்யர்' என்று கூப்பிடட்டும்!

17.

(சென்னை; ஒரு வெள்ளிக்கிழமை; இரு ரஸிகர்கள் பேசிக்கொண்டிருக்கின்றனர்.)

ஒருவர் :—இன்று ஸாயங்காலம் என்ன செய்யலாம்? ரஸமாய் பொழுதைப் போக்க வேண்டும்!

மற்றொருவர் :—ரஸமாய் பொழுதைப் போக்கவேண்டும் என்று தோன்றியபின் ஏன் யோசனை? வெள்ளிக் கிழமை! ஸாயங்கால வேளை! ரஸத்திற்கு என்ன குறைவு. தனத்தின் வீணையைக் கேட்டுவிட்டு வருவோம் வா.

(தனம் ரிகார்ட்.)



சிறுவர் பகுதி.

1. கலைக்கோட்டு முனிவர் கதை.

(S. ரங்கஸ்வாமி, M.A.,)

(கம்பராமாயணக் கதையைத் தழுவி எளியநடையில் எழுதியது.)

மனுகுலத்தில் வந்துதித்த அரசர்களில் உத்தானபாதன் ஒருவன். அவன் சத்தான குணமுடையோன்; தயவிற்குத் தருமசாலை போல்வான்; பகைவர்களால் எத்தாலும் வெல்லுவதற்கு அரியான். அம் மன்னனுக்கு உரோமபாதன் என்ற செல்வப் புதல்வன் பிறந்தான்.

அன்னவன் பாதுகாத்த அழகிய அங்கதேசத்தில், மின்னலோடு எழுகின்ற மேகம் இன்மையால் கொடிய பஞ்சத்துயர் நெடுங்காலம் பெருகியது. உரோமபாதனென்ற அவ்வேந்தன் நல்ல நூல் பயின்ற முனிவர்களை அழைத்து மாதானங்கள் வழங்கினான். அவ்வாறு வழங்கியும் வானோ மழை தானம் வழங்கவில்லை. ஆகவே, அரசன் பின்னும் முனிவர்களை அழைத்து "என் செய்வது?" என்று வினவினான். அதற்கு அவர் "கலைக்கோட்டு முனிவர் இவ்விடம் வரின் வான் பிலிற்றும்" என்றனர்.

அது கேட்ட அரசன் "கடலாடையுடுத்த பூமியில் வாழ்கின்ற மனிதரை விலங்கென மதிக்கும் கலைக்கோட்டுமுனிவரை இவ்விடம் கொணரும் வகையாவது?" என்று கவலையுடன் சிந்தித்தான். அப்பொழுது, சோதி பொருந்திய நெற்றியும், கறுத்து நீண்ட கண்களும், சிவந்த அதரமும், முத்து வரிசை போன்ற அழகிய பற்களுமுடைய சில விலைமாதர்கள் எழுந்து "யாம் ஏகி அவ் வருந்தவனைக் கொணர்வோம்" என்று அரசனை வணங்கினர்.

அவ்வாறு அவர் உரைத்த மொழி கேட்டு அரசன் மகிழ்ந்தான். அவர்களுக்கு அழகிய ஆபரணங்களும், பட்டுச் சேலைகளும், மற்றுமுள்ள செல்வங்களும் கொடுத்தருளினான். இளஞ் சந்திரனைப் பழிக்கும் நெற்றியும், மூங்கில் போன்ற தோள்களும், வாடிய இடையும், இருண்ட குழலும், மருண்ட விழியும், இலவம் பூப் போன்ற செவ்வாயும் படைத்த அப்பூங் கொடியார்களை அம்மன்னன் நோக்கி "நீங்கள் விரைந்து செல்லுங்கள்" என்று விடை

கொடுத்தனுப்பினான். அம் மங்கையரும் அரசனைத் தொழுதிறைஞ்சி இரதத்தின் மேலேறிச் சென்றார்.

பொன்னகை புனைந்த அவ் வனிதையார் தேரின்மீது பல யோசனை தூரஞ் சென்றார். குற்ற மில்லா நற்றவமுனி உறையுமிடம் ஓர் யோசனையளவு இருக்கையில், அவர் தமக்காகவே ஓர் பன்னசாலை அமைத்தார்; அங்கே, அருந்தவமுனிவர் போலவே தங்கினார்.

கலைக்கோட்டு முனிவரின் தந்தை ஆசிரமத்தில்லாத சமயம் பார்த்து, கருங்கண்ணியரான அவ்வேசையர் ஆங்கே சென்றனர். அம்முனிவரும், "இவரும் உலகத்தாரை விலங்கென மதிக்கும் மேலோர்" என நினைத்து அவர்களுக்குப் பல உபசாரங்கள் செய்தார்.

அவர் அவ்வேசையர்க்கு அருக்கியம் முதலியவற்றோடு ஆசனமும் கொடுத்தார். "இங்கே வீற்றிருக்க வேண்டும்" என்று அவர்களை நோக்கி இனிய வார்த்தைகள் கூறினார். அவ் விலைமகளிர் முனிவரை வணங்கி விடைபெற்று, பொருக்கென எழுந்து போய்த் தங்கள் பன்னசாலையுள் புகுந்தார்.

சில தினங்கள் தீர்ந்த பின் அத் திருந்திழையார் மீண்டும் முனிவரை யணுகி அவருக்கு மருந்தினும் இனிய வாழை, மா, பலா முதலிய கனிகளை அருந்துமாறு வேண்டிக் கொடுத்தனர்.

இவ்வாறு பல நாள் கழிந்த பின், அத் திருமடந்தையர் அம் மாதவனை யணுகி 'நீவிர் எம் உறைவிடம் சார்தல் வேண்டும்" என்று நயந்து வேண்டினர். அவர் வணங்கியவாறே முனிவரும் இணங்கி அவரோடு ஏகினார்.

அத் தையலார் தம் மனம்போலப் பிறர் மனத்தையும் மருளச்செய்யும் தன்மையுடையோர். "அம்மா! எங்கள் ஆசிரமம் இதோ! இதோ!" என்று சொல்லிக் கொண்டே அம் முனிவரை அவர்கள் அகன்ற வழியில் நெடுந் தூரம் அழைத்துச் சென்றனர்.

அம்முனிவரர் உரோமபாதனின் வளநகர் நோக்கி வரலும், மாமுகில் வானத்தில் எழுந்து பரவியது; பரமசிவனது கண்டத்திலுள்ள விஷம்போல் கருகியது. குளங்களும், நதிகளும் பல நாட்களாய் அடைந்த குறைகள் தீர, மழை சள, சள வென்று தாரை தாரையாய்ப் பெய்தது.

நதிகளிலும், குளங்களிலும் நீரில்லாக்குறை நீங்கவும், கரும்போடு செந்நெற்பயிர்களும் ஓங்கி வளரவும், கருமேகங்கள் ஆகாயத்தில் பரந்து இடைவிடாது மழை சொரிதலைக் கண்ட உரோமபாதன் உற்ற செய்தியை உணர்ந்தான்.

"காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களையும் வெறுத்து வென்ற கோமுனி, புகைபோல் கருத்த கூந்தலையுடைய வேசையர் சூழ்ச்சியால் இவண் அடைந்தனர் கொலோ!" என்று அரசன் எண்ணினான். உடனே அவன், மறைமுனிவர் யாவரோடும் தன் சேனை சூழ்தர, இரண்டு யோசனை சென்று அழகிய குழலியர் நடுவில் மாதவக் குன்று போல் விளங்கும் கலைக்கோட்டு முனிவரை எதிர்கொண்டு உபசரித்தான்.

"இனி யான் வாழ்ந்தனன்" என்றும் மகிழ்ச்சி பெற்ற சிந்தையனாய், அரசன் தன் கண்களில் களிப்பு நீர்பெருக, முனிவர் திருவடிகளில் வீழ்ந்தான். அரசனைக் கண்ட மாதரும் அவனைத் தொழ, "நீவிர் உமது சூழ்ச்சியால் எனது இடரைக் களைந்தீர்" என்று அவன் அவரைப் புகழ்ந்தான்.

இவ்வாறு அரசனும் முனிவரும் சந்தித்தலும், மாதரிழைத்த வஞ்சனையை முனிவர் உணர்ந்தனர். உணர்ந்ததும் அவரது சினம் பொங்கியது. பொங்கிய சினத்தைக் கண்டு விண்ணவரும் வெருவினர். தன் பிழையைப் பொறுத்தருளுமாறு அரசன் முனிவரை வேண்டினான். உடனே கரையெறியாத கடலைப் போல் முனிவர் சினமும் அடங்கியது.

அரசன் முனிவரைப் பன்முறை வணங்கி, மழையின்மையால் தன் நாட்டிற்கு நேர்ந்த தள்ளருந் துயரையும், அத்துயர் முனிவர் வரவால் நீங்கிய வரலாற்றையும் விரித்துச் சொன்னதும், மாதவரின் கோபம் போய் ஒளித்தது.

(396-ம் பக்கம் பார்க்க.)

பெண்டிர் பகுதி.

சர்க்கார் உத்தியோகமும், ஸ்திரீகளின் உரிமைகளும்.

(ருக்மிணி சங்கர நாராயணய்யர்.)

பல நூற்றாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த பாரசீக யுத்தத்திலே ஸெர்ஸீஸ் என்னும் படைத் தலைவன் "இக்காலத்திலே ஆண்மக்கள் பெண்மை யுற்றனர். பெண்டிரோ ஆண்மை பெற்றுச் சிறந்தனர்" என்றானும். இவ்வசனம் இன்று நம் நாட்டு நிலைமையில் முற்றிலும் பொருந்துவதாகின்றது.

இது என்ன விபரீதம்! இக்காலத்திற் சட்டங்களை விதிக்கும் ஆண்மக்கள் பெண்டிருக்கு உரிமைகளை அளிப்பதில்லை. தங்கள் கையிலேயே சர்வ அதிகாரங்களும் இருக்க வேண்டுமென்ற பேராசை கொண்டவர்களாயிருக்கிறார்கள். வேதம் "ஆண்மகனிற் பாதி பெண்" என்று முறையிடுகின்றது. உபநிடதங்களும் அப்படியே. அப்படியிருந்தும் ஸ்மிருதிகர்த்தாக்கள் அனைவரும் ஆண்களாயிருந்த காரணத்தால், இப்போது ஸ்திரீகள் தங்கள் சுதந்திரங்களுக்குப் பெரிதும் போராடவேண்டியிருக்கிறது. அவர்களுள் ஒருவரேனும் ஸ்திரீயாயிருப்பின் இவ்விதக் கஷ்டம் நேருமோ? ஆயினும் நாகரீகம் வளரவளர, ஸ்திரீகளுக்கு சுதந்திரம் இல்லை என்ற கட்டுப்பாடு தளர்ந்து வருகிறது. அவர்கள் அடிமைவாழ்க்கை மெல்ல மாறி சுயேச்சைப்படி வாழும் உரிமை பெறுவது சாத்தியமாகிறது. விவாக சம்பந்தமாகவும் சொத்துரிமை சம்பந்தமாகவும் பெண்டிருக்கிருந்த கஷ்டங்களை நிவர்த்திப்பதற்கு புதிய சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பதினான்கு வயதுக்குள்ளே பெண்களுக்கு விவாகம் செய்விக்கக்கூடாதென்ற நிபந்தனைச் சட்டமும் பிறந்திருக்கிறது.

'பெண்டிரும் மனுஷப்பிறவிதானே? அவர்களுக்கு வேலை செய்யும் திறமை யில்லையா, மூளையில்லையா? உற்சாகம் முதலியவற்றிலே தான் ஆண்களுக்குக் குறைந்தவர்களா? அப்படி யிருக்கையில் அவர்களுக்கு வாகுரிமை அளிப்பதற்கு என்ன தடை? ஆணுக்குப் பெண் 'சரி நிகர்சமானம்' என்பதை நிரூபிப்பதற்கு ஒரு மாகாணத்திலே ஆண்களோடு ஒப்ப ஒரு பெண்மணி மந்திரியாக இருந்து அதிகாரம் வகிக்கவில்லையா? ஆண்களோடு போட்டியிட வேண்டிய பொதுத்தொகுதிகளிலேகூட அவர்

களை எதிர்த்து நின்று வாக்காளர்களிற் பெரும்பான்மையோரால் சட்டசபையங்கத்தினர்களாக பெண்மணிகள் தேர்ந்தெடுக்கப்பெற வில்லையா? "ஏமிஜான்ஸன்" என்பாள் ஆண் மக்களை ஆகாயவிமானப் பந்தயத்திலும் தோற்கடிக்கவில்லையா? நமது திருவிதாங்கூர் ஸம்ஸ்தானத்திலே பெண்மணிகள் நீதிபதியாகவும் வைத்திய இலாகாத் தலைவராகவும் பதவி பெற்று விளங்குகிறார்களே! இப்படியிருக்க ஏன் சென்னைமாகாணம் முதலிய இடங்களிலும் பெண்டிரை "ஜில்லாமுனிசிப்"களாக நியமிக்கக்கூடாது? மாகாணச்சர்க்கார் பெண்டிரின் உரிமைகளைக் கவனியாததற்குக் காரணம் இந்தியசர்க்காரானது பெண்டிரின் உரிமைகளை பொருட்படுத்தாததேயாகும். அகில இந்தியா சர்க்கார் நியமிக்கும் உத்தியோகங்கள் பல— இந்தியன் சிவில்செர்விஸ், இந்தியன் போலீஸ் செர்விஸ், ஆடிட்செர்விஸ், இஞ்சினீயர் செர்விஸ், காட்டு இலாகா, மீன் இலாகா, இன்னும் எத்தனையோ உத்தியோக ஸ்தானங்களுக்கெல்லாம் ஆண்களே மனுப்போடலாம் என்று விதிதிருக்கிறார்கள். இந்த வேலைகளையெல்லாம் பெண்டிரும் செவ்வனே செய்யக்கூடும். இந்த அகில இந்திய உத்தியோகங்களுக்காக நடத்தும் பரீக்ஷைகளையெல்லாம் ஸ்திரீகளும் கொடுக்கலாம் என்று உடனே அனுமதிக்கப்படவேண்டியது அவசியம். அவ்விதம் செய்யாமல் இருப்பது அநியாயம்.

மேலும் ஸ்திரீகளை நியமிக்கலாம் என்று அனுமதித்துள்ள ஒரு சில உத்தியோக ஸ்தானங்களுக்கும் நியமிக்கப்படுவோர் மணமாகாதவர்களாகவோ, குழந்தைகள் முதலிய பந்தங்கள் இல்லாத விதவைகளாகவோ இருக்க வேண்டும் என்று விதிகள் கூறுகின்றன. வைத்திய இலாகாவிலும் தபால் இலாகாவிலும் இவ்விதிகளைக் காணலாம். என்ன கொடுமை! மணம் செய்துகொள்வதற்கும் குழந்தைகள் பெறுவதற்குமே ஸ்திரீகளாகிய நாங்கள் உயிர் வாழ்கிறோம். இவ்வித 'பந்தங்களை'ப் பெற வேண்டுமென்றே எத்தனை கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு தவம்செய்கிறோம். ஆண்களைமட்டும் இவ்விதப் 'பந்தங்கள்' பாதிக்க மாட்டாவோ? மனைவியை இழந்து சிறு குழந்தைகளாகிய பந்தங்களை யுடையவனுக்கு மட்டும் அது சர்க்கார் உத்தியோகம் செய்வதற்குத் தடையாக ஏற்படாதோ? அவனை உத்தியோகஞ் செய்ய லாயக்கற்றவன் என்று சர்க்கார் தள்ளிவிடுகிறார்களா? இல்லையே. பிள்ளைப்பெறுவது சிறு குழந்தையைப் போஷிப்பது இவற்றிற்குரிய காலங்களை விடுமுறை நாட்களாக அமைத்து "லீவ்" விதிகளை விதிப்பது கடினமல்லவே.

"ஆடவர்க்குப் போலவே பெண் மக்களுக்கும் சமவுரிமை அளிக்கவேண்டும்; அதுதான் தெய்வபக்திக்கு அடையாளம்" என்றெல்லாம் அநேக மேடைகளிலே "பேகம் அமீருதீன்" அவர்கள் பிரசங்கம் செய்து வருகிறார்கள். இன்னும் ஸ்திரீகளைக் கொடுமையாக அடிமைபோல் அடக்கி யாண்டு வந்தால் அது ஒரு பெரும் புரட்சியிலே முடியும். கழுத்தை இறுக்கியேனும் பணத்தை வசூல் செய்யும் கடன்காரர்களினின்றும் சாதுக்களைக் காப்பதற்கு கடன் நிவாரணச் சட்டங்கள் ஏற்பட்டுள்ளன. குடியானவனிடமிருந்து கிட்டிபோட்டு வசூலிக்கும் ஜாமீன்தார்களின் கொட்டத்தை அடக்குவதற்குப் புது சட்டங்கள் ஏற்படக்கூடிய நிலைமையும் வந்துவிட்டது. அதும்போல பெண்டிரும் மனம் கசந்து கல்லாகிப்போய் ஆண்களை வெறுக்கும் காலம் வருமுன்னே, அவர்கள் ஆண்களிடமிருந்து அரசாங்கத்தைக் கைப்பற்றி பழிக்குப் பழி வாங்கும் நிபந்தனைகளை ஆண்களுக்கு விதிக்கு முன்னே, ஆண்கள் தங்களுக்கு அதிகாரமிருக்கும் பொழுதே ஸ்திரீகளுக்கிருக்கும் சகல நிர்ப்பந்தங்களையும் நீக்க முன் வரவேண்டும்.

சிற்சில வேலைகளிலே சில சிறு அம்சங்களிலே ஸ்திரீகளை அனுமதித்து விதிகள் விதித்துள்ளார்கள். உதாரணமாக, மாகாணங்களிலே ஸ்திரீகளை 'டைபிஸ்ட்'களாக நியமிக்கலாம் என்று அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் அதிலும் ஒரு நிபந்தனை, அவள் மணமாகாதவளாகவோ, பந்தங்களில்லாத விதவையாகவோ இருக்கவேண்டுமென்று. இதுபோலவே இந்திய இஞ்சினீயர் உத்தியோகத்திற்கு ஏற்படுத்தும் பரீக்ஷைகளுக்கு ஆணாய்ப் பிறந்தால் யாரும் மனுப்போடலாம்; பெண்ணாய்ப் பிறந்தால் சீமையிலுள்ள இந்தியாக் காரியதரிசியின்

விசேஷ அனுமதிவேண்டுமாம். சர்வே இலாகா, நிலக்கரி இலாகா, தபால் தந்தி 'வயர்லெஸ்' இலாகாக்கள், பாங்கிகள் முதலியவற்றிலுள்ள உத்தியோகங்களுக்கு ஆண்மக்களையே நியமிக்கலாம். 'செகரிடேரியட்' வேலையில் மட்டும் ஸ்திரீகளையும் நியமிக்கலாம் என்று 1931 வருஷத்தில் அனுமதித்துள்ளார்கள். இது போதாது. எல்லாத் துறைக்களிலும் ஆண்மக்களைப்போலவே, பெண்டிரும் யாதொரு தடையும் விசேஷ நிபந்தனையுமின்றி நியமிக்கப்படவேண்டும். பொது ஜன ஆட்சி என்ற கூக்குரல் எழுகின்ற இந்நாளில் பொது ஜனங்களுள் மாபெரும் பகுதியினரான பெண் மக்களுக்கு உரிமை கொடுக்காதிருப்பது அடுக்குமோ?

(393-ம் பக்கத் தொடர்ச்சி.)

முனிவர் அரசனுக்கு அருள் சுரந்து ஆசி பல கூறினர். தவமுனிவர் குழாங்கள் புடைசூழ அரசன் அம்முனிபுங்கவரை தேரின்மேலேற்றித் தன் நாட்டிற்குச் சென்றான்.

வளநகரை அலங்கரித்த நகரமாந்தர் எதிர் மிடைந்திட, அரசன் முனிவரோடு அரண்மனையில் பொன்மாளிகைக்குள் புக்கு, ஆங்கு ஒரு சிங்காதனத்தில் அவரை இருத்தினன்.

அருக்கியம் முதலிய கடன்களை யாற்றி "யான் இனி உரைக்க உள்ளது யாது?" என்று இன்மொழிகூறி, அச் சாந்த முனிவருக்கு, தன் திருமகளான சாந்தையை வேத விதிப்படி திருமணம் செய்வித்தான்.

அது முதல் அங்கதேசத்தில் வறுமை நோய் தணிந்தது. வான் வழங்கவே பஞ்சத்துயர் ஒழிந்தது. சாந்தை போற்ற, அம் முனிவர் அத்தேசத்தில் நெடுங் காலம் இனிதே தங்கினர்.

அவள் எங்கே?

(வரகூர் வேணுகோபாலன்.)

இராமருக்குப் பட்டாபிஷேகம். அயோத்தியாநகரம் முழுவதும் குதூஹலப்படுகிறது. எங்கு பார்த்தாலும் ஜனங்களின் கூட்டம் நிறைந்திருக்கிறது. சங்கம் பேரி முரசம் முதலான வாத்தியங்கள் ஏகோபித்து முழங்குகின்றன. 'இராமர் பட்டம் சூட்டிக்கொள்ளப் போகிறார்' என்ற சந்தோஷத்தால் ஜனங்கள் ஆரவாரத்துடன் நகரை அலங்கரித்துக்கொண்டும் தாங்கள் ஒருவருக்கொருவர் அலங்காரம் செய்து கொண்டும் இருக்கின்றனர். அரண்மனையில் ராஜஸ்திரீகள் அலங்கரித்துக் கொண்டும் அங்குமிங்கும் நடந்துகொண்டும், ஒருவரையொருவர் கூவிக்குலாவிக்கொண்டும் சந்தோஷக் கடலில் மூழ்கி உத்ஸாஹத்துடன் இருக்கின்றனர். இன்று இராமருக்குப் பட்டாபிஷேக மென்பதில் சந்தோஷபூஷிதர்களான பரத சத்துருக்கனர் இராமரையும் இலக்ஷ்மணனையும் சூழ்ந்து நின்று மகிழ்ச்சியுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கின்றனர். பதினான்கு வருஷம் காட்டில் வசித்துவிட்டு வந்து இன்று பட்டம் கட்டிக் கொள்ளப்போகிறான் தனது புத்திரன் என்று கௌஸல்யை அளவிலாத சந்தோஷம் கொண்டாள். லக்ஷ்மணனைக் கண்ணுற் கண்டோமேயென்று சுமித்திரை அடங்கொணு உவகை கொண்டாள். பட்டம் கட்டிக்கொள்ளாவிட்டாலும், பரதன் நந்திக்கிராமத்தை விட்டு அயோத்திக்கு வந்து சேர்ந்தானே யென்று ஒரு பக்கம் சந்தோஷமும், தனக்கு பரதன் வாயால் வைதல் இல்லாதபடிக்கு ராமன் காட்டைவிட்டு நாட்டுக்கு வந்து பட்டம் கட்டிக் கொள்ளப் போகிறானே யென்று ஒரு பக்கம் சந்தோஷமும் கொண்டாள் கைகேயி. கைகேயியே சந்தோஷப்பட்டாளென்றால் கூனியின் உவகைக்குக் கேட்பானேன். தன் கூனலை நிமிர்த்துவிடுவானே பரதன் என்ற பயமில்லாதபடி இராமன் நாட்டுக்கு வந்து விட்டானென்று கூனி சந்தோஷப்பட்டதற்கு அளவே யில்லை. இராமன் பட்டம் கட்டிக்கொள்வதில் கூனிக்கே நிரம்ப சந்தோஷமென்றால், அயோத்தியில் யார்தான் சந்தோஷப்படாதவர்கள்?

பதினான்கு வருஷம் பிரிந்திருந்த தம்பியரை அன்றையதினமே கண்டமையால் இராமரும் இலக்ஷ்மணரும் பரத சத்துருக்னர்களோடு சந்தோஷத்துடன் சல்லாபித்துக் கொண்டிருந்தனர். இராமரிடத்துள்ள மிகுந்த அன்பால் பரத சத்ருக்கனர்கள் அவருடன் அதிக சம்பாஷணை செய்து கொண்டிருந்தனர். இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது இலக்ஷ்மணன் சிறிது வேறு எங்கோ ஞாபகமாயிருப்பதான முகக்குறியுடன் இருந்தார். இதை இராமர் குறிப்பால் அறிந்தும் மௌனமாகவே இருந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் இலக்ஷ்மணன் இராமர் அறியாதவண்ணம் சற்று பின்புறமாகவே நடந்து ஒரு புறமாகத் தலையை நீட்டி மறைவாக ஓர் அறையை எட்டிப்பார்த்தான். அந்த அறையில் ராஜஸ்திரீகளின் கூட்டம் தான் காணப்பட்டது. அவர்கள் அலங்காரத்துடனும் சந்தோஷ ஆரவாரத்துடனும் விளங்கினர். அவர்கள் கூட்டத்தின் நடுவில் ஸர்வாலங்கார பூஷிதையாய் மாணிக்கங்களுக்கு நடுவே மரகதம் போன்று சீதாதேவியார் விளங்கினார். சீதாதேவியைப் பார்ப்பதற்காக ஒவ்வொரு இளம் பெண்ணும் கூட்டத்தில் நெருங்கிக்கொண்டும் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டும் நின்றுகொண்டிருந்தாள். சீதையின் அத்தியந்த தோழிகள் தேவியின் பக்கத்திருந்து பட்ட மஹிஷிக்கான அலங்காரம் செய்துகொண்டிருந்தனர். சீதாதேவியின் முன்பாக மாண்டவி, ச்ருதகீர்த்தி என்ற இரு ராஜஸ்திரீகள் முகவிலாஸத்துடன் நின்று கொண்டிருந்தனர். மற்றும் பல ராஜஸ்திரீகள் பக்கத்தில் சூழ்ந்து நின்றனர். எல்லோரும் பட்டாபிஷேக நாளை முன்னிட்டும் இராமர் சீதை இலக்குவன் இவர்கள் நாட்டிற்கு வந்து சேர்ந்தது பற்றியும் சந்தோஷத்துடன் விளங்கினர். ஆனால், சீதையின் முகம் மட்டிலும் சற்று குறுகிய பார்வையும், ஆழ்ந்த யோஜனையுடனும் சுற்றிலும் பார்த்தவண்ணமாக இருந்தது. தனக்கு முன் நின்ற இரண்டு ராஜ கன்னிகைகளையும் நோக்கி கையால் ஜாடை செய்து "அவள் எங்கே?" என்றாள் சீதை; இருவரும்

மௌனம் சாதித்தனர். சீதையின் முகம் சிறிது கடுகடுப்பாக இருந்தது. இக்காட்சியையே இலக்ஷ்மணன் எட்டிப்பார்த்தான். மீண்டும் சீதை சற்று கோபமாக அவர்களை நோக்கி "பாருங்களேன், அவள் கவுரவத்தை! அவளின் உயர்வு எங்கே? காட்டில் திரிந்துவந்த என் கவுரவம் எங்கே? அவளையல்லவா, நான் வந்தவுடன் போய்ப் பார்க்கவேண்டும். அவள் கணவனில்லாமற்போனால் நாங்கள் காட்டினின்று திரும்பி வரமுடியுமா? அதுதான் அவள் எண்ணியிருக்கிறாள்!" என்று கூறிவிட்டு கடுத்த முகத்துடன் இராமர் இருக்குமிடம் நோக்கி வரலானாள். இதைக் கேட்ட இலக்ஷ்மணன் தன் காதுகளை இரு கைகளாலும் பொத்திக் கொண்டான். "ஹா, அந்தச் சண்டாளியால் என் மாதாவான சீதாபிராட்டியாருக்கு என் மீதுகூட குற்றம் தோன்றும். இன்னும் பிராட்டியாரை அவள் தரிசிக்கவில்லையா? என்ன கர்வம்? நானும் இதைக் கவனிக்காமல் இருந்துவிட்டேனே! பிராட்டியாரின் மனதிற்கு வருத்தமுண்டு பண்ணுகிற அவள் எனக்கும் அப்பிரீதியானவளே. இதோ அவளை அவமானப்படுத்துகிறேன். இதனால்தான் நான் வந்ததுமுதல் அவள் என் கண்ணிற் படவில்லை" என்று கூறிவிட்டு விரைவாக அந்தப்புரம் நோக்கி மறைவாக நடந்து சென்றான். இலக்ஷ்மணனை முன்பே கவனித்த இராமர் அவன் மறைந்து எங்கேயோ கோபமாகச் செல்வதை உணர்ந்தார். சீதையும் இலக்ஷ்மணன் மறைவாகச் செல்வதைக் கண்டாள். உடனே இராமர் சீதையைக் கூட்டிக்கொண்டு இலக்ஷ்மணன் எங்கு செல்கிறானோ அவ்விடம் தொடர்ந்து அவனறியாமல் மறைந்து சென்று கொண்டிருந்தார்.

இலக்ஷ்மணன் மிக்க கோபத்தோடு தனது அந்தப்புரம் நோக்கிச் நேராகச் சென்றான். சுற்றிலும் பார்த்தான்; அங்கு ஒருவரும் காணப்படவில்லை. ஒரு மூலையில் இரண்டு சேடியர்கள் உட்கார்ந்திருந்தனர். கோபத்துடன் நிற்கும் இலக்ஷ்மணனைக் கண்டவுடன் அச் சேடியர்கள் பயந்து நடுநடுங்கி பின் புறமாக ஓட ஆரம்பித்தனர். இலக்ஷ்மணன் அவர்களை வழி மறித்து நின்று "பேய்களே, என்ன ஓட்டம்? அவள் எங்கே? சீக்கிரம் சொல்லுங்கள்" என்று சீறினான். சேடியர்கள் ஒன்றுந்தோன்றாது சற்று பிரமித்து நின்று 'நாங்கள் காணவில்லை பிரபோ!' என்றனர். இலக்ஷ்மணன் கோபம் அதிகமாயிற்று. உடனே அவ்விடம் விட்டு புறப்பட்டு தனது ஏகாந்த க்ருஹம் நோக்கிச் சென்றான். போகும்பொழுதே, பூமி அதிர்ந்தது. "இவன் முன்கோபியாயிற்றே; எங்கு போய் என்ன செய்யப் போகிறானோ?" என்று ராமரும் சீதையும் கவலையுடன் அவனைத் தொடர்ந்து மறைவாகச் சென்று கொண்டிருந்தனர். ஏகாந்த அறையை அடைந்த இலக்ஷ்மணன் வாயிற்படியில் சட்டென்று நின்றான். அவ்வறையின் நடுவில் தவக்கோலந் தாங்கி இளைத்த உடம்புடன் ஓர் யௌவனப் பெண் அமைதியாக நித்திரை செய்துகொண்டிருந்தாள். இக் கோலத்தைக் கண்ட இலக்குவன் மனம் கொதித்தது; தனக்கு 'இப்பெண் மனைவியாயிற்றே என்று எண்ணவேயில்லை. சூர்ப்பனகை, அயோமுகி முதலானவர்களிடம் முன் தான் கொண்ட கோபத்தைக் காட்டிலும் இப்பொழுது அதிக கோபம் கொண்டான் நித்திரை செய்யும் பெண்மீது. அப்பெண்ணை எரித்து விடுவான் போற் பார்த்தான். இக்காட்சியை இராமர் சீதையை நன்றாகக் கவனிக்கும்படி கூறி புன்முறுவல் செய்தார். சீதையின் மனம் "படீர் படீர்" என்று என்று அடித்துக் கொண்டது.

இலக்குவன் தனது முன்காலை பெண்ணின் பக்கத்தில் ஊன்றி, "அடி ஊர்மிளா!" என்று கூறி ஆவேசம் கொண்டவன்போல் பல்லை நெறுநெறெனக் கடித்தான். 'அமைதியோடு பற்பல அற்புதக் காட்சிகளை அகக் கண்ணால் கண்டுகளிக்கும் யோகநித்திரை செய்பவர் போன்று' ஊர்மிளை நித்திரை செய்துகொண்டிருந்தனள். இலக்ஷ்மணன் கூறிய வாசகம் ஒரு சிறிதும் அப்பெண்ணின் காதில் விழவில்லை! உடனே லக்ஷ்மணன் மிக்க கோபத்துடன் தன் கைகளைப் பிசைந்து கொண்டே தூங்குகின்ற ஊர்மிளாவின் முதுகில் தனது கால் நுனியால் வேகமாக எற்றி உதைத்தான். ஊர்மிளாவானவள் "அடே பாவனே! என்னையும் சீதையென்று நினைத்தாய்? சீ! விலகிப்போ" என்று சொல்லிக் கொண்டே அவ்வறையின் சுவரில் மோதப்பட்டு, மூர்ச்சையாய் கீழே விழுந்

தாள். இதைக் கண்ட சீதை பயந்து "ஹா" என்று கூற, உடன் ராமர் அவள் வாயை மூடி, "பேசாமலிரு, மேலும் நடப்பதைப் பார்" என்று கூறி கவனித்துக்கொண்டிருந்தனர். எதிர்பாராதபடி ஊர்மிளாவின் வாசகத்தைக் கேட்ட இலக்ஷ்மணன் அப்படியே பிரமித்து நின்றான். "ஆ! இவளுக்கு இவ்விஷயம் எப்படித் தெரியும்! இவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது போலும்! இல்லாவிட்டால் இந்த உதைக்குமா உறக்கம் தெளியாது? ஐயோ! ஊர்மிளா! உன் கதி இவ்விதமாக வேண்டுமா? உன் நிலை பிராட்டியாருக்குத் தெரிந்தால் இவ்விதம் தவறாக நினைப்பாரா?" என்று கண்ணீர் விட்டழுதான்.

சிறிது நேரத்திற்கெல்லாம், புதிதாக உயிர் பெற்றெழுந்தவளைப்போல ஊர்மிளை, எழுந்தாள்; எதிரில் கண்ணீர் விட்டு நிற்கும் தன் கணவனான இலக்ஷ்மணனைக் கண்டாள்; உடனே விரைவாக அவன் முன்பு ஓடி, "நாதா! எப்பொழுது நாட்டிற்கு வந்தீர்கள். அண்ணா, பிராட்டியார் யாவரும் க்ஷேமமாய் வந்து சேர்ந்தார்களா?" என்றனள். இதைக் கேட்ட இலக்ஷ்மணர் மீண்டும் கோபம் கொண்டு, "அடீ ஊர்மிளா! நீ, இங்குதானிருக்கிறாயா? நாங்கள் காட்டினின்றும் நேற்றையதினம் இங்கு வந்து சேர்ந்தது உனக்குத் தெரியாதா? அடீ, பாசாங்கு செய்கிறாயா? எனது ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்திக்கு இன்று பட்டாபிஷேகமென்று உலக முழுவதும் குதூஹலப்படுகிறது. நீ பிராட்டியாரைப் பார்க்கக்கூட இல்லாமல் இங்கு தூங்குகின்றனையே!"

ஊர்மிளா :—(நடுங்கிக்கொண்டு இலக்குவன் பாதத்தில் வணங்கி) நாதா! தாங்கள் எல்லோரும் காட்டினின்றும் வந்தது எனக்கு உண்மையில் தெரியாது; தெரிவதற்கும் நியாயமில்லையே. தங்கள் சொற்படி நான் இங்கேயே இருக்கிறேன். வேறு விவரம் ஒன்றும் எனக்குத் தெரியாதே! இப்பொழுதுதான் உறங்கி விழித்தேன்.

இலக்ஷ்மணன் :—ஹா! என்ன சொன்னாய்? அடீ, உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? நான் உன்னை இங்கே இருக்கச் சொன்னேனா? எப்பொழுது சொன்னேன்?

ஊர்மிளை :—நாதா! தங்களுக்கு ஞாபகமில்லையா? தாங்கள் காட்டிற்குப் போகும் பொழுது நான் உடன் வருகின்றேனென்று சொன்னேனல்லவா?

இலக்ஷ :—ஆமாம்; அதற்கு........

ஊர் :—அதற்குத் தாங்கள் "நீ இங்கேயே இரு, சீக்கிரம் வந்து விடுகிறேன்" என்று சொன்னீர்களல்லவா? அதன்படி அன்று முதல் தங்களை எதிர்பார்த்தபடி இங்கேயே இருக்கிறேன். அன்று கண்ணுறங்கின நான் இன்று விழித்ததும் தங்களையே பார்த்தேன்.

இலக்குவன் :—(பிரமித்து) என்ன! பதினான்கு வருஷமாகவா, இங்கு தூங்கினாய். இது எப்படி சாத்தியமாகும்?

ஊர்:—நாதா, தாங்கள் காட்டில் பதினான்கு வருஷமாக தூங்காமலிருந்தீர்களே! அது எப்படி சாத்தியமாகும்? நான் பதினான்கு வருஷம் தூங்காமற்போனால் நீங்கள் பதினான்கு வருஷம் விழித்திருக்கமுடியுமா? இந்திரஜித்தைத் தான் வதை செய்யமுடியுமா? என் சக்தி கொண்டல்லவா தாங்கள் காரியத்தை சாதித்துக்கொண்டீர்கள்.

ஊர்மிளையின் வாசகத்தைக் கேட்ட இலக்ஷ்மணன் அப்படியே திகைத்து நின்றான். ஒன்றும் பதில் சொல்லத் தெரியாமல், தலை குனிந்தான்; அவனது கோபதாபங்கள் எங்கேயோ மறைந்து போயின. தன்னைக் கர்வபங்கம் செய்யவேண்டி ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்தியே இவ்வாறு செய்துள்ளார் என்று எண்ணினான். கற்புக்கணியான ஊர்மிளையினிடத்துக் கருணையுடன் அவளது இரு காத்தையும் பிடித்து கண்களில் ஒற்றிக் கொண்டான்; மறைந்து நின்று இக்காட்சியைக் கண்ட இராமர் புன்சிரிப்புடன் "சீதே, ஊர்மிளையினது கற்பின் வலிமை எத்தகையதென்று அறிந்தாயா?" என்றார். சீதை தலை குனிந்து, "நாதா, நான் தவறாக எண்ணியது என் பேதைமையே; குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்" என்றாள்.

இவர்கள் சம்பாஷணையைக் கேட்ட இலக்ஷ்மணன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து, இராமரும் சீதையும் நிற்பதைக் கண்டு ஒன்றுங்

தோன்றாது தலைகுனிந்து நின்றான். இராமர் அவனருகிற் சென்று புன்முறுவலுடன் ''லக்ஷ்மணா! இந்திரஜித்தைச் ஜெயித்தது யாருடைய வலிமை கொண்டு என்று தெரிந்ததா?'' என்றார். இலக்ஷ்மணன் தலை குனிந்து கைகுவித்து ''அண்ணா! குற்றத்தை மன்னித்தருளுக'' என்றான்.

ஊர்மிளா மூவரையும் நமஸ்கரித்து புகழோங்கப் பணிந்து நின்றாள்.

(448-ம் பக்கத் தொடர்ச்சி.)

கருவைக்காத் தேங்குங் கலக்கத்துக்கேது
குருவைக்காத் தந்தக்குருவின்—திருவருளால்
ஓர்ந்து பிரிவை யுணர்ந்திறகத் தன்னைத்தான்
சேர்ந்து கிடக்கை சிறப்பு

என்னும் இரண்டு வெண்பாக்களிலும் உள்ள மிருத்யுத்திறனைச் சுருங்க ஒரு சுலோகத்திலே அமைத்துள்ளார் இம் மொழிபெயர்ப்பாளர். அந்த சுலோகத்தின் பொருள் வருமாறு:—பரமப்பிரியமான அதிசுக ரூபமான தன் சொரூபத்தினின்று நழுவுவது எப்படி மரணமாமோ, அதே மாதிரி உயிர் தேசிகனருளால் தன் சொரூபத்தில் நிலைபெறுதல் ஜனனமாகும்.

இங்கு இம்மொழிபெயர்ப்பைப் பற்றி ஒரு வார்த்தை கூறுவது மிகையாகாது. வடமொழிச் சுலோகங்களின் பதப்பொருளை இது ஒருவாறு விளக்க உதவினாலும் 'குருவாசகக் கோவை' என்னும் நூலோடு இதனை ஒப்பிடுவதற்குரிய சொல்-நயம் பொருள்-நயம் ஒன்றும் இதிலே காணப்படவில்லை. தவிரவும் மொழிபெயர்ப்பிலே சில பிழைகளும் இதிலே காணப்படுகின்றன. உதாரணமாக, மேலே கண்ட சுலோக மொழிபெயர்ப்பிலே சுலோகத்திலே 'ஸ்திரம் ஜனம' என்னும் இறுதிச் சொற்களில் 'ஸ்திரம்' என்பதன் பொருள் விடுபட்டிருக்கிறது.

ஒரு வெண்பா இரண்டு சுலோகங்களாக விரிக்கப்பட்டதற்கு உதாரணம்:

இலவுகாத் திட்டகிளி யென்றே புலனும்
உலகுபொரு ளாக்கத் துழல்வாய்—உலகு
புலப்படலான் மட்டும் பொருளேற் பொருளாம்
புலப்படலாற் கானற் புனல்

என்பது இவ்வாறு விரிந்துள்ளது:—

''உலகம் உண்மை என்பது எண்ணி இலவம்பழம் புசிக்க எண்ணின கிளிபோல் சுகம் பெறாமல் ஏமாந்த மனிதா! உலகம் உண்மை என்று நீ எண்ணுவதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது. 'புலப்படுகிறது' என்பதால் மாத்திரம் உலகம் உண்மையென்று எண்ணினால், கானல் நீரையும் உண்மையென்று நிச்சயம் செய்; இரண்டுக்கும் பேதம் என்ன இருக்கிறது?''

இவ்வாறு 'குருவாசகக் கோவை'யினின்றும் சில சாரமான பாடல்களைப் பொறுக்கி எடுத்து அவற்றிலே பொதிந்துள்ள தத்துவங்களை தமிழ் அறியாதோரும் அறிந்து கொள்வதற்கு எளிய நடையிலே, சரளமும் காம்பீரியமும் பொருந்திய ஆர்யா விருத்தத்திலே அமைத்துத்தந்த ஸ்ரீசர்மா அவர்களுக்கு வடமொழியாளரும் பிற தாய்பாஷையுடையவர்களாயினும் வடமொழியைக் கற்றறிந்த மக்களும் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள். சிற்சில இடங்களிலே மூலநூலிலுள்ள அழகினை வடமொழியிலே காண இயலாவிடினும், வேறு சில இடங்களிலே வடமொழி மூதனூல்களை நினைப்பூட்டும் பதப்பிரயோகங்கள் அமைந்திருப்பது வடமொழி விற்பன்னர்கள் விசேஷ மகிழ்ச்சி பெற ஹேதுவாகின்றது.

அகஸ்தியதாஸன்.



கவிதா விமர்சம்.

கவியமுதம்.

(வே. திருப்பதி நாயுடு, இடிகரை.)

கவி என்பதற்கு செய்யுள் பாசுரம் என்று அர்த்தமாகும். கவியானது தாங்கள் குறித்த விரிவான பொருளை சுருக்கி யாப்பிலக்கணத்திற்குப் பொருந்த வெண்பா கலிப்பா கலித்துறை விருத்தம் முதலியவற்றில் யாதாவது ஒன்றில் அமைத்து பாடுவதேயாகும். பண்டைநாள் தொடங்கி அங்ஙனம் பாடுவோர்களை கவிகள் மஹாகவிகள் கவிராயர் கவிச்சக்கரவர்த்திகள் தெய்வப் புலவர் பாவலர் நாவலர் என பல பிருதுகளை மகாராஜாக்களும் மதத் தலைவர்களும், கல்விச் சங்கத்தவர்களும் அவர்களுக்கு வழங்கிவரலாயினர். இங்ஙனம் தமிழ் மொழியில் கவிபாடுவோர்களை ஆசுகவி மதுரகவி சித்திரகவி விஸ்தாரகவி எனச் சொல்வது மரபு. இந்நால்வகைத் திறனும் ஒருங்கே பெற்றவர்கட்கு நாலுகவிப் பெருமாள் என்றும் நாற்கவிராசநம்பி என்றும் பிருது கொடுப்பது பிரசித்தம். வடமொழியில் 'கவிதா, வனிதா' என ஒரு பழமொழி வழங்கிவருதல் காண்கிறோம். அதாவது, கவிதாலக்ஷணமும் வனிதா லக்ஷணமும் ஒரே தன்மை வாய்ந்தது.

வனிதா லக்ஷணமாவது மங்கையர் தங்கள் ரூபலாவண்யத்தாலும் நடை உடை பாவனைகளாலும் பேச்சின் இனிமையாலும் புருடர்களை தம் வழிப்படுத்துதல். அங்ஙனமே கவிதா லக்ஷணமும் யாப்பிலக்கணப்படி எதுகை மோனை அடி சீர் தளை ஒழுங்காக அமைத்து குறித்த பொருளுக்கு தக்க உபமான உபமேயங்களும் பொருந்த கேட்பதற்கு இனிமையாக அமையப்பாடுதலேயாம்.

கவி கஷ்டப்பட்டு அடி சீர் தளைகளையும் எதுகை மோனைகளையும் உபமான உபமேயங்களையும் பொருளையும் சரிப்படுத்திப் பாடுவானானால் அந்த கவி ரஸிக்காது. கவி நினைத்தவுடன் தானாக அமைந்து விடுமானால் அதுவே சுவை தரும். அதனாலேதான் "காரிகை கற்று கவி பாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பதே நன்று" என்றார். பெரியோர் செய்யுள் பற்றி நன்னூலில் பவணந்தியார், 'பிருகிருதி சிருஷ்டியை சதுர்முகன் எப்படி சிருஷ்டிக்கிறானோ அதேமாதிரி கவிதா சிருஷ்டியையும் கவிகள் சிருஷ்டிக்கிறார்கள்' என்ற கருத்தையுள்ளிட்டு, "பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற் பல சொல்லாற் பொருட்கிடனாக உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வன செய்

யுள்'' என்று கூறியுள்ளார். கவியின் லக்ஷணம் இன்னபடி இருக்க வேண்டுமென்பதை அறப்பளீச்சுர சதகத்தில்,

தெள்ளமிர்த தாரையென மதுரங்கதித்த
பைந்
தேன்மடை திறந்ததெனவே
செய்யமுத்தமிழினோடு நாற்கவிதை நாற்
பொருள்
தெரிந்துரை செய்திறமையுடனே
விள்ளரிய காவியத் துட்பொரு ளலங்காரம்
விரிவிலக்கண விகற்பம்
வேறுமுள தொன்னூல் வழக்குமுல கத்தி
யல்பு
மிக்கப் பிரபந்த வண்மை
உள்ளவெல்லா மறிந்தலையடங் குங்கடலை
ஒத்ததிக சபை கண்டபோ
தோங்கலை யொலிக்கின்ற கடல்போற் பிர
சங்கம
துரைப்பவன் கவிஞனாகும்

என்றும், கோவிந்த சதகத்தில் 'பாவுக் கழகு சொற்சுவை பொருட்சுவை' என்றும் 'சந்தமிலாக்கவிக்கு அந்தமில்லை' என்றும் 'அணியிலாக்கவிதை பணியிலாவனிதை' என்றும் பல பழமொழிகள் வழங்கி வருதல் காண்கிறோம். சில பெரியார் கவியை தேவாமிர்தத்துக்கு ஒப்பிட்டு கவியமிர்தம் என்றே பாடியுள்ளார். திருவரங்கக் கலம்பகத்தில் பிள்ளை பெருமாள் ஐயங்கார் 'மறைப்பாற்கடலை திருநாவின் மந்தரத்தாற் கடைந்து துறைப்பாற் படுத்தி தமிழாயிரத்தின் சுவையமிர்தம்' என்றும், கம்பநாடர் சடகோபரந்தாதியில் 'கவிப் பாவமுதம் இசைக்கறியோடு கண்ணனுண்ணக் குவிப்பான்' என்றும் சடகோபரைப் போற்றுதல் காணத்தக்கது. மேலும் கம்பநாடர் அயோத்திமா நகரின் அகழியை வர்ணிக்கும் பொழுது அதமகவி லக்ஷணத்தை

அன்னமாமதிலுக் காழிமால் வரையயலை
கடல் சூழ்ந்தனவகழி
பொன்விலைமகளிர் மனமெனக் கீழ்போய்ப்
புன் கவியெனத் தெளிவின்றிக்
கன்னிய ரல்குற்றடமெனயார்க்கும் படி
வருங் காப்பினதாகி
நன்னெறிவிலக்கும் பொறியென வெறியுங்
கராத்தது கவிலனுற்றது நாம்

என்றும்,

உத்தம கவிகளைப்பற்றி பம்பாநதி படலத்தில்,

எற் பொருநாகர் தமிருக்கை யீதெனக்
கிற்பமேதோர் காட்சியதெனினுங் கீழுறக்
கற்பகமனையவக்கவிஞர் நாட்டிய
சொற்பொருளாமெனத்தோன்றல் சான்
றது.

என்றும் சூர்ப்பணகைப் படத்தில்,

புவியினுக்கணியாயான்ற பொருடந்து புலத்
திற்றாகி
அவியகத்துறை கடாங்கியைந்திணை நெறி
யளாவிச்
சவியுறத்தெளிந்து தண்ணென்றொழுக்க
முந் தழுவிச் சான்றோர்
கவியெனக்கிடந்த கோதாவிரியினை வீரர்
கண்டார்

என்றும் வருணித்துள்ளார்.

ஸ்ரீராம தரிசனம்.

(மாயக்கூத்தன் எழுதியது.)

பரமபதத்திலே நித்தியசூரிகள் இமையா நாட்டம் படைத்தவர்களாயிருப்பது பரந்தாமனை சதா தரிசனம் செய்வதற்காகவே. சதா தரிசனத்தின் பயன் அவன் எப்பொழுது வரித்துக் கடாக்ஷித்தருளுகிறானோ அப்பொழுது அக்கடாக்ஷத்தைத் தப்பாமற் பெற்று இன்புறுவதேயாம். அவதாரத்திலேயும் "செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ" என்றும் "உன் தாமரைக் கண்களால் நோக்காய்" என்றும் அன்றோ கோபியரும் ஆழ்வார்களும் பிரார்த்திப்பது.

'ஆடவர்களுடைய திருஷ்டி சித்தங்களை அபகரிப்பவன்' என்னும் வால்மீகி முனிவரின் வாக்கை அனுசரித்து ஸ்ரீ ராமபிரானை காண்டற் கினியான் என்றும் மனதிற்கினியான் என்றும் ஆழ்வாராதிகள் பாசுரமிடுவர். யௌவராஜ்ய பட்டாபிஷேகத்திற்காக அயோத்திமாநகரிலே வீதிவலம் வரும்போது இராகவன் அப்புறம் சென்ற பின்பும் "அங்குள்ளாரில் எவராலும் அந்த நரோத்தமனைக் காணுவதினின்றும் மனதையோ கண்களையோ மீட்கமுடியவில்லை" என்றும் "எவன் ராமனைக் காணவில்லையோ, எவனை ராமன் காணவில்லையோ, அவன் யாவராலும் நிந்திக்கப்பட்டு தன் ஆத்மாவாலுமே இகழப்படுகிறான்" என்றும் வால்மீகி பகவான் அறுதியிடுகிறார். "கந்தருவராஜனைப் போன்ற வடிவினனாய் சந்திரவதனனாய் பிரியதர்சனனாய் மதயானைபோன்று நடந்து வரும் பிரானைக் கண்டோர் அனைவரும் வெயிலால் வாடிய மக்கள் கார்மேகத்தைக் கண்டாற் போன்று அகமகிழ்ந்தனர்" என்று ஸ்ரீ ராமன் வருந் தோற்றத்தை ஆதிகவி வருணித்துள்ளார்.

தான் இருக்கும்போதே தன் மகனுக்கு முடி சூட்டிக் கண்டருளவேண்டுமென்ற அவாவினை தசரத சக்கரவர்த்திக்கு எழுப்பியது இராமனது தோற்றப்பொலிவே. அரசன் இருக்கும்போதே அரச குமாரனுக்கு முடி சூட்டுவது மரபு அன்று; ஆதலின் இராமனுக்கு முடி சூட்டிக்காணும் காட்சியின்பமானது தசரதனுக்கு எப்படிக் கிடைக்கக்கூடும்? "தனக்கு வயதாயிற்று என்னும் வியாஜத்தையிட்டு இராமனுக்கு இளவரசுப்பட்டம் சூட்டியேனும் பரமானந்தமாகிய திருஷ்டி சுகத்தை அடையலாம் என்று தசரதனுக்கு தோன்றிற்று" என்பது வால்மீகிமுனிவர் கருத்து. பிரஜைகளும் ரகுவீரன் பட்டாபிஷிக்தனாய் வெண்குடை நீழலில் ஓர் யானை மேல் வருவதைக் காண வேண்டும் என்றல்லவா விரும்பினர்?

தன்னை சதாதரிசனம் செய்து கொண்டிருந்த கௌசல்யாதேவியை விட்டு ஸ்ரீ ராமன் பிரிந்ததும், கௌசல்யாதேவி "தாமரை வண்ணமாய் தாமரைப் பூநாறுவதாய் தாமரை மலர் போல் மிளிர்கின்ற கண்களையுடையதாய் விளங்கிய ராமனுடைய வதனத்தை எப்போது காண்பேன்" என்று பிரலாபிக்கிறாள். தசரதரும் தாம் இழந்த தரிசன சுகத்தையே நினைந்து "பதினைந்து ஆண்டுகள் ஆனதும், மீண்டும் அழகிய திருக் குண்டலங்களோடு விளங்கும் ராமன் முகத்தைக் காண்போர் மானுடர் அல்லர்; தேவர்களே ஆவர். தாமரை இதழ்போன்ற கண்களையும் அழகிய பற்களையும் அழகிய நாசியையுமுடைய இராமனது சந்திரவதனத்தைக் காண்போர் அதிர்ஷ்டசாலிகள்" என்றென்றே சோகிப்பர். அயோத்தியாவாசிகளும் "மேக நியாயனாய் ஸ்திரஸத்வனாய் திடவிரதனாய் உலகோர் சோகத்தை யெல்லாம் உடன் நீக்கும் இயல்பினனாய் விளங்கும் ஸ்ரீராமனை இனி எப்பொழுது காண்போம்? இராகவனைக் கண்டது மேசூரியன் உதயமாகும்போதே உலகெங்கும் இருள் நீங்குவது போல எங்கள் சோகங்கள் எல்லாம் பறந்தோடிப்போமே" என்று பரிதபித்தனர். அயோத்தியினின்று ஆள் வந்து அழைத்தபோது, "இராம பட்டாபிஷேகத்திற்குத்தான் தன்னை அவசரமாய் அழைத்து வருகிறார்கள் போலும்" என்று குதூகலித்த பரதன் இராமனை அயோத்தியிற் காணாது வருந்தி, எப்படியேனும் சித்திரகூடத்தினின்றும் அழைத்து வந்து அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து காணவேண்டு மென்று நிச்சயித்து அவனை நாடிச் சென்றான். செல்லும்

போது, "தாமரை யிதழ்போன்ற கண்களையுடைய தமையனது திருமுகமண்டலத்தை நான் கண்ணுறுதவரை என் மனம் சாந்தம் அடையாது" என்றும் "தாமரைக் கண்களையும் பேரொளியும் படைத்த தூய சந்திர வதனத்தை சதா கண்டுகொண்டிருக்கும் இலக்குவனே பாக்கியசாலி" என்றும் எண்ணிக் கொண்டே சென்றான்.

இத்தகைய ராம ஸௌந்தர்யம் எந்நிலையிலும் எந்த வேஷத்திலும் விசேஷித்து விளங்குவது என்பதையும் வால்மீகிமுனிவர் பல சந்தர்ப்பங்களைக் கொண்டு நிரூபித்துள்ளார்.

மீசை அரும்பாத சிறுவனாய் ஏகவஸ்திர தரனாய் விற்பிடித்து நின்ற ராமனை எதிர்த்த மாரீசன் பொன்மாலை பூண்டிருந்த அவனது வடிவழகையும் தாமரை யிதழ்போன்ற கண்ணழகையும் அவனுடைய தேசினால் தண்டகாரணியம் சோபித்திருப்பதையும் கண்டதும் அக் காட்சியின் இனிமையே அவனது மனதிலே பதிந்துவிட்டது. வெகு காலத்திற்குப் பிறகு இராவணன் அவனைத் தனக்கு உதவி புரியுமாறு வேண்டியபோது, அக்காட்சியை மறவாதவனாய் "அவ்விளம்பிராயத்திலே பால சந்திரன் உதயமானாற்போல் எனக்குக் காட்சி தந்தான் இராமன்" என்று தான் கண்டவாற்றை வருணிக்கிறான்.

சடைகள் தாங்கி மரவுரியுடுத்து முனிகுமாரனைப்போன்று தங்களைத் தேடி இராமன் வந்தபோது, தண்டகாரணியவாசிகள் அனைவரும் ஸ்ரீ ராமனது வடிவழகையும் ஸௌகுமார்யத்தையும் நன்றாய் அமைந்த வேஷத்தையும் கண்டு வியப்புற்றார்கள். ராஜகுமார வேஷத்தினும் முனிகுமார வேஷமே இராமனுக்குப் பொருந்தியது என்னலாம்படி இருந்தது. காண்டற்கரிய இவ்வடிவழகைக் காண வேண்டுமென்றே சரபங்க முனிவர் வானுலகு செல்லாது ராமனது வரவினை எதிர்பார்த்திருந்தார். சிங்க மார்பத்தையும் முழந்தாள் வரை தாழ்ந்த கைகளையும் தாமரை யிதழ்போன்ற கண்களையும் காண்டற்கினிய தோற்றத்தையும் சோதிமுகத்தையும் இந்தீவரம்போன்ற நிறத்தையும் கந்தர்ப்பன் போன்ற காந்தியையும் ஸுகுமார வடிவையும் உத்தம ராஜ லக்ஷணங்களையும் அவற்றோடு சேராச்சேர்த்தியான ஜடாமண்டலத்தையும் கண்டன்றோ சூர்ப்பணகை காமுற்றாள்" என்று அவள் கண்ட ஸ்ரீ ராம தர்சனத்தைத் தான் வருணித்ததோடு அமையாது, அந்த சூர்ப்பணகையே இராவணனிடம் முறையிடும்போதும் "நீண்ட கைகளையும் விசாலமான கண்களையும் உடையவனான அந்த தசரதபுத்திரன் மரவுரியையும் மான் தோலையும் உடுத்துக் கந்தர்ப்பனை யொத்த ரூபமுடையவனாக விளங்கினான். பொற் பூண் பூண்ட அவனது வில் இந்திரதனுப் போன்று விளங்கிற்று" என்று ராமதர்சனானந்தத்தை அவ்வரக்கி தன் வாயாலேயே வர்ணிப்பதாகக் கூறுகிறார்.

ஹனுமாரும் தாம் அனுபவித்த ராமதர்சனானந்தத்தை மனத்துட்கொண்டே, பிராட்டியை அசோகவனத்திலே கண்டு தேற்றும் போது, "அழகிய கண்களையும் பிம்பாதரத்தையும் அழகிய குண்டலங்களையும் உடையதாய் பூர்ணசந்திரன் உதித்தாற்போல விளங்கும் ராம முகத்தையும் அவன் பிரசரவண கிரியிலே இந்திரன்போல் வீற்றிருப்பதையும் காணப் போகிறீர்கள்" என்று சபதஞ்செய்து கொடுக்கிறார்.

தாங்கள் சிரகாலம் அனுபவித்துப் பின்பு விதிவசத்தால் இழந்த பேற்றினை வருணிக்கும் முறையிலும் ஸ்ரீ ராமதர்சனத்தால் உண்டாகும் பேரானந்தத்தை பல படியாக ஆதிகவி விவரித்துள்ளதை இங்குக் குறிப்பிடுதல் பொருந்தும்.

இராமன் வனம் சென்றபின் அயோத்தி மக்கள் "இராமனைக் காணவில்லையே" என்று வருந்தினார்கள். "இனி, தானம் யக்ஞம் விவாகம் முதலிய சுப ஸந்தர்ப்பங்களிலோ மஹா ஸமாஜங்களிலோ பரமதார்மிகனான இராமனைக் காணப்போகிறோமா?" என்று ஏங்கினார்கள். பிரிவாற்றாது பரிதபித்த கோசலை, "கலை நிரம்பிய முழுமதியின் சோபையோடு விளங்கும் உன் முகத்தைக் காணாது ஏழையேன் எப்படி உயிர் வாழ்வேன்?" என்று சோகித்து, இராமன் தன் முன் நிற்கவும் அவனைப் பிரிந்தவளாகக் கொண்டு, "சடை புனைந்து மரவுரி உடுத்தவனாய் கானகத்தினின்று நீ மீண்டும்

எழுந்தருளுவதைக் காணும் புண்ணிய காலம் இன்றே இப்பொழுதே வரக்கூடாதோ'' என்று தவிக்கிருள்.

இராமனைப் பிரிந்து எப்படி உயிர் வாழ்வது என்று ஏங்கி, துன்பக்கடலிலே ஆழ்ந்த தசரதரும் கைகேசியிடம் "என் மூத்த மகனைக் கண்டதுமே எனக்குப் பரமப் பிரீதியுண்டாகின்றது. என் இராமனைக் காணவிடின் என் சிந்தை, கலங்குகின்றது'' என்று கூறி, "அவனைக் காட்டிற்கு அனுப்பாதே'' என்று வேண்டுகிருர். பிறகு இராமன் காட்டிற்கு சென்றபோது, தூளி அடங்குமட்டும் அவனைப் பார்த்தவண்ணமே நிற்கிருர்; பிறகு மூர்ச்சையாய் விழுகிருர்; மூர்ச்சை தெளிந்தெழுந்ததும் "இராமனைப் பின் பற்றிச் சென்ற என் பார்வை இன்றும் மீளவில்லை. கௌசல்யே! உன்னைக் கூட என் கண்களாற் காண இயலவில்லை; மெல்லெனக் கையாலே என்னைத் தடவுவாய்'' என்கிருர். "சோகம் நீங்குகின்ற அந்த நல்லவேளை இப்பொழுதே வரக்கூடாதா? மனைவியோடும் தம்பியோடும் இராகவன் மீண்டும் வருவதை நான் காணமாட்டேனு?'' என்று ஏங்குகிருர். அந்த ஏக்கத்தாலேயே அவர் தம் உயிரையும் துறக்கிருர்.

ஸ்ரீ ராமதர்சனத்தால் உண்டாம் பேரின்பத்தையும் அதனை இழப்பதால் உண்டாம் பெருந்துயரத்தையும் மீண்டும் இராமதர்சனத்தைப் பெறலாமென்ற ஆசையினலேயே பிராட்டி கோசலை பரதன் முதலானேர் அரிதில் உயிர் தாங்கினர் என்பதையும் விளக்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டது ஆதிகவி பாடிய இராமாயணம்.

பகவானையும் பெரியோர்களையும் தரிசிப்பதற்கும் இதர அழகியார்களைத் தரிசிப்பதற்கும் உள்ள முக்கிய வேறுபாடும் ஆதிகாவியத்தால் விளக்கப்பெறுகின்றது. இதர ஸௌந்தர்யங்களைத் தரிசித்தால் மூர்த்தியின் ரூப லாவணியம் மட்டும் விளங்கும். ஸ்ரீராமனைத் தரிசித்தோர்க்கு அந்த ரமணீயமான வடிவிலே தோற்றப்பொலிவோடு அனந்த கல்யாண குணங்களும் திருஷ்டிகோசரம் ஆகும். பிராட்டி ஹனுமாரைப் பார்த்து, "ஸ்ரீராமருடைய அங்கலக்ஷணங்கள் எவை? இளையவருடைய லக்ஷணங்கள் எவை? ஸ்ரீராமருடைய ரூபம் எப்படி இருக்கும்; தொடைகள் கைகள் இவற்றை நீ கண்டவாறு சொல்வாய்'' என்று பிரார்த்தித்தபோது, ஹனுமான் கூறும் வருணனையால் இவ்வுண்மை விளங்குகின்றது. "இராமன் தாமரையிதழ்க் கண்களை யுடையவன்; எல்லா உயிர்களின் மனத்தையும் வசீகரிக்கும் வனப்பு வாய்ந்தவன். தேசினல் ஆதித்தியனுக்கு ஒப்பாவான்'' என்ற சொற்களுக்குப்பின் இராமனுடைய குணகணங்கள் ஹனுமான் தன் கண்முன் தோன்றியதை நினைந்து, "பொறுமையில் அவன் பூமிக்கு ஒப்பாவான்; புத்தியில் பிரஹஸ்பதி; கீர்த்தியில் இந்திரன். இராமன் ஸகல ஜீவராசிகளையும் தருமத்தையும் நான்கு வர்ணங்களையும் கட்டுப்பாடுகளையும் ரக்ஷிப்பவன்'' என்றெல்லாம் வருணிக்கிருர். மீண்டும் ரூபகுணங்களை விவரிக்கிருர்: "இராமன் அகன்ற தோளுடையவன்; சங்கம் போன்ற கழுத்தை யுடையவன்; மங்களகரமான முகத்தை யுடையவன்; அவனுடைய கழுத்தெலும்பு தசையிற் மறைந்திருக்கும்; இராமன் சியாம நிறம்'' என்றெல்லாம் கூறி, சாமுத்திரிகா லக்ஷணங்கள் யாவும் இராமனுக்கு அமைந்திருப்பதை விளக்குகிருர். பகவானுடைய ரூபஸௌந்தர்யமும் ரூபமெடுத்து விளங்கும் குணங்களின் ஸௌந்தர்யமும் ஒருங்கே காணலாம் என்பதே ஸ்ரீராமதர்சனத்தின் தனிச் சிறப்பு.

கவி பாடுகை.

(விசாரதன் எழுதியது.)

ஆதிகாலத்தில் தமிழ் நாட்டிலே புலவர்கள் அரசர்களிடம் சென்று அவர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெறுவது பெருவழக்காக இருந்தது. பதிற்றுப்பத்து என்னும் சங்க நூல் பப்பத்து பாடல்களால் ஆனது. ஒவ்வொரு பத்துப் பாட்டும் ஒரு சேரமன்னனைப் புகழ்ந்து பாடியது. அவற்றைப் பாடிய நூலாசிரியருக்கும் பதிற்றுப்பத்தினைத் தொகுத்த புலவருக்கும் பிற்பட்ட பழைய உரையாசிரியரோ வேறு யாரோ ஒருவர் ஒவ்வொரு பத்துப் பாட்டிற்கும் ஒரு பதிகம் பாடிச் சேர்த்துள்ளார். அப்பதிகத்திற்குப் பின் உரைநடையில் 'பாடிப் பெற்ற பரிசில்' என்ற விவரம் குறிக்கப்பட்டுள்ளது. இவ்விவரங்களை உண்மையாகக் கொண்டோமானால், ஆதிகாலத்திலே சேரமன்னர் கவி சிரேஷ்டர்களை ஆதரித்துப் போற்றிவந்த விதங்களை நாம் கண்டு கொள்ளலாம்.

'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்' என்று சேரமானைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார் என்னும் அந்தணர் பாடிப் பெற்ற பரிசில், உம்பற்காட்டு ஐஞ்ஞூறு ஊரும் முப்பத்தெட்டு ஆண்டு அவ்வரசன் தென்னாட்டினின்றும் கப்பமாகப் பெற்ற வருவாயிலே ஒரு பாகமும் என்று அறிகிறோம். இவ்வரசன் ஐம்பத்தெட்டு ஆண்டு அரசு புரிந்தான் என்று ஒரு குறிப்பும் காணப்படுவதால் இவனது அராசாட்சியின் இருபதாம் ஆண்டிலே இவன் தென்னாட்டினைச் செயித்து வடநாடுகளையும் படையெடுத்துத் தனதாக்கி இமயவரம்பன் என்று புகழ் பெற்றபோது, இக் கண்ணனார் அவன் வென்றியைப் பாடி இப்பரிசில்களைப் பெற்றார் என்று ஊகிக்கலாம்.

இவ்வரசனுக்குப்பின் இருபத்தைந்து ஆண்டு அரசு புரிந்த இவன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாடிய கௌதமனார் தாம் பாடிய பாடல்களுக்குப் பரிசிலாக அரசனைக் கொண்டு ஒன்பது பெருவேள்விகளை செய்வித்து பத்தாம் வேள்வி நடக்கும்போது தாமும் தருமபத்தினியுமாக சரீரத்தோடு சுவர்க்கம் புகுந்தனர் என்று சொல்லப்படுகிறது.

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்னும் அரசன் தன்னைப் பாடிய காப்பியனாருக்கு நாற்பது நூறாயிரம் பொன்னும் ஆட்சியிற் பாகமும் கொடுத்தான் என்பர். இவ்வாறே பிற சேரமன்னரும் நாடும் பொன்னும் அர்த்தாசனமும் கொடுத்தனர் என்று அறிகிறோம். தகடூர்மேற் படையெடுத்துச் சென்ற அதிகமானை வென்ற சேரமன்னன் தன்னைப் பாடிய அரிசில்கிழாருக்குத் தன் இராச்சியத்தையே அளித்தான். அவர் "எனக்கு இராச்சியத்தால் என் ஆவது? இதனை நான் கொடுத்த அரசாகக்கொண்டு நீயே ஆண்டு வந்தால் நான் மந்திரியாக உடன் இருந்து அநுபவிக்கிறேன்!" என்று வேண்ட, அரசனும் சம்மதித்தான் என்றும் கூறப்படுகின்றது.

அரசனது புகழினைப் பாடிச் செல்வோருள் ஒரு சில மஹான்கள் தன்னலம் விரும்பிச் செல்லாது பிறருக்கு நலம் புரிவதையே தாங்கள் பாடிப் பெற விரும்பிய பரிசிலாக வேண்டினார்கள் என்றும் அறிகிறோம். இவர்கள் சக்கரவர்த்திக்கும் சக்கரவர்த்தித் திருமகனுக்கும் நலம் விளைக்கக் கருதி அவரிடம் சென்றிருந்த கௌசிக முனிவரையும் சீதாப்பிராட்டியை இராமபிரானோடு சேர்க்கக் கருதிய வான்மீகி முனிவரையும் போல்வர். பேகன் என்னும் அரசனால் கைவிடப்பட்ட அவனுடைய மனைவி கண்ணகியை அவனோடு மீண்டும் கூட்டுவுற்றவராய் அவனிடம் சென்று அவனைப் பாடி, மீண்டும் அவன் மனைவியோடு வாழ்வதே தாம் விரும்பிய பரிசில் என்று பிரார்த்தித்தனராம் பரணரும் அரிசில் கிழாரும் பெருங்குன்றூர் கிழாரும். இவ்வகைத் தரும சிந்தனையும் பரோபகார சிந்தனையுமே தூண்ட மானிடம் பாடாத பொய்கையாரும்

சிறையுண்ட பகையரசனை விடுவிக்கவேண்டுமென்று களவழி பாடினார். கோவூர்கிழார் மலயமான் மக்களுக்கும் இளந்தத்தன் என்னும் புலவனுக்கும் உயிரளித்ததும் அவர்களைக் கொல்ல நிச்சயித்த மன்னர்களைப் பாடிப் பிரார்த்தித்ததாலே யாகும். இதுபோலவே, தம்முடைய தாய் தந்தையையும் தருமபத்தினியையும் இளம்பிள்ளைகளையும் ரக்ஷிப்பதற்கு வேறு உபாயமின்மையால் பழங்காலத்து வள்ளல்களைப் போல வரையாது கொடுத்த குமணன் என்பானைக் கண்டு "நீ இன்புற விடுதியாயிற் சிறிது குன்றியும் கொள்வேன்; இன்றேல் யானை தந்தாலும் கொள்ளமாட்டேன்" என்று கூறி யானை முதலியவற்றைப் பரிசிலாகப் பெற்றனர்.

பிற்காலத்திலே பாடிப் பரிசில் பெறுவது கடினமாயிற்று. கவிகளை ஆதரிக்கும் செல்வர்கள் 'இப்போதில்லை நோக்கினோம்' என்பர் நம்மாழ்வார். ஆதனால் மன்னுமனிசரைப் பாடிச் செல்வதின் பயன் தங்கள் மானத்தோடு வாய்மையையும் துறப்பதே என்று ஆயிற்று. இக்காலத்திலேதான் தெய்வப்புலவர்கள் பலர் தோன்றி தத்தமது இஷ்டதெய்வங்களைப் பாடி இம்மையிலே சோறும் கூறையும் பெற்று இறுதியில் வீடும் பெற்றனர். 'தெய்வம் தன்னையே தரும் கற்பகம்' என்று நம்மாழ்வார் கூறுவதும் தெய்வத்தைக் கவிபடுவதால் உண்டாம் இத்தனிப்பயனை நினைந்தே யாம். வேங்கடத்தம்மானை நம்மாழ்வார் 'என் ஆனை' என்று கொண்டாடுவதின் கருத்தை பழைய உரைகாரர் "இவர் கவி பாடிப் பெற்ற ஆனை காணும் அவன்" என்று விளங்கவைக்கிறார்.

இவ்வாறு கவி பாடிச் சம்மானம் பெறுவதைக் குறிக்கும் பாடலொன்று திருப்பாவையிலே உள்ளது. "உன் தன்னைப் பாடிப்பறை கொண்டு யாம் பெறு சம்மானம், நாடு புகழும் பரிசினால் நன்றாக" என்பது அப்பாடல்.

பிற்காலத்திலே கவி பாடி. காலக்ஷேபம் செய்வது எவ்வளவு கஷ்டசாத்தியமான காரியம் என்பதை விளக்கும் கதைகள் பல சொல்லப்படுகின்றன. கவி பாட்டுண்கிறவனுக்கு இல்லாத நன்மைகளை இட்டு அவனை வீமனே என்றும், விசயனே என்றும், பாரியே என்றும் புகழ்ந்தும் 'இருமருங்கும் துய்யன் நீ' என்றும் 'உன்கை மாரியனைய கை' என்றும், 'உன் தோள் மால்வரை யொக்கும்' என்றும் 'பச்சைப் பசும் பொய்கள்' பேசவேண்டிவரும். கவி பாடுவதிலே சென்ற நாட்களில் யாதும் வருவாய் இல்லாததால் தன்னிடம் உள்ளவற்றைப் பணயம் வைத்துக் கடன் வாங்கிக் காலக்ஷேபம் பண்ணவேண்டும். பின்பு கவி யரங்கேற்றிப் பெறும் சம்மானம் இக்கடனை நிவர்த்திப்பதற்குக்கூட போதாதாகி விடும். கவி கேட்பிக்கைக்கு ஆடிப்பாடவல்ல ஸஹகாரிகளைக் கூட்டவேண்டும். தாம் பெறும் சம்மானத்தை அவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்க வேண்டிவரும்" என்று அக்காலத்திலே மானிடத்தைக் கவி பாடுவதிலேயுள்ள கஷ்டங்களை திருவாய்மொழி யுரைகாரர் வருணித்துள்ளார். இவற்றை யெல்லாம் நினைந்தே கவி பாடுவதினும் 'மெய்வருத்தி கைசெய்து பிழைப்பது நலம்' என்று கூறுகின்றார் நம்மாழ்வார். கவி பாடிப் பரிசில் பெறுவது என்பது தைவத்தால் மட்டுமே ஆகக்கூடிய காரியம். அதிர்ஷ்டம் இல்லாவிட்டால் பாடிய கவிகள் அனைத்தும் இம்மையிலே வியர்த்தமாகிவிடும்; மறுமையிலும் வாய்மையை யிழந்ததால் நரகவாசமே சித்திக்கும். ஆதலின் ஜீவனோபாயமாகக் கருதிக் கவி பாடாமல், தம் இன்கவி கொண்டு தம் இஷ்டதெய்வத்தை ஏத்தியபின், ஜீவனோபாயமாக மெய்வருத்திப் பாடுபட்டால், எவ்வளவு அதிர்ஷ்டஹீனன் ஆனாலும் அவன் வேலைக்குத் தக்கவாறு கூலி கிடைக்கும் அல்லவா?

சில வியவசாய உவமைகள்.

(துகளன் எழுதியது.)

ஸ்ரீவால்மீகி ராமாயணத்திலே பயிர்த்தொழில் சம்பந்தமான சில அழகிய உவமைகள் கூறப்பட்டுள்ளன.

ஸ்ரீ ராமபிரானை மகனாகப் பெற்ற தசரத சக்கரவர்த்தியிடம் கௌசிக முனிவர் வருகிறார். அவருடைய வரவைக் கொண்டாடும் சக்கரவர்த்தி, "உமது வரவு தண்ணீரில்லாத பிரதேசத்திலே பொழியும் மழை போன்றதாகும்" என்று இன்சொற் கூறுகிறார்.

ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேக மென்று ஏற்பாடுகள் துரிதமாக நடக்கின்றன. அவற்றை கண்ட கூனி இராமனது செவிலித்தாயிடமிருந்து உண்மையறிந்து கைகேயி தேவியை எழுப்புகிறாள். "வெள்ளம் வற்றின பிற்பாடோ அணைகோலுவது? கோடைக்காலத்திலே நதியின் பிரவாகத்தைப் போல உனது ஸௌபாக்கியம் குன்றிவிடுமே" என்று அச்சுறுத்துகிறாள்.

"ஸ்ரீ ராமனைவிட்டுப் பிரிய நேரிட்டால் என் உயிர் போய்விடுமே" என்று கவிக்கும் தசரதர் பிரலாபிக்கும்போது, "இவ்வுலகம் சூரியனின்றி இருக்கக்கூடுமாயினும், நீரின்றிப் பயிர் வளர்தல் கூடும் ஆயினும், இராமனின்றி என் உடலிலே உயிர் தங்கமாட்டாது" என்கிறார்.

அசோகவனத்திலே சீதாப்பிராட்டி ராம விரகத்தாலே வாடி வாடும் தறுவாயில் ஹநுமான் ஸ்ரீராமகதையைச் சொல்லி அவளைத் தளிர்ப்பிக்கிறான். அரைகுறையாக விளைந்து வாடும் தறுவாயிலுள்ள பசும்பயிரையுடைய பூமியிலே மழைபொழிந்தாற்போல இருந்தது அவன் செய்த உதவி என்று பிராட்டி அவனைக் கொண்டாடுகிறாள்.

இவற்றிலும் ரஸமானதோர் உவமை யுத்த காண்டத்திலே காணப்படுகின்றது. ஸ்ரீராமன் இக்கரையிலும் பிராட்டி இலங்கைக்கரையிலுமாக இருக்கிறார்கள். வானரசேனை கருங்கடலுக்கு அருகே ஒரு வெண்கடல் போற் பரவியிருந்தது. மாலைவேளை. ஸ்ரீராமன் பிராட்டியை நினைந்து பிரலாபிக்கிறான். 'பிராட்டியைப் பிரிந்தபின் தனக்கு ஏன் உயிர் நீங்கவில்லை' என்ற வினவிற்குத் தானே விடை கூறுவது போல "நானும் அவளும் ஒரே பூமியில் இருக்கிறோம். நீர் நிறைந்ததோர் வயலை அடுத்து நீரின்றி வரண்டு போகும் தறுவாயிலுள்ள வயல் அயலுள்ள வயலின் நீர் ஊறுவதாலே ஈரித்திருக்குமே; அவ்வாறே நானும் உயிர் தாங்கி இருக்கிறேன்" என்று நிச்சயிக்கிறான்.

இவ்வாறு ஐந்து முக்கியமான கட்டங்களில் இவ்வைந்து உவமைகளாலும் பயிர்த்தொழில் செய்து ஜீவிக்கும் பாமர ஜனங்களின் உள்ளத்திலும் உணர்ச்சி எழுமாறு பாடுவதாலே வால்மீகி முனிவரின் கவித்திறன் நன்கு விளங்குகின்றதன்றோ?

மானவீ.

K. வரதாச்சாரி, B.A., B.L.,

[353-ம் பக்கத் தொடர்ச்சி.]

அங்கம் 4. காட்சி 1.

உதயஸாகரக் கரை. ஓர் மேடையில் ராணு அமரஸிம்ஹர் உட்கார்ந்து கொண்டு ஏரியின் அழகையும் சந்திர ஒளியையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

அரசன் :—இந்த ஸம்ஸாரமே ஓர் மாயை; வித விதமான, அழகான வஸ்துக்களை நமக்கு விளையாடக் கொடுத்து ஏமாற்றுகிறது. ஆமாம்; இயற்கையின் ஸௌந்தர்யத்திற்கும் மனிதனின் மனப்பான்மைக்கும் ஏதாவது ஸம்பந்தம் உண்டோ? இயற்கை அழகாக இருக்கிறது; மனிதன் அல்பனாக இருக்கிறான்; பொறாமையும் வஞ்சகமும் தான் இவனுக்கு ஸ்வபாவ ஸித்தம். ஆஹா, இதோ சந்திரகிரணங்கள் ஏரியின் ஜலத்தில் ஸ்நானம் செய்து அலைகளுடன் விளையாடி மரங்களின் இலைகளுடன் ஆடி அசைந்து கல கல வென்று சிரிக்கின்றன. எவ்வளவு ரம்யம்!

(ராணி வருகிறாள்)

ராணி :—மஹாராணா!

அர :—சற்று பேசாமல் இரு. ஓர் அபூர்வமான ஸ்வப்னம் கண்டு கொண்டிருக்கிறேன்.

ரா :—என்ன, விழித்துக் கொண்டேயா ஸ்வப்னம்? நான் கெட்டேன்!

அர :—போனால் போகட்டும். மோஹபங்கம் ஏற்பட்டுவிட்டது. ஸரி, என்ன விசேஷம்?

ரா :—இன்னும் என்ன விசேஷம் வேண்டியிருக்கிறது! இந்தக் காலத்துப் பெண்கள் தான் பெரியவர்கள் வார்த்தைகளைக் கேட்பதேயில்லை யென்று வைத்துக் கொண்டு விட்டார்களே! அன்று கோவிந்தஸிம்ஹர் ஏதோ சொன்னாரென்று ஒரே அடியாகக் கோபித்துக் கொண்டு கல்யாணியும் அஜயஸிம்ஹனும் வீட்டை விட்டே ஓடி விட்டார்களாம். என்ன தான் வந்து விட்டதோ, இந்தக் காலத்துக் குழந்தைகளுக்கு! கலியுகமல்லவா! நாமும் தான் சிறுவர்களாக இருந்தோம், இப்படியெல்லாமா செய்தோம்?

அர :—ஆமாம், நாம் சிறுவர்களாக இருந்த போது கிருதயுகமாக இருந்தது! இப்பொழுது கலியுகமாக ஆகிவிட்டதோ? தாயார்களெல்லாம் கிருதயுகப் பிறவிகள், பெண்களெல்லாம் கலியுக ஜந்துக்கள், அப்படித்தானே! அதெல்லாம் போகட்டும். இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?

ரா :—மானஸிக்கு கல்யாணம் செய்வதாக ஏதாவது யோஜனை உண்டோ. இல்லையோ-செய்வதானால், இப்பொழுதே செய்து விடவேண்டும். அப்புறம் முடியாது.

அர :—அவளுக்கு கல்யாணம் ஆகும் என்றே தோன்றவில்லை; அவள் ஜன்மம் கலியாணம் செய்து கொள்ளும் ஜன்மமே இல்லை என்று நினைக்கிறேன்.

ரா :—ஸரிதான்! ஒன்றும் நன்றாக இல்லை! நீங்களோ விழித்துக் கொண்டே கனவு காண ஆரம்பித்து விட்டீர்கள்! ஜோதிபுரம் அனுப்பிய அருணஸிம்ஹனும் திரும்பி வர வில்லை; என்னதான் ஆகுமோ?

அர :—ஜோதிபுரத்திலிருந்து அருணஸிம்ஹன் திரும்பி வந்து விட்டானே.

ரா :—வந்து விட்டானா? கல்யாணம் நிச்சயம் ஆகி விட்டதா? எந்த தேதி?

அர :—ஜோதிபுரமன்னருக்கு நம் கன்னிகையை தன் புத்திரனுக்கு விவாஹம் செய்து கொள்ள விருப்பம் இல்லையாம். நம்மிடம் அவருக்குக் கோபம்.

ரா :—ஏன், ஏன்? நாம் அவருக்கு என்ன செய்து விட்டோம்?

அர :—முகலாயர்களை நாம் தோற்கடித்து விட்டோம். நாம் ஜயித்து விட்டோம், அல்

லவா? அதுதான் அவருக்கு நம்மிடம் வருத்தம்.

ரா :—நான் அப்பொழுதே சொல்லவில்லையா? நான் சொல்வதை யார் கேட்கிறார்கள்? அப்பொழுதே கலியாணத்தை முடித்திருக்கக் கூடாதா?

அர :—அவர் பாதுஷாவிடம் சென்றிருக்கிறாராம். அங்கு அவர் காதைக் கடித்து மறுபடியும் ஓர் பெரிய ஸைன்யத்தை மேவாரை துவம்சம் செய்ய அனுப்புவார். தானும் ஒரு வேளை கூட வருவார். இந்தத் தடவை நிச்சயமாக ஸர்வநாசம் தான். ஒன்றும் மிஞ்சப்போகிறதில்லை. எல்லாம் போய்விடும். ஸந்தோஷம் தான்! உத்ஸவம் தான்!!

ரா :—அதெல்லாம் எனக்குத் தெரியாது. எப்படியும் இந்தக் கலியாணத்தை நடத்தி முடிக்க வேண்டியதுதான். நீங்கள் இப்பொழுதே ஜோதிபுரத்தின் மேல் படையெடுத்துச் செல்லுங்கள். புறப்படுங்கள்.

அர :—அப்பா! இவ்வளவு நாட்கள் கழித்து இன்று தான் நீ க்ஷத்ரியஸ்த்ரீதான் என்று வியக்தமாயிற்று. ஆமாம் இதோ பார்! நம்மிடம் சக்தி ஒன்று தானே இருக்கிறது. அதுவும் அனேகமாக ஆகிவிட்டது. சக்தியை விட மேலானது பக்தி, அந்த பக்தி, முகலாயர்களிடம் பக்தி, ஜோதிபுரமன்னனிடம் இருக்கிறது. ஆகையால் நாம் என்ன செய்ய முடியும், இப்பொழுது?

ரா :—அதற்காக இந்த அவமானத்தைப் பேசாமல் பொறுத்துக் கொண்டிருக்கமுடியுமா?

அர :—பேசாமல் பொறுத்துக் கொண்டிருக்க முடியாவிட்டால் அழுது கொண்டே பொறுத்துக் கொள். கத்து, கூக்குரலிடு. ஆவது என்ன? போகட்டும். சாப்பாடு தயாராகி விட்டதல்லவா? இனி என்ன கவலை, போ. இந்தத் தடவை எல்லாம் நாசமாகிவிடும். ஸர்வநாசம் நிச்சயம். நம் ஜாதி இவ்வளவு அற்பமாகவும் நீசமாகவும் ஆகி விட்டதே! ஈச்வரன் கூட இனி இதைக் காப்பாற்ற முடியாது; மனுஷ்யன் செய்யக்கூடியது இனி ஒன்றும் இல்லை. எல்லாம் ஸமாப்தம் ஆகி விடப்போகிறது. ஆகட்டும்!

ரா :—ஆமாம், இதில் உங்கள் அபராதம் என்ன? நீங்கள் என்ன தீங்கு அவருக்கு இழைத்து விட்டீர்களாம்?

அர :—அபராதமா? இது தான் அபராதம், அவரும் நானும் ஒரே ஜாதியைச் சேர்ந்த க்ஷத்ரியர்கள்தானே; ஒரே படகில் இருப்பவர்களில் யாராவது ஒருவர் செய்யும் தவறால் படகே முழுகுகிறதல்லவா? அதுதான். இப்பொழுதும் ஸரி நீ போ (ராணி போகிறாள்) ஆகாயம் எவ்வளவு இருண்டுவிட்டது. ஸம்ஸாரம் மாயைதானோ? (அரசன் போகிறார். மானஸீ வருகிறாள்.)

மானஸீ :—அஜயஸிம்ஹர் போய் விட்டாராம். வேறு தேசம் சென்று விட்டாராம். போகும் முன் ஒரு தடவை என்னைப் பார்த்து விட்டுப் போகக்கூடாதா! வெறும் கடிதம் ஒன்று தானோ? அதிலும் ஒரே வரி: "நான் போகிறேன், திரும்பமாட்டேன்." அவ்வளவு தான். என்னிடம் சொல்லிக் கொண்டு போகக் கூடாதா? அஜயரே, அஜயரே! நீர் கல் நெஞ்சுக்காரர்......இருந்தாலும் நான் ஏன் இப்படிக் கலங்கவேண்டும்?......திடீரென்று சந்திர ஒளி மயங்கிவிட்டதே! உதயஸாகரமும் மலினமாகி விட்டதே! இயற்கையின் முகத்தில் விளங்கிய சிரிப்பு எங்கே போய் மறைந்து விட்டது? ஐயோ!

அங்கம் 4. காட்சி 2.

மேவாரின் அருகில் மஹாபத்கானின் கூடாரம்; (மஹாபத்கானும் பர்வேஜும் மஹாராஜா கஜஸிம்ஹரும்)

மஹாபத்கான் :—ஸரி, நீங்கள் ஓர் லக்ஷம் ஸைன்யத்துடன் சென்று சித்தூர் கோட்டையை முற்றுகை இடுங்கள்.

பரவேஜ் :—ஸரி (போகிறான்)

மஹா :—நீங்கள் ஓர் பக்கமாக ஆரம்பித்து மேவார் கிராமங்களை எல்லாம் வரிசையாக நெருப்பிடுங்கள். எதிர்த்தவர்களை வாளுக்கு இரையாக்குங்கள். இந்தக் காரியத்தில் தாங்கள் நிபுணர் என்று எனக்குத் தெரியும். தாங்

கள் உகந்த காரியமல்லவா இது! இருந்தாலும் ஸ்த்ரீகளை மட்டில் துன்புறுத்தி விடாதீர்கள். ஜாக்கிரதை!

கஜஸிம் :—ஸரி, அப்படியே! மேவாரில் ஓர் ராஜபுத்திரனையும் மீதிவைக்கப் போவதில்லை.

மஹா :—ஆமாம். ஸந்தேகம் என்ன? ராஜபுத்திரனுக்கு ஜன்மவைரி முஸல்மானன்று, ராஜபுத்ரதின்தான். ஹிந்துஸ்தானத்தின் சரித்திரம் முழுவதுமே அண்ணன் தம்பி சண்டைதானே. ஹிந்துக்களுக்குத் தங்களையே கொலை செய்து கொள்வதிலும், பிறரிடம் காட்டிக் கொடுப்பதிலும் தானே பரம ஆனந்தம். எனக்குத் தெரியாதா? ராஜபுத்திரர்களைப் பெயர்கூட மிஞ்சாமல் நாசம் செய்ய உங்களால் தான் முடியும். அவ்வளவு பூர்த்தியாக வேறுயாரும் செய்ய முடியாது என்று தெரிந்து கொண்டு தான் இந்தக் காரியத்தை உங்களிடம் ஒப்புவித்திருக்கிறேன். ஸரி, போய் உங்கள் வேலையை ஆரம்பித்துக் கொள்ளுங்கள். போங்கள்.

கஜ :—ஸரி. (போகிறார்)

மஹா :—ஹிந்து! ராஜபுத்திரா! மேவார்! ஜாக்கிரதை!! இது ஓர் ஜாதி மற்றொரு ஜாதியைத் தாக்கும் யுத்தமல்ல. இது ஓர் மதம் மற்றொரு மதத்தை நசுக்கப் புறப்பட்ட யுத்தம். பார்ப்போம் எது ஜயிக்கிறது என்று.

அங்கம் 4. காட்சி 3.

உதயபுர ராஜமாளிகை இரவு. ராணா அமரஸிம்ஹரும் ஸத்யவதியும்.

அர :—மஹாபத்கானே யுத்தத்திற்கு வந்து விட்டானாமே?

ஸத்யவதி :—ஆமாம். லக்ஷத்திற்கு அதிகம் ஸைன்யமும் வந்திருக்கிறது.

அர :—(பெருமூச்சு விட்டு) ஸத்யவதி! நான் அப்பொழுதே சொன்னேன். ராஜபுதனம் முழுவதும் போய்விட்ட பிறகு, இந்த மேவார் மட்டில் தனியாக எவ்வளவு நாள் எதிர்த்து நின்று விடமுடியும்? ஈசுவரன் பார்த்துப் பொறுப்பாரா? இந்தத் தடவை மேவாரும் போய் விடப்போகிறது. கொஞ்சம்கூட பாக்கி இல்லாமலேயே ஸர்வநாசம் ஏற்படப் போகிறது...... ஸத்யவதி! ஏன் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறாய்? ஒன்றும் கவலை இல்லை. இது மஹா ஆனந்தம்; உத்ஸவம் கொண்டாட வேண்டிய தருணம் அல்லவா?

ஸத்ய :—ஆனந்தமா?

அர :—ஆமாம். எவ்வளவு நாள் நோயாளியாக படுக்கையிலேயே படுத்துக் கொண்டு, மிருத்யுவை எதிர் பார்த்துக் கொண்டே வருந்துவது? இனி நம் துன்பங்கள் ஓய்ந்து விடும்.

ஸத்ய :—ஆனால் நீங்கள் யுத்தம் செய்யப் போகிறதில்லையா?

அர :—யுத்தம் செய்யாமல் பின் என்ன செய்வது? நிச்சயமாக யுத்தம். முதல்தரமான யுத்தம் இப்பொழுதுதான். இதுவரையில் செய்த யுத்தங்கள் எல்லாம் குழந்தைகள் விளையாட்டு. மஹா ப்லவம் இப்பொழுது, மஹா ஆனந்த மிப்பொழுது. ஸஹோதரர்கள் செய்து கொள்ளும் யுத்தமல்லவா இது! பாரத தேசம் முழுவதும் இந்த வேடிக்கையைப் பார்க்கவேண்டாமா?

ஸத்ய :—மஹாபத்கானுடன் ஜோதிபுர மஹாராஜர் கஜஸிம்ஹரும் வந்திருக்கிறார்.

அர :—வந்து விட்டாரா? அதுதான் ஸரி. ஒரு வேளை என்னிடம் கொண்ட கோபத்தில், நான் அவருக்கு அனுப்பிய அழைப்பை மதிக்க மாட்டாரோ என்று ஸந்தேகித்தேன். வந்து விட்டாரா! இனி கவலை யில்லை.

ஸத்ய :—ராஜபுத்திர குலத்தின் கோடாரிக் காம்பு இவன்!

அர :—சொல்லாதே அப்படி! அவர் பரம பக்தன் அல்லவா, பரம வைஷ்ணவர் அன்றோ அவர்? "தில்லீச்வரோ வா ஜகதீச்வரோ வா!" அந்த ஈச்வரனை இவ்வளவு நாளாக மதிக்காதவனை நானன்றோ ராஜபுத்திரக் கோடாரிக் காம்பு! அவரல்ல, கஜஸிம்ஹர்! ஆஹா எவ்வளவு அழகான பெயர் கஜமும் ஸிம்ஹமும் ஒன்றாகவே அவர் காட்சி அளிப்பாரோ? துதிக்கையும் தொங்கும் பிடரி மயிரும் அசைந்து ஆடுமோ?

ஸத்ய :—ராஜபுத்திரன் ராஜபுத்திரர்களுடனேயே சண்டையிட வந்து விட்டாரே.

அர :—அவர் இல்லாமல் இந்த ஸர்வநாசம் வேறு எவ்வாறு பூர்த்தியாகும்? மஹா தேவருடன் நந்தியும் ப்ருங்கியும் வராமல் எந்த காரியம் நடக்கும்? சாஸ்திரத்தில் சொல்லிய விஷயம் பொய்யாகுமா, எப்பொழுதாவது?

ஸத்ய :—ஐயோ துரத்ருஷ்ட மேவாரே! (அழுகிறாள்)

அர:—ஸத்தியவதி! பகவான் இந்த பாரதவர்ஷத்தை சிருஷ்டித்த பொழுதே அதன் தலையில் எழுதி விட்டாரே, இந்த தேசத்தின் ஸர்வநாசம் இந்த தேசத்திய மக்களாலேயே உண்டாகக் கடவது என்று விதித்து விட்டார். தக்ஷசிலத்தில் என்ன நடந்தது? ஜயசந்திரனின் செய்கை என்ன? மானஸிம்ஹர் சந்தஸிம்ஹர் இவர்கள் என்ன செய்தார்கள்? அத்துடன் ராணாவின் புத்திரர்களான மஹாபத்கானையும் கஜஸிம்ஹரையும்கூட சேர்த்துக் கொள். ஸரி நிகர்ஸமானம் அல்லவா! அக்ஷர அக்ஷரம் அதே தானே! ப்ரும்ஹ லிபியை மாற்ற முடியுமா! நீ, போ, ஸத்யவதி, நான் ஸேனையைத் தயார் செய்ய வேண்டும். (ஸத்யவதி போகிறாள்).

அர:—ஓர் ஜாதி கெடுவதானால் இப்படித்தான் கெடுகிறது! தன் தோஷத்தால்தான் கெடுகிறது. இவ்வாறே கெடுகிறது. நிர்ஜீவனாகி விட்டால், வியாதி வலுக்கிறது, வீட்டுக்கு வீடு விபீஷணர்கள் தலைப்படுகிறார்கள்! மஹா பத்கானும் ராஜபுத்திரன், கஜஸிம்ஹனும் ராஜபுத்திரன்! என்ன ஈர்ஷ்யை. எவ்வளவு துவேஷம்! ஐயோ, ஜாதியே! நீ நாசமாகாமல் வேறு எது நாசமாகும். தாயாதிச் சண்டையில் யார் குறுக்கிட்டு விலக்கிக் காப்பாற்ற முடியும்? (கோவிந்தஸிம்ஹர் வருகிறார்.) வாருங்கள். என்ன விசேஷம்?

கோவிந் :—மஹாபத்கான் கிராமத்துக் குடிசைகளை எல்லாம் கொளுத்துகிறானே!

அர :—கொளுத்துகிறானா! அதுதான் ஸரி. அப்படித்தானே செய்ய வேண்டும்.

கோவிந் :—இதற்கு பதில், பழி வாங்க மாட்டோமா? நன்றாக வாங்குவோம்.

அர :—ஆமாம், அப்படித்தான் செய்யவேண்டும். இல்லாவிட்டால் மேவார் எப்படி த்வம்ஸம் ஆவது?

கோவிந் :—(ஆச்சரியமாக) ஏன், தாங்கள் யுத்தம் செய்யப் போவதில்லையா?

அர :—ஏனில்லை? நிச்சயமான யுத்தம் இப்பொழுதுதான். ராஜபுத்திரஸேனை எவ்வளவு இருக்கும்? 5000, இருக்குமா? போதும். அதுவே அதிகம் சாவதற்கு இவ்வளவே போதும். லக்ஷம்தான் மஹாபத்கானிடம் இருக்கட்டும், மேலேதான் இருக்கட்டுமே. அதனாலென்ன?

கோவிந் :—ஐயோ! (தலை குனிகிறார்.)

அர :—ஏன்? கோவிந்தஸிம்ஹரே! நீங்களுமா தலையைத் தொங்கவிடுவது? எழுந்திருங்கள், புறப்படுவோம். மஹா ஆனந்தம் நிறைந்த நாளன்றோ இன்று! ஒவ்வொரு வீட்டிலும் மங்களவாத்தியங்கள் முழங்கட்டும். நமது சிவப்புக் கொடி ஒவ்வொரு தெருவிலும் பறக்கட்டும். பெரிய கொடி கோட்டைமீது நன்றாக உயர்ந்து பிரகாசிக்கட்டும். ஒரு தடவை கண் குளிரப் பார்ப்போம். பிறகு பார்க்க முடியாதல்லவா!

கோவிந்:—நன்றாகச் சண்டையிடுவோம், நன்றாகவே இறப்போம், ஆயினும் நமது தாயை காப்பாற்ற முடியப்போகிறதில்லையே.

அர :—அதற்காகவா துக்கம்? எவர் தாய்தான் இறப்பதில்லை? நமது தாயும் இறக்கிறாள். நாமும் அவளுடனே இறப்போம்.

கோவிந் :—ஆம் அதுதான் ஸரி. பிராணனை விடுவோம். மானத்தை விடமாட்டோம்.

அர :—அப்படியேதான். பிராணன் போகட்டும். மானமாவது மிஞ்சட்டும் ஸரி. ஸேனையைத் தயார் செய்யுங்கள். ரணபேரி முழங்கட்டும், புறப்படுவோம். கோவிந்த ஸிம்ஹரே! வாருங்கள். சாகும் முன் ஒரு தடவை உங்களை நன்றாக தழுவிக் கொள்கிறேன். வாருங்கள் (கழுத்தைத் தழுவி) ஸரி இனி மரணத்துக்குத் தயார். (கோவிந்தஸிம்ஹர் போகிறார். ராணி வருகிறாள்.)

அரு :—மேவார்! மேவார்! என் அழகிய மேவார்! இன்றுதான் உன் ஸௌந்தரியத்தை நான் கண்டுகொண்டேன். இதுவரையில் நான் உன்னைக் கண்டு அறிந்து கொள்ள இயலவில்லை. இன்று உன் வஸ்திரங்கள் கிழிந்து, சரீரம் முழுவதும் தூசு படிந்து, தலை மயிரும் அலங்கோலமாய் அவிழ்ந்து விரிந்து, கிடந்து புரளும் உன்னைக் கொலைக்களத்துக்கு இழுத்துச் செல்லுகிறேன். இன்று இந்த வேஷத்தில்தான் உன் ஸௌந்தர்யத்தை நான் அறிந்து கொண்டேன். ஸௌபாக்கியம் என்னும் ஸூரிய கிரணங்கள் உன்னை மூடி வைத்துக்கொண்டிருந்த வரையில் உன்னை யதார்த்தமாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. அந்த ஸூரியன் இன்று அஸ்தமித்து விட்டது. நீயும் பிரகாசமாய் அற்புதமாய், ஸ்வயமான ஜ்யோதியுடன் காட்சி அளிக்க ஆரம்பித்து விட்டாய்! ஆஹா, என்ன மஹிமை, என்ன கௌரவம், வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத ஸ்தப்த ஆனந்த ரூபம்! (போகிறார்.)

ரா :—ஐயையோ! முழுப்பைத்தியம் ஆகி விட்டாரே! அப்பொழுதே நினைத்தேன். வீடு முழுவதும் பைத்தியங்களா! நான் என்ன செய்வது, இனி!

அங்கம் 4. காட்சி 4.

மேவாரில் ஓர் கிராமத்தின் அருகில் ஸாயங்காலம்; ஸத்யவதியும் அருணஸிம்ஹனும் நடந்து வருகிறார்கள்.

ஸத்ய :—அருணா!

அருண :—ஏனம்மா!

ஸத்ய .—நடப்பது கஷ்டமாக இருக்கிறதா?

அரு :—இல்லையே!

ஸத்ய :—இன்று இந்தக் கிராமத்திலேயே தங்கி விடுவோம்!

அரு :—இங்கு வேலை இருக்கிறதா?

ஸத்ய :—ஆமாம், இந்த கிராமவாஸிகளை யுத்தத்திற்கு ஏற்பாடு செய்யச் சொல்லவேண்டும். மேவாரின் வீரகுலம் நாசமாகி விட்டது. இனி இவர்களைக் கொண்டு ஓர் புதிய ஸேனையைத் தயார் செய்து கொள்ளவேண்டும். இருட்டிவிட்டது, போவோம் வா. (போகிறார்கள்.)

(சில கிராமவாஸிகள் வருகிறார்கள்.)

முதல் கிராமவாஸி :—உயர்ந்த தேசம் போய் விட்டது.

2 வது :—ஆமாம் மஹாபத்கானே வந்து விட்டானும்; இனி எப்படித் தப்பமுடியும்?

3 வது :—மஹாபத்கான் என்றால் என்ன, அவன் அப்படிப்பட்ட அஸஹாய சூரனோ?

2 வது :—என்ன கேள்வியடா? அவனுக்கு நிகரேயில்லை!

4 வது :—அவன் யுத்தம் செய்ய எப்பொழுது கற்றுக்கொண்டான்? அவன் பிறந்தது தெரியுமெனக்கு, சின்னப்பயல்; அவனா?

2 வது :—நன்றாக இருக்கிறது உன் தர்க்கம்! ஒருவர் பிறப்பதை இன்னொருவர் பார்த்துத் தானிருப்பார்கள். அதிலிருந்து ஒருவனுக்கு சண்டையே செய்யத் தெரியாதென்று ஸித்தாந்தம்!

4 வது :— நீ பெரிய நியாய சாஸ்திரி! நான் எதைக் கண்டேன்!

1 வது :—அதோ பார் என்ன அது. நெருப்பு பிடித்துக் கொண்டு விட்டதா, என்ன?

எல்லோரும் :—எங்கே?

1 வது :—அதோ அந்த கிராமத்தில் தெரியவில்லை? புகை கிளம்புகிறதே!

4 வது :—அதுவா அது மேகம்.

2 வது :—ஆமாம்! மேகம் பூமியிலிருந்து தானே, கிளம்பும்? மேலே சுழலும்?

4 வது :—புழுதியாக இருக்கலாம்.

2 வது :—இருக்கலாம் புழுதி கறுப்பாகத் தானே இருக்கும்?

4 வது :—போடா; எதற்கும் குதர்க்கம் தானே?

1 வது :—ஜனங்களின் கூக்குரல் கேட்கவில்லை?

எல்லோரும் :—ஆமாம், ஆமாம்!

4 வது :—பாடுகிறார்களோ என்னவோ? இல்லாவிட்டால் கழுதை கத்துவதாக இருக்கலாம்.

2 வது :—இரண்டும் ஒரே குரல் தானே! உம்! அப்படித்தானே?

1 வது :—இதோ கத்திக்கொண்டே ஓடி வருகிறார்களே!

3 வது:—அவர்களை துரத்திக்கொண்டு வருவது சேனையாட்கள், துப்பாக்கியும் குண்டுமாக. (திரையில் "காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்? கொல்லாதீர்கள், கொல்லாதீர்கள்".)

1 வது :—ஐயோ, பாவமே!

(கல்யாணியும் அஜயஸிம்ஹனும் வருகிறார்கள்)

அஜயஸிம்ஹ :—(கிராமவாஸிகளை) ஸஹோதரர்களே! பார்த்துக் கொண்டே நிற்கிறீர்களே! இவர்களைக் காப்பாற்ற வேண்டாமா?

எல்லோரும் :—அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்?

அஜய :—இந்த அநியாயத்தைப் பேசாமல் பார்த்துக் கொண்டேதான் நிற்கப்போகிறீர்களா?

4 வது :—பின் அவர்களுடன் கூட நாங்களும் பிராணனை விடுவதா? வாருங்கள், ஓடிப்போய்விடுவோம். அவர்கள் இந்தப் பக்கமாகவே வருகிறார்கள்.

கல்யாணி :—ஓடினால்தான் தப்பித்துக் கொள்ள முடியுமா? முடியவே முடியாது. உங்கள் வீடுகளையும்தான் கொளுத்துவார்கள். ஒருவரையும் விட்டு விடப் போகிறதில்லை.

1 வது :—கொளுத்துகிற பொழுது பார்த்துக் கொள்ளலாம். ஆயுள் உள்ள வரையில் பயமில்லை. ஐயோ! இங்கேயே வருகிறார்களே, ஓடி விடுவோம். ஓடுங்கள், ஓடுங்கள். (கிராமவாஸிகள் ஓடி வடுகிறார்கள்.)

அஜ :—சப்தம் நெருங்கியே வருகிறது. அதோ அது துப்பாக்கி சுடும் சப்தம். கல்யாணி, நீ சற்றுவிலகி நில். நான் இவர்களை காப்பாற்ற வேண்டும்.

கல் :—ஆம், முடிந்த வரையில் காப்பாற்றிப் பாருங்கள்.

(கல்யாணி சற்றுவிலகிச் செல்கிறாள்)

அஜ :—காப்பாற்ற முடியப்போகிறதோ, இல்லையோ, இவர்களுக்காக என் பிராணனையும் கொடுக்க நான் தயார்தான். மானஸியின் பிரார்த்தனையையாவது நிறைவேற்றலாம். இதோ வந்து விட்டார்களே! (உறையிலிருந்து கத்தியை கழற்றுகிறார்; இறைக்க இறைக்க சில கிராமவாஸிகள் ஓடிவருகிறார்கள். அவர்கள் பின் அநேக முகலாய ஸிபாய்கள் உருவிய கத்தியுடன் வருகிறார்கள்.)

கிராமவாஸிகள் :—ஐயோ, எங்களை காப்பாற்றமாட்டீர்களா? (அஜயஸிம்ஹன் காலில் விழுகிறார்கள்.)

அஜ :—(ஸிபாய்களை) டேய், ஜாக்கிரதை!

முதல் ஸிபாய் :—போடா! (கத்தியை தூக்குகிறான்)

(அஜயஸிம்ஹன் அவனை கத்தியால் அடித்து கீழே தள்ளுகிறான்; மற்ற ஸிபாய்கள் அஜயருடன் சண்டையிடுகிறார்கள்; ஒவ்வொருவராக தோற்றுக் கீழே விழுகின்றார்கள். பிறகு இன்னும் சில ஸிபாய்கள் வருகிறார்கள்.)

அஜ :—கல்யாணி, இனி காக்க முடியாது. ஓடிவிடு, ஓடு.

கல் :—என் அண்ணா! நீங்கள் இங்கேயே பிராணனை விடுவது, நான் மட்டில் ஓடிவிடுவதா? (கல்யாணி அருகில் வருகிறாள். அதே ஸமயம் ஒரு ஸிபாய் துப்பாக்கியால் அஜயஸிம்ஹனை சுட்டு வீழ்த்துகிறான்.)

கல் :—(ஓடிவந்து) ஐயோ! அண்ணா, அண்ணா!

இரண்டாவது ஸிபாய் :—இது யார்? இவளையும் பிடித்துக் கொள்ளுங்கள்.

மூன்றுவது ஸிபாய்:—அப்படிச் செய்யக் கூடாது. ஸேனாதிபதி கண்டிப்பாக கட்டளை இட்டிருக்கிறார். ஸ்திரீகளுக்கு யாதொரு துன்பமும் இழைக்கலாகாது.

அஜ :—கல்யாணி! நான் பகவானுடைய சரணகமலங்களை அடைகின்றேன். அவர் தான் உன்னை ஸம்ரக்ஷிக்கவேண்டும்! (அஜயஸிம்ஹர் துடித்து இறக்கிறார்.)

கல் :—(அழுது) ஐயோ! ஐயோ! அண்ணு! அண்ணு! போய்விட்டாரே! (சரீரத்தின் மேல் விழுந்து அழுகிறாள்.) ஐயோ, எங்கு போய் விட்டீர்?

நான்காவது ஸிபாய்:—எல்லோரும் போகுமிடத்திற்குத்தான் போயிருக்கிறார்.

கல் :—(தன்னை சாந்தப்படுத்திக் கொண்டு) ஸரி, நான் வீணுக அழக்கூடாது. க்ஷத்திரிய வீரரே! உம்முடைய கடமையை செய்து, உம்முடைய தர்மத்தை பரிபாலிக்க, ஏழை எளியவர்களைக் காப்பாற்றிக்கொண்டு பிராணனை இழந்தீர். ஆனால், இவர்களோ, இவர்கள் எல்லாரும் பிசாசுகள்; ரக்தவெறி பிடித்த மிருகங்கள். நிரபராதிகளின் வீட்டைக் கொளுத்துகிறார்களே! ஒரு காரணமுமின்றி கொல்லுகிறார்களே! இவர்களுக்கு தனி நரகம் தான் சிருஷ்டிக்க வேண்டும்.

முதலாவது ஸிபாய் :—அதற்கு நாங்கள் என்ன செய்வது? ஸேனாதிபதியின் உத்தரவை நிறைவேற்றுகிறோம். அவர் சொற்படிதான் வீடுகளை கொளுத்துகிறோம்; கிராமவாஸிகளையும் கொல்லுகிறோம்.

கல் :—ஊம்! உங்கள் ஸேனாதிபதி யார்?

இரண்டாவது ஸிபாய் :—தெரியாதா? மஹாபத்கான் ஸாஹெப் தான்.

மூன்றாவது ஸிபாய் :—ஸரி, தெரிந்துகொண்டாகி விட்டதல்லவா? போகலாமா?

கல் :—என்ன? அவரா இப்படி உங்களுக்கு உத்தரவு இட்டார்? ஒரு போதும் இருக்காது.

நான்காவது ஸிபாய் :—வாருங்கள் போவோம், இவளுடன் என்ன வாதம்?

கல் :—இருங்கள், நானும் கூடவருகிறேன்.

முதல்வது ஸிபாய் :—நீ எங்கே வருவது?

கல் :—உங்கள் ஸேனாதிபதியினிடம் தான்.

முதல்வது ஸிபாய் :—எதற்காக அங்கு உன்னை அழைத்துக் கொண்டுபோவது? அவர் எங்களைக் கடிந்து கொள்ளுவார்?

மூன்றாவது ஸிபாய் :—அழைத்துக்கொண்டு போகாவிட்டாலோ? எங்களை என்ன செய்து விடுவாய்!

நான்காவது ஸிபாய் :—ஏண்டா, அவளாகவே வருகிறேன் என்கிறாள். வர விடுவோமே! இதில் என்ன பிசகு? நாம் அவளை நிர்பந்தம் செய்வது தானே கட்டளைக்கு விரோதம்; அவளாக வந்தால் வரலாமே!

1வது ஸி :—ஆனால் ஸரி, வா.

கல்:—ஸரி முன்னே போவோம். போங்கள்.

அங்கம் 4. காட்சி 5:

மஹாபத்கானின் கூடாரம்; காலையில் (மஹாபத்கானும் கஜஸிம்ஹரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.)

கஜ :—அரசன் ஸேனையைத் தானே நேரில் நடத்தி வந்தானமே!

மஹாபத் :—ஆம், தான் மட்டில் திரும்பிச் சென்றார். அவர் ஐயாயிரம் ஸேனாவீரர்களில் நாலாயிரமும் யுத்த மைதானத்திலேயே உயிரை இழந்தனர்.

கஜ :—வெறும் ஐயாயிரத்துடனு நம் லக்ஷம் ஸைன்யத்தை எதிர்க்க வந்தார்? அப்பா, என்ன தைரியம்! ஆச்சரியமாக இருக்கிறதே!

மஹாப :—அதுதான் தைரியம்! எனக்கும் இந்த விஷயத்தில் கர்வம் தான்.

கஜ:—ஆமாம் ஜெயம் உங்களுக்குத்தானே! ஏன் கர்வம் இருக்காது?

மஹாப :—சே சே! அதற்கு அல்ல. இது கூட உங்களுக்கு புரிந்து கொள்ள முடியவில்லையே! நான் முஸல்மானாக ஆகிவிட்டபோதிலும் 'அதே ராஜபுத்ர வம்சத்தவன்தானே, அதே ராணு அமரஸிம்ஹனின் ஸஹோதரன் தானே நான்' என்று கர்வம் கொள்கிறேன். ஐயாயிரம் ஸைனிகர்களுடன் ஓர் லக்ஷம் வீரர்

களை எதிர்க்க வருகிறவர் தன் பிராணனை இழக்கவேதான் வருகிறார். இவ்வாறு தன் தேசத்திற்காக நிர்ப்பயமாக உலகம் வியக்க, தன் பிராணனை விடக்கூடிய ராஜபுத்திர குலம் ஒன்றே? அந்த ராஜபுத்திரர்களில் நானும் ஒருவன்!

கஜ :—ஆமாம், ஆமாம்.

மஹாப :—ஆயினும், நீங்களும் தான் அந்த ராஜபுத்திரகுலத்தில் பிறந்தவர் நீங்களும் கர்வம் கொள்ளலாம், ஆனால் இப்பொழுது நீங்களோ வழுக்கிக் கீழே விழுந்து விட்டீர்கள். நீங்கள் தலையைக் குனிந்து கொள்ள வேண்டியதுதான். எப்படி ஆகி இருக்கவேண்டியது, எப்படி ஆகி இருக்கிறீர்கள்! பரிதாபம்!

கஜ :—ஆமாம் யுத்தத்தில் அரசன் ஏன் இறக்கவுமில்லை; கைது செய்யப்படவும் இல்லை?

மஹாப :—அப்படி ஒன்றும் அவருக்கு நேரிடக்கூடாதென்று நான் கண்டிப்பாய் உத்தரவு கொடுத்து விட்டேன். இப்படிப்பட்ட சத்துரு உலகிற்கே கௌரவம் அன்றோ! அந்த அழகைக் கெடுக்க நான் விரும்பவில்லை.

கஜ :—ஹூம், ஸரி. நான் போய் வருகிறேன். (போகிறான்.)

மஹாப:—அதோ, எதிரில் கிராமங்கள் பற்றி எரிகின்றன. ஏழைகளின் அழுகையும் கூக்குரலும் காதைத் துளைக்கின்றது. ஹிந்துக்களே! உங்கள் மதத்தின் மேன்மையில் இறுமாப்புடன் மடியுங்கள்! இன்று உங்கள் டம்பத்தையும் அஹங்காரத்தையும் நசுக்கி விட்டேனா? உங்கள் உயர்வையும் திரஸ்காரத்தையும் நான் பொடிப் பொடியாக்கி—

(நான்கு ஸிபாய்களுடன் கல்யாணி வருகிறாள்.)

மஹாப :—இவள் யார்?

முதல் ஸிபாய் :—எங்களுக்கு தெரியவே தெரியாது. வழியில் ஸந்தித்தோம். எங்களுடன் கூடவே தங்களிடம் வரவேண்டுமென்று தானாகவே வருகிறாள்.

மஹாப :—நீ யார்?

கல் :—என்னைத் தெரிந்து கொண்டு தங்களுக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை.

மஹாப :—பின், உனக்கு என்ன வேண்டும்?

கல் :—ஓர் நியாயம் கேட்க வந்தேன். நியாயம் வழங்குவீர்களானால் கேட்கிறேன்.

மஹாப :—எது விஷயமாக என்ன நியாயம்?

கல் :—உங்கள் ஸிபாய்கள், இவர்கள், நிரபராதியான என் ஸஹோதரனைக் கொலை செய்து விட்டார்கள்.

மஹாப் :—கொலையா? ஸிபாய்களே! என்ன இது? எப்படி நடந்தது?

முதல் ஸிபாய் :—கிராமவாஸிகளை நாங்கள் சுட்டுக் கொண்டிருந்தோம். இந்த ஸ்திரீயின் ஸஹோதரன் நடுவில் வந்து கிராமவாஸிகளின் சார்பாக எங்களுடன் சண்டை செய்தார். சண்டையில் காயப்பட்டு இறந்தார்.

மஹாப :—(கல்யாணியை நோக்கி) இவர்கள் சொல்வது ஸரிதானே?

கல் :—ஆமாம். நிரபராதிகளான எளிய குடியானவர்களை இவர்கள் கொன்று கொண்டிருந்தார்கள்; அவர்களைக் காப்பாற்ற என் ஸஹோதரர் முயன்றார். அவரையும் இவர்கள் கொன்று விட்டனர்.

மஹாப :—யுத்தத்தில் தானே கொல்லப்பட்டார்?

கல் :—ஆமாம்; சண்டையில் தான் கொன்றனர்.

மஹாப :—பின், இவர்கள் பேரில் ஓர் குற்றமும் இல்லையே, இவர்களுக்கு நான் இட்ட கட்டளையைத்தான் நிறைவேற்றி வந்திருக்கின்றனர்; நல்லது, ஸிபாய்களே, நீங்கள் வெளியே போங்கள். (ஸிபாய்கள் போகிறார்கள்.)

கல் :—ஒரு குற்றமும் செய்யாத இந்த எளிய குடியானவர்களைத் தாங்களா கொல்லச் சொன்னது?

மஹாப :—ஆமாம், நான் தான் உத்தரவு இட்டேன்.

கல் :—கிராமங்களை கொளுத்தவுமா?

மஹாரப :—ஆம்.

கல் :—இல்லை. நான் நம்பமாட்டேன். இவ்வளவு கொடியவரல்ல தாங்கள்.

மஹாரப :—என்னைக் குறித்து இந்த உயர்ந்த அபிப்ராயம் நீ கொள்வதற்கு என்ன காரணம்?

கல் :—என் பர்த்தா அவ்வளவு கொடியவராக இருப்பாரா?

மஹாரப .—ஆ, உன் பர்த்தாவா?

கல் :—ஆம், என் கணவன்தான்; பாருங்கள் என்னை; நன்றாகக் கவனித்துப்பாருங்கள். தெரிகிறதா? அடையாளம் கண்டு கொண்டீர்களா? தாங்கள் தள்ளிவைத்த ஹிந்து ஸ்திரீ கல்யாணி நான்.

மஹாரப :—கல்யாணி! கல்யாணி!! ஆனால் இவர்கள் உன் அண்ணன் அஜயஸிம்ஹரையா கொன்று விட்டனர்?

கல் :—ஆம், தங்கள் திருவடியையே தியானம் செய்து கொண்டு, தங்களிடம் நான் கொண்ட பக்தியையே வழிகாட்டியாகக் கொண்டு, நான் வீட்டை விட்டு வெளியேறின பொழுது, என் அண்ணன், அஜயஸிம்ஹர், ஆனந்த பூர்வகமாக, என்னை ரக்ஷித்து தங்களிடம் ஒப்பு அடைக்க என்னுடன்கூடத் தானும் புறப்பட்டார். வழியில் ஓர் ஸமயம் உங்களுடைய துஷ்ட ஸிபாய்களிடமிருந்து என்னைக் காப்பாற்றுகையில், பலமாக காயம் பட்டு, சில நாள் அபாய நிலைமையில் கிடந்தார். நான் அவருக்கு சுச்ரூஷை செய்து, அந்த பாழுங்குடிசையில் அவருக்குச் சிகித்ஸை செய்துகொண்டு, அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று பிக்ஷை வாங்கி வந்து அவரை வளர்த்தேன். அப்படிப்பட்ட என் அருமை அண்ணன், அவர் உயிரை வாங்கி விட்டீர்களே! ஐயோ நாதா, நான் மட்டில் ஏன் இனி வாழ வேண்டும்? என்னையும் கொன்றுவிடுங்கள்.

மஹாரப :—வேண்டாம், வேண்டாம். என்னை மன்னிக்க வேண்டும்.

கல் :—இவ்வளவு கிராமவாஸிகளும் உங்கள் உத்தரவினலா கொலை யுண்டனர்?

மஹாரப:—ஆமாம். நான்தான் என் ஸிபாய்களுக்கு ராஜபுத்திர ஜாதியையே நாசம் செய்துவிடும்படி சொன்னேன்.

கல் .—ஐயோ ஈச்வரா! என்ன செய்துவிட்டீர்கள்! இவர்தானு என் ஆராத்யதேவதை! இந்த காதகரை நம்பியா நான் ஸன்னியாஸினி ஆனேன்! ஐயோ! எனக்கு சாவும் கிடைக்காதா? ஒரே நாளில் ஒரே அடியாக என் ஸஹோதரனும் போய் என் நாதனும் போய் விட்டார்களே? சேர்ந்தாப்போல் இருவரையும் இழந்தேனே! என்னைப்போன்ற துர்ப்பாக்கியவதியும் உலகில் உண்டோ! (முகத்தை மூடிக் கொண்டு அழுகிறாள்.)

மஹாரப :—நான் ஏன் இப்படி உத்தரவு இட்டேன் என்று உனக்குத் தெரிந்தால்—

கல் .—நான் ஒன்றும் தெரிந்து கொள்ள வேண்டாம். என் மோஹம் பங்கம் அடைந்து விட்டது. இவ்வளவு நாளாக நான் பூஜித்து வந்த தாங்கள், இன்று முதல் என் பரம சத்துருவாக ஆகிவிட்டீர்கள். முகலாயர்கள் கூட அவ்வளவு சத்துரு அல்ல. அவர்களுக்கும் நமக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை. அவர்கள் மதம் காபிரிகளான நம்மை துன்புறுத்த தூண்டுகிறது! அவர்கள் செய்கிறார்கள். ஆனால் தாங்களோ, இந்த தேசத்திய பிரஜை, தங்கள் நரம்பில் சுத்த ராஜபுத்திர ரத்தம் ஓடுகிறது. பண ஆசை பிடித்துத் தன் ஜாதியினரிடமே துவேஷத்தைக் கொண்டு, அவர்களை நிர்மூலம் செய்யவேண்டு மென்று புறப்பட்டு விட்டீர்களே!

ஐயோ என்ன சொல்வேன். முகலாயர்களையும் மீறிவிட்டீர்களே! அவர்களாவது மேவாரை மட்டில் ஜயிக்க விரும்புகின்றனர். நீங்களோ ஏழைக்குடிகளையும் ஸம்ஹரித்து விட்டீர்களே. அவர்கள் மிஞ்சவிட்டதையும் பூர்த்தி செய்து விட்டீர்களே! அவர்கள் மதத்தின் எச்சிலை உண்டு நீங்களே இந்தக்கொலைகாரர்களை மாம்ஸலோலுப நர பைசாசங்களை, எளிய கிராம வாஸிகளின் மேல் ஏவிவிட்டீர்களே! மேவாரைச் சுடுகாடாக ஆக்கிவிட்டீர்கள். ஒரு பாபமும் அறியாதவர்களைக் கொன்று, பரிதவிக்க விட்டு அவர்கள் கூக்குரலால் ஆகாயத்தைபிரதித்வனிக்கச் செய்தீர்கள். இதையா முகலாயர்

கள் விரும்பினார்கள்? ஐயோ, ஈச்வரா! இப்படிப்பட்ட தேசத்துரோஹிக்கு ஒரு தண்டனையும் உம்மிடம் இல்லையா? இன்னும் ஏன் இடி விழவில்லை!

மஹாப :—கல்யாணி, நான் உனக்காகவே தான் இந்த யுத்தத்தை ஆரம்பித்தேன்.

கல் :—ஐயோ! என்க்காகவா? பொய்.

மஹாப :—இல்லை. முற்றிலும் உண்மை. என்று உன் தகப்பனார், அவருக்கு முஸல்மான்களிடம் உள்ள வெறுப்பினால் உன்னையே வீட்டைவிட்டுத் துரத்திவிட்டார் என்று கேள்வியுற்றேனோ, அன்று தான், அதே நிமிஷத்தில்தான், மேவாருக்கு விரோதமாக ஆயுதம் எடுத்தேன். அதுவரையில் மனதாலும் நினைத்ததில்லை.

கல் :—அப்படியேதான் ஆகட்டும், தாங்கள் எந்த தர்க்கரீதியாக, அல்லது மதக் கொள்கையை முன்னிட்டுக் கொண்டு, ஓர் மனிதனுடைய அபராதத்திற்காக, ஓர் ஜாதியை, ஓர் தேசத்தை அறவே நாசம் செய்ய முற்பட்டீர்கள்?

மஹாப :—இதிலென்ன ஆச்சரியம் உனக்கு? ஒரு ராவணனுடைய பாபத்தினால் லங்கையே அழியவில்லையா? அது கிடக்கட்டும். உன் தகப்பனார் மட்டும்தானா முஸல்மான்களை வெறுக்கிறார்? ஒவ்வொரு ஹிந்துவும் முஸல்மானை வெறுக்கிறான், கரிக்கிறான், சபிக்கிறான். அதை வெளியில் தெரியும்படி உன் தகப்பனார் காட்டிக்கொள்கிறார். அவ்வளவுதான். ஹிந்து ஜாதியே இதரர்களை த்வேஷிக்கிறது ஆகையால், ஹிந்து ஜாதியின் மேலேயே என் வஞ்சத்தை செலுத்துகிறேன். இந்த யுத்தம், இந்த த்வம்ஸம், அந்த துவேஷத்தின் பதில். பழிக்கு பழிவாங்க இங்கு வந்தேன்.

கல் :—முகலாய ஸேனாதிபதியே, பழிக்கு பழிவாங்க வேண்டுமானால், வஞ்சகத்தை தீர்த்துக்கொண்டே ஆகவேண்டுமானால், அது ஒரு ஜாதிமுஸல்மான், பிறவி முஸல்மான் அன்றோ செய்து கொள்ளவேண்டியது? தாங்களல்லவே! தாங்கள் இஷ்டப்பட்டுத்தானே, முஸல்மானானீர்கள்—ஹிந்துக்கள் முஸல்மான்களை வெறுக்கிறார்கள் என்று நன்றாக அறிந்து கொண்டு தானே முஸல்மான் ஆனீர்கள். தாங்களாகவே செய்து கொண்டதுதானே இது. ஏன் வீணாக, ஏதோ அநியாயத்தை தவிர்ப்பதற்காகவோ, நியாயத்தை நிலை நிறுத்துவதற்காகவோ பாடுபடுவதாக மனதில் பிரமித்துக் கொள்ள முயலுகிறீர்கள்? முஸல்மான் என்னும் உணர்ச்சியா தங்களை இந்தக் காரியத்தில் தூண்டி இருக்கிறது? இல்லை. அஹங்காரம். மமதை, மஹாபத்கானாகிய வீரசிரேஷ்டனாகிய, நான் என்னும் உணர்ச்சியன்றோ தங்களை இப்படிச் செய்யச் சொல்லுகிறது.

மஹாப :—(தனக்குள்) வாஸ்தவம்தானா? அப்படித்தானோ ஒரு வேளை................

கல் :—ஆகையால் இந்தத் துவேஷம் ஓர் ஜாதியைக் குறித்ததன்று. ஓர் வியக்தியைப் பற்றியதே. அதற்காக ஓர் தேசத்தையே நாசம் செய்ய இறங்கிவிட்டீர்கள். இதுதானா தங்கள் தர்மம்? தங்கள் சூரத்தன்மை, தங்கள் மனுஷ்ய இயற்கை! ஐயோ, ஈசுவரா! காற்றின் மேல் கட்டிய மாளிகையாக ஆயிற்றே, நான் இவரிடம் கொண்ட பக்தி—

மஹாப :—கல்யாணி நான் சொல்வதைச் சற்று—

கல் :—போதுமே போதும். என் மோஹம் பங்கமுற்றது. தாங்கள் என் கணவர் என்றும் நான் தங்கள் மனைவி என்றும் நாமிருவரும் பிரிவு அறியாத ஒரே வியக்தி என்றும் இறுமாப்புக் கொண்டிருந்தேன். அது தவறு என்று உணர்ந்தேன். நம்மிருவருக்கும் நடுவில் ஓர் பெரிய ஸமுத்திரம் உறுமுகிறது, நம்மிருவருக்கும் நடுவில் என் ஸஹோதரனின் கொலையுண்ட தேஹம் கிடக்கிறது; என் தேசத்தின் ரத்த நதி ஓடுகிறது. ரத்த வெறி பிடித்த கொலைகார தேசத்துரோஹி! ஒரு பிடி எச்சில் சோற்றுக்காக தன் உடன்பிறந்தவர்களையும் கொலை செய்யும் நீச மிருகம்! இதன் விகட அட்டஹாஸத்தைக் கேட்டும் பகவான் என்று ஒருவர் இன்னும் இருக்கிறார் என்று நம்ப முடியுமா?

(தொடரும்.)

*அப்பர்.

"அஜந்தா."

காட்சி 1.

பாடலீபுத்ர நகரத்தில் பல்லவ அரசனாகிய மகேந்திரவர்மன் ஆண்டு வரும் நாளில், திருவாமூர் என்னும் ஒரு ஊரில் மருணீக்கியார் என்னும் ஒரு வெள்ளாளரும் அவர் சகோதரி திலகவதியும் இருந்தார்கள்; சிவபக்தியில் சிறந்த வம்சத்தில் பிறந்திருந்தும், மருணீக்கியார் சமணமதத்தில் சேர்ந்து தருமசேனர் என்ற பெயர் கொண்டு, சமணருடன் காலம் கழிப்பதை நினைத்து வருந்தும் திலகவதி கடவுளை நோக்கிப் பிரார்த்திக்கிறாள். திருவாமூரில் சிவாலயம்.

திலகவதியார் :—

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

ஏ, அனுதரக்ஷகா! ஆபத்பாந்தவா! இப்பூவுலகில் யான் உயிர் வாழ்ந்திருப்பது எனது ஆருயிர்த் தம்பி மருணீக்கியின் பொருட்டேயன்றோ! அவனும் சமணசமயத்தைச் சார்ந்தான். இனி எனக்கு யார் கதி? தேவரீர் அடியாளை ஆட்கொள்பவர் என்பது உண்மையாயின், பரசமயப் படுகுழியில் வீழ்ந்தழுந்தும் தமியேனது தம்பியை அதினின்றும் தூக்கிக் காத்தருள வேண்டும்.

அசரீரி :—தபோதனியே! நீ உன் மனக்கவலையை ஒழி. உன் தம்பி துறவியாகி சிவபெருமானை அடையும் பொருட்டுப் பூர்வ ஜன்மத்திலே தவஞ் செய்திருக்கிறான். அத்தவத்தில் சிறிது வழுவுற்றதினாலே அந்நிய மதத்திலே பிரவேசித்தான். ஆனால் இறுதியிலே சன்மார்க்கத்தை யடைந்து அவன் மீண்டும் சிவபக்தனாவான்.

காட்சி 2.

(தர்மசேனர் விதிவசமாக வந்த பொறுக்க முடியாத சூலைநோயுடன் வருந்தி வருந்தி அதற்கு எவ்வித மருந்தும் தம்மைச் சுற்றியிருந்த சமணர்களின் எவ்வித மந்திரங்களும் பயனற்றதால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்.)

மருணீக்கியார் (அப்பர்) :—ஐயோ, அப்பா! அம்மா! என்ன வலியிது? என்ன செய்வேன்? என்னால் பொறுக்கமுடியவில்லையே. ஐயோ! இந்த மருந்தும் மந்திரங்களும்கூட என் நோயைப் போக்கவில்லையே. ஐயோ! என்னைக் கொல்லுகின்றதே. ஆ, உணர்ந்தேன். என் தாயினுமினிய தமக்கை திலகவதியை இதுவரை மறந்தேன். அத்தீவினைப்பயனே இது! இனி வேறு வழியில்லை. அவரை இப்பொழுதே அடைவேன். என்னை வருத்தும் இக்கொடிய சூலைநோயை போக்குதற்கு அவரன்றி எனக்கு இப்பொழுது வேறு யாருளர்?

காட்சி 3.

(தருமசேனரும் அவர் தமக்கை திலகவதியும்)

மரு :—அக்கா, அக்கா! தாயினும் மிக்க அன்போடு வளர்த்த தங்களை மறந்தேன். இக்கொடிய சூலைநோயைச் சகிக்கமுடியவில்லை. இனித் தாங்களே கதி.

திலக :—தம்பி, மருணீக்கி! எல்லாம் வினையின் பயன். எழுந்திரு. இத்திருநீற்றை அணிந்து பஞ்சாக்ஷரத்தை ஓது. இறைவன் அருள் புரிவான்.

மரு :—ஓம் நமசிவாய! ஓம் நமசிவாய! ஓம் நமசிவாய! என்ன ஆனந்தம்! என் உடம்பில் ஓர் புத்துணர்ச்சி தோற்றுகிறதே. ஆஹா!

---

* இது 26-8-1939 அன்று திருச்சி அகில இந்திய ரேடியோ நிலையத்தில் போடப்பட்டு, அனுமதியுடன் அச்சிடப்பட்டது.

கூற்ருயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்ருயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்ருதேன் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

அசரீரி :—மருணீக்கியே! அற்புத சின்மய மதுரமான தேவாரப் பதிகத்தை சிவபெருமான் மீது நீ பாடியபடியால் உனக்கு 'நாவுக்கரசு' என்னும் நாமம் ஏழுலகிலும் வழங்குமாக!

காட்சி 4.

(சமண மதத்தைவிட்டு மகா சிவபக்தனய் மாறிய திருநாவுக்கரசரிடம் சினங்கொண்டு பல்லவ ராஜனகிய மகேந்திரவர்மன், அவரைத் தன்னிடம் அழைத்துவர அமைச்சரை அனுப்பினன்; திருவதிகையில் அமைச்சரும், திருநாவுக்கரசரும் சந்திக்கிருர்கள்.)

அமைச்சர் :—ஐயா! உமது ஒழுக்கம் நாளுக்கு நாள் மாறித் தீயவழியில் சென்று மகேந்திர பல்லவ மன்னருக்கு மிகவும் அதிருப்தியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மீண்டும் மீண்டும் நீர் மன்னரது ஆக்ஞையைத் தவறுகின்றீர். உம்மைத் தமது சமூகத்திற்கு உடனே வரும்படி மன்னர் கட்டளையிட்டுள்ளார். புறப்படும்.

திருநாவுக்கரசர் :—அப்படியா? சிவபக்தனகிய நான் நரன் யாவனயினும் அவன் கட்டளையை ஏற்கமாட்டேன்.

அமை:-அரசனிட்ட தண்டனைக்குள்ளாவீர்.

திருநா :—

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ
மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற்சங்க வெண்குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி
னேமே.

அமைச்சரே! நாம் நீங்கள் அழைத்தபடியே வரக்கடவோமல்லோம்.

அமை :—சுவாமி! என்னை மன்னிப்பீராக! அரசாது கட்டளையை நிறைவேற்றுவது என் கடமை. ஆகவே தாம் தயைகூர்ந்து என்னுடன் வர வணக்கமாய் கேட்டுக்கொள்கிறேன். தாம் எதை சொல்ல விரும்பினலும் அதை எங்கள் அரசர் சமூகத்திலேயே சொல்லலாம். இப்பொழுது தாங்கள் என்னுடன் வர மறுத்தால் நாம் இருவரும் பெருந் துன்பத்திற்குள்ளாகுவோமென்பது திண்ணம்.

திருநா:—அமைச்சரே! கவலையுராதீர். இதோ வருகிறேன். அடியேனுக்கு வரும் அபாயங்களுக்கெல்லாம் சிவபெருமானிருக்கிருர்.

என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்ருேம்
ஒன்றினல் குறையுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப்
போனர்
பொன்றினர் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து
ளோமே.

காட்சி 5.

(பல்லவ ராஜனது ஆணையின்படி திருநாவுக்கரசர் சுண்ணம்புக் காளவாயில் இடப்பட்டார்.)

ஜனத்திரள் :—என்ன ஆச்சரியம் இது! இந்நீற்றறையிலுங்கூட இவர் என்ன மகிழ்ச்சியோடு இருக்கிருர்! ஏதோ பாடுகிருர்.

திருநா :—

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

காட்சி 6.

(நாவுக்கரசர் நஞ்சூட்டப் பெறுகிருர்; யானைக் காலால் இடறுவிக்கப் பெறுகிருர்; இறுதியில் கல்லிற் பூட்டிக் கடலில் தள்ளப்படுகிருர்.)

திருநா :—

இருவினைப்பாசமும் மலக்கலார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்களேறிட
அருளும் மெய் அஞ்செழுத்து அரசை யிக்கடல்
ஒருகன் மேலேற்றிடல் உரைக்கவேண்டுமோ?

ஜனத்திரள் :—ஆச்சரியம்! ஆச்சரியம்! திருத்தொண்டர் தொட்ட கல்லே தெப்பமா யிற்றே! என்ன பரவசமாகப் பாடுகின்றார்!

திருநா :—

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கை தொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.

காட்சி 7.

(*திருநாவுக்கரசர் தல யாத்திரையாகப் புறப்பட்டு திருவெண்ணெய்நல்லூர், திருவாமத்தூர், திருக்கோவலூர், பெண்ணாகடம் முதலிய பதிகளைத் தரிசித்து சிதம்பரம் வருகிறார்.*)

திருநா :—

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

(*ஏழு வயதுக் குழந்தையாகிய திருஞான சம்பந்தரது மகிமையை அடியார்கள் சொல்லக் கேட்டு அவரை வணங்கவேண்டி, திருநாவுக்கரசர் சீர்காழி அடைந்தார். திருநாவுக்கரசர் தம்மைக் காண வருகின்றதை யறிந்த திருஞான சம்பந்தர் என்னும் அத்தெய்வக் குழந்தை, அடியார் கூட்டத்தோடு திருநாவுக்கரசரை எதிர்கொண்டவளவில் ''அப்பரே!'' என்று அவரை அன்போடு அழைத்தது. அது முதலாகத் திருநாவுக்கரசருக்கு ''அப்பர்'' என்னும் ஒரு அருமைத் திருநாமம் வழங்கலாயிற்று.*)

காட்சி 8.

(*திங்களூரில் அடியார் பக்தியிற் சிறந்து விளங்கிய அப்பூதியடிகளின் இல்லம்; அப்பரைக் கண்டு தரிசிக்க அவர் ஆவல்கொண்டு நிற்கிறார்.*)

அப்பூதியடிகள் :—கல்லைத் தெப்பமாகக் கொண்டு கரையேறிய திருநாவுக்கரசரே என் உயிர்; என் தெய்வம். செயற்கரிய செய்த அப்பெரியாரே எனக்கு எல்லாமாவர். ஆ! இறைவா! அவரை இம்மையில் யான் காணும் பேறு எனக்குக் கிட்டுமோ?

திருநா :—

தலையே நீ வணங்காய்—
தலை மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்
கண்காள் காண்மின்களோ—
கடல் நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசி நின்றாடும் பிரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ.

அப்பூதி :—சுவாமிகளே! தங்கள் வருகை எமக்குப் பெரிதும் மகிழ்ச்சியை ஊட்டுகிறது. தங்கள் நிவாசம் எங்கே? எங்கு செல்லுகின்றீர்கள்?

திருநா :—நாம் தல யாத்திரையாக வருகின்றோம். வழியில் தங்களது தண்ணீர்ப் பந்தல் முதலிய அறச் செல்வங்களை கண்டு மகிழ்ந்து தங்களைக் காணவே வந்தோம். தாங்கள் தண்ணீர்ப்பந்தலில் சிவபெருமான் பெயரை எழுதாது வேறு ஒருவர் பெயரை எழுதியது ஏன்?

அப்பூதி :—நன்கு விளம்பினீர். இப்பூவுலகில் திருநாவுக்கரசரது பெருமையை அறியாதார் யார்? அப்பெருந்தகையின் பெயரையா வேறு ஒருவர் பெயர் என்றீர்? இச்சிவ வேடத்துடன் வந்த நீர் யார்?

திருநா :—அன்புடையீர்! இறைவன் சூலையினால் ஆட்கொண்ட அச்சிறுமையேன்தான் யான்.

அப்பூதி:—ஆகா! என்ன தவறு செய்தேன்? பெருளுடையீர்! மன்னித்தருள்க. அடியே

னது தவப்பயன் கிட்டியது. அடியேன் இனித் தங்களை விட்டு அரைக்கணமும் பிரியேன். தாங்கள் எனது இல்லில் திருவுள்ளம் உவந்து திருவமுது செய்தல் வேண்டும்.

திருநா :—தங்கள் அன்பிற்கும் எல்லையுண்டோ? அவ்வாறே செய்வோம்.

அப்பூதி :—அப்பா, மூத்த திருநாவுக்கரசு! மூத்த திருநாவுக்கரசு!

பையன் :—என் அப்பா?

அப்பூதி :—நீ விரைந்து சென்று நமது வாழைக் கொல்லையில் இலைபறித்து வா.

பையன் :—இதோ போகிறேன்.

(தெருவில் பாம்பாட்டி வித்தை காட்டுகிறான்)

குரல் :—அப்பா மூத்த திருநாவுக்கரசு! பாம்புக்கு அருகில் போகாதே! அருகில் போகாதே.

மூத்த திருநாவுக்கரசு :—ஆ! பாம்பு தீண்டி விட்டதே! ஐயோ! ஐயோ!

திருநா :—அன்பரே! உம் புதல்வர்களையெல்லாம் அழையுங்கள். யான் அமுது செய்யுமுன் திருநீறணிவிக்கவேண்டும். எங்கே மூத்த திருநாவுக்கரசு?

அப்பூதி :—ஐயனே! அவன் இங்கு உதவான். அவன் அரவு கடிக்க மாண்டான்.

திருநா :—அரவு கடித்து மாண்டானா? அவனன்றி நாம் அமுது செய்வது எவ்வாறு?...... ஈசா!

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே.

பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்
பின்பல்
பத்துக்கொ லாமெயி றுந்திரிந் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்தலை
பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே.

பாட வடியார் பரவக் கண்டேன்
பத்தர்கணங் கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல்முழவம் அதிரக் கண்டேன்
அங்கைஅனல் கண்டேன் கங்கை யாளைக்
கோட லாவார் சடையிற் கண்டேன்
கொக்கினிதழ் கண்டேன் கொன்றை
கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூரடிகளைநான் கண்ட வாறே.

பாலின் மொழியாளோர் பாகங்கண்டேன்
பதினெண் கணமும் பயிலக் கண்டேன்
நீல நிறமுண்ட கண்டங் கண்டேன்
நெற்றிநுதல் கண்டேன் பெற்றங் கண்
டேன்
காலைக் கதிர் செய் மதியங் கண்டேன்
கரந்தை திருமுடிமேல் தோன்றக் கண்
டேன்
மாலைச் சடையும் முடியுங் கண்டேன்
வாய்மூ ரடிகளை நான் கண்ட வாறே.

இனி யான் விரும்புவது யாது?

மூ. திருநா :—அப்பா, அப்பா! சுவாமி! வணங்குகின்றேன்.

அப்பூதி :—சுவாமி! தங்கள் கருணை எங்கள் மூத்த திருநாவுக்கரசை உயிர்ப்பித்தது. இவனைத் தங்கள் அடியானாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

அப்பர் :—இதில் நாம் செய்வதொன்றுமில்லை. எல்லாம் அவன் செயல்!

காட்சி 9.

(சித்திரை மாதம்; சதய நக்ஷத்திரம்; அப்பர் கயிலையைக் காணச்செல்லும் வழியில் ஒரு மலைக் காடு; அப்பரும் ஒரு முனிவரும்.)

முனிவர் :—நீர் அங்கமெல்லாம் அழிய வருந்தி இக்கொடிய காட்டிற்கு வந்தீரே.

திருநா :—முனிவரே! பரமசிவன் உத்தா கைலாயத்தில் உமாதேவி சமேதராய் வீற்றிருக்குந் திருக்கோலத்தைத் தரிசிக்க விரும்பி வந்தேன்.

முனிவர் :—தேவர்களாலும் அடைதற்கரிய கயிலைமலை மனிதர்களால் அடைதற்கு எளிதா? நீர் திரும்பி விடுதலே உத்தமம்.

திருநா :—திருக்கயிலாயகிரியில் சிவபெருமானைத் தரிசித்தாலன்றி அநித்தியமாகிய இவ்வுடலை கொண்டு செல்லேன்.

முனிவர் :—நாவுக்கரசு! எழுந்திரு. இத் தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றை யடைந்து சிவபெருமான் கயிலையில் வீற்றிருக்கும் காட்சியை அத்தலத்தில் தரிசித்து வணங்குவாயாக!

திருநா :—என்ன பாக்கியம்! பரமேசுவரனே என் கண்முன் தோற்றுகிறார்.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

*ஸ்வப்ன வாஸவதத்தம்.

(வே. நாராயணன், M.A., M.L.,)

[இப்பெயரை யுடைய வடமொழி நாடகத்தைத் தழுவி ரேடியோவுக்கென எழுதப்பெற்றது.]

அங்கம் 1.

சேவகர் :—விலகு, வழிவிட்டு விலகு.
(துறவிவேஷம் பூண்ட யூகியும், ஆவந்திகை வேஷம் பூண்ட வாசவதத்தையும் வருகிறார்கள்.)

யூக :—என்ன இது! சன்னியாசிகள் வாசம் செய்யும் இந்த தபோவனத்திலுமா இந்த தடபுடல் எல்லாம்.

ஆவந்திகை :—விலகு, விலகு என்று என்னையுமா சொல்வது. யார் அது?

யூகி :—யார் சொல்லக்கூடும்? விவேகமில்லாதவர்கள்தான் இப்படிச் சொல்வார்கள்.

ஆவந் :—என்னையும் இப்படிச் சொல்ல நேரிட்டதே.

யூகி :—உண்மையைத் தெரிந்து கொள்ளாத வரையில், தேவதைகளைக்கூட மூடர்கள் இப்படித்தான் அவமதிப்பார்கள்.

ஆவந் :—காட்டுவழியிலே கல்லிலும் முள்ளிலும் நடந்ததுகூட என்னைத் துன்புறுத்தவில்லை. இந்த அவமானம் என் மனதைப் புண்படுத்துகிறது.

யூகி:—சேவகர்கள் முன்னே வழி விலக்கிச் செல்ல, பின்னாலே பவனி வருவது ஒரு பெருமையல்லவா? இவ்விதப் பெருமைகளை எல்லாம் நீங்கள் அநுபவிக்கவில்லையா? இது உங்களுக்குப் புதிதல்லவே. மறுபடியும் நமது ராஜா வெற்றி பெற்றதும் தாங்கள் இவ்விதப் பெருமைகளை எல்லாம் பெற்று இன்புறுவீர்கள்.

சேவ :—விலகையா, விலகு. அம்மா, வழியை விட்டு விலகுங்கள்.

(கஞ்சுகி பிரவேசிக்கிறான்.)

யூகி :—ஆவந்திகே! இதோ வரும் இந்தக் கஞ்சுகியாரைப் பார்த்தால் நல்லவர்போலத் தோன்றுகிறது. இவர் பக்கத்திலே ஒதுங்கி நிற்போம், வா. கஞ்சுகியாரே! ஏன் ஐயா, இந்தச் சேவகர்கள் வழி விலக்குகிறார்கள்?

கஞ்சுகி :—முனிவரே, எங்கள் மகாராஜாவின் சகோதரி ராஜகுமாரி பதுமாவதி தன் தாயார் ராணி மகாதேவியைக் காண்பதற்கு இங்கே வருகிறாள். மகாராஜாவுக்குப் பட்டாபிஷேகம் ஆன பின்பு பெரிய ராணியார் இங்கேதான் துறவறம் பூண்டு வாழ்கின்றார்கள். ராஜகுமாரி இன்றிரவு இங்கே தங்கியிருந்து நாளைய தினம் நகரத்திலுள்ள அரண்மனைக்குத் திரும்புவாள். எங்கள் இளவரசி மிகவும் தருமசிந்தனையுள்ளவள். தன்னை யாசிப்பவர்களுக்கு வேண்டியதையெல்லாம் கொடுப்பவள்.

(ராஜகுமாரி பதுமாவதியும் தோழி மதுகரிகையும் பிரவேசிக்கிறார்கள்.)

மதுகரி :—வாருங்கள் இப்படி, இளவரசியே, இப்படி வாருங்கள்.

பதுமா :கஞ்சுகியாரே, அடியாளுக்கு அருள் புரிய யாரேனும் பெரியோர் காத்திருக்கிறார்களா, பாரும். தங்களுக்கு வேண்டியவற்றைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறு அவர்களைப் பிரார்த்தித்துக் கொள்ளும்.

கஞ் :—அப்படியே யாகட்டும். முனிச்சிரேஷ்டர்களே, வனவாசிகளே, பெரியோர்களே! எங்கள் அரசகுமாரி பதுமாவதிதேவி தங்களுடைய அனுக்கிரகத்தை நாடி இங்கு வந்திருக்கிறாள். அவளை ஆசீர்வதிக்க வேண்டும். உங்களில் யாருக்காவது பொற்கலசம் வேண்டுமா? பட்டுப் பீதாம்பரம் வேண்டுமா?

---

* இது சில மாறுபாடுகளுடன் 10-6-40 அன்று திருச்சி அகில இந்திய ரேடியோ நிலையத்தில் போடப்பட்டு, அனுமதியுடன் அச்சிடப்பட்டது.

குருதக்ஷிணை செலுத்துவதற்கு பணம் வேண்டுமா? என்ன வேண்டுமானாலும் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

யூகி :—(தனக்குள்) இதுதான் நல்ல தருணம். (வெளிப்படையாய்) ராஜகுமாரி, தங்களிடம் யாசகனாக வந்தேன்.

பது :—பெரியோரே, நமஸ்காரம். இப்பொழுதுதான் நான் இங்கே வந்ததின் முழுப் பயனைப் பெற்றேன்.

கஞ் :—பெரியோரே, என்ன வேண்டும் உமக்கு?

யூகி :—அம்மா அரசகுமாரி. இதோ இவள் எனக்குத் தங்கை முறை இவள் பெயர் ஆவந்திகை. தன் கணவனைவிட்டு சில காலம் பிரிந்திருக்க நேரிட்டிருக்கிறது. இவளை வைத்துப் பரிபாலிக்கத் தக்க இடம் எது என்று தேடித் திரிகிறேன். தரும சிந்தையுள்ள நீங்கள் இவளைத் தோழியாகக் கொண்டு ஆதரிக்க வேண்டும். இதுவே என் வேண்டுகோள்.

கஞ் :—ராஜகுமாரி, சன்னியாசி சொல்வதைக் கேட்டீர்களா? பொருள் கொடுக்கலாம். உயிர்கூடக் கொடுத்து விடலாம். அடைக்கலமென்று வரும் குலஸ்திரீயைக் காத்துப் பரிபாலிப்பது மிகவும் கஷ்டமான காரியம்.

பது :—வேண்டியதைத் தருகிறேன் என்று சொல்லிவிட்டேன். சொன்ன சொல் தவறக் கூடாது. இவருடைய அபீஷ்டத்தை நிறைவேற்றத் தான் வேண்டும்.

கஞ் :—அரசகுமாரி, தங்களுக்கே தகும் இவ்வழகிய வார்த்தை. ஐயா பெரியோரே, உமது சகோதரியைப் பரிபாலிப்பதாக இளவரசி ஒப்புக் கொள்கிறாள்.

யூகி :—இளவரசி நன்கு வாழ்க. அம்மா ஆவந்திகே! இனி இளவரசியே உனக்குத் துணைவி.

பது :—இங்கே வா, ஆவந்திகே. நீ என் தோழியாகிவிட்டாய். இனி நீ ராணிபோல் வாழலாம்.

மது :—ஆமாம், அம்மா. இவளைப் பார்த்தாலும் ராணிபோல் வாழ்ந்தவள் என்றே தோன்றுகிறது. அதோ, யாரோ ஒரு பிரம்மசாரி வருகிறார்.

(பிரம்மசாரி வருகிறான்.)

கஞ் :—வாருங்கள், ஐயா. எங்கள் இளவரசி செய்யும் பூஜையை ஏற்றுக் கொள்ளுங்கள். தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்.

பிரம்மசாரி :—இலாவாணகம் என்ற ஊரிலிருந்து.

யூகி :—தங்கள் வித்தியாப்பியாசம் முற்றுப் பெற்றதா?

பிரம்மசா :—இல்லையே. அதற்குள் ஊர் தீப்பற்றி எரிந்துபோயிற்று. ஆசிரமங்கள் எல்லாம் தீக்கு இரையாயின. படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு ஊருக்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

யூகி :—பாவம்!

பிரம்மசா :—இதனாற்கூட எனக்கு வருத்தம் இல்லை, ஐயா. அந்த உதயண ராஜா இருக்கிறாரே, அவரைக்காணச் சகிக்கவில்லை. பாவம்! ஊர் தீப்பற்றியபோது அவர் வேட்டையாடப் போயிருந்தார்; திரும்பி வந்து பார்த்தால் ராணி செத்துச் சாம்பலாயிருந்தாள்.

ஆவந் :—ஐயோ!

பிரம்மசா :—ராணியைக் காப்பாற்றப் போய் மந்திரி யூகியும் தீக்கு இரையானார்.

யூகி :—உண்மையாகவா?

பிரம்மசா :—ஆமாம். இந்தச் செய்தியெல்லாம் கேட்டதும் மகாராஜா தானும் எரிகிற தீயிலே விழப்பார்த்தார். விதூஷகர் வசந்தகர் இல்லாவிட்டால் அவரும் சாம்பலாய்ப் போயிருப்பார்.

யூகி :—அப்புறம்?

பிரம்மசா :—ராணி அணிந்திருந்த ஆடையாபரணங்கள் கீழே யுருகிக் கரிந்து கிடந்தன. அவற்றைக் கண்டதுமே அரசர் மூர்ச்சையாகி விட்டார்.

ஆவந் :—ஐயோ. என்ன கொடுமை!

மதுகரி :—அரசகுமாரி, தங்கள் தோழி அழுகிறாள்.

பது :—இந்தக் கஷ்டத்தையெல்லாம் கேட்டால் யார்தான் அழமாட்டார்கள்? எனக்குக் கூட துக்கமாய் இருக்கிறது.

யூகி :—அப்புறம்.

பிரம்மசா :—அப்புறம் வெகு நேரம் கழித்து, அரசர் மூர்ச்சை தெளிந்து எழுந்தார். ஆனால் உடனே மறுபடியும் புழுதியிலே புரண்டு உருண்டு, 'வாசவதத்தை! அவந்தி ராஜ புத்திரி! என் அருமைக்காதலி!" என்றெல்லாம் புலம்பினார். துக்கச் செய்தியை அதிகம் வளர்ப்பானேன்? இவ்வளவு அன்புக்குப் பாத்திரமாக இருந்தவள் இறந்தும் இறவாதவளே. நான் போய் வருகிறேன், அம்மா.

கஞ் :—போய் வாரும்.

யூகி :—நானும் அரசகுமாரியிடம் விடைபெற்றுக் கொள்கிறேன்.

(பிரம்மசாரியும், யூகியும் போகிறார்கள்.)

கஞ் :—அரசகுமாரி, அஸ்தமனவேளையாயிற்று. நாமும் ஆசிரமத்திற்குள் செல்வோம், பெரிய ராணியைக்காண.

அங்கம் 2.

(பதுமாவதியும் ஆவந்திகையும் பந்தாடுகிறார்கள்.)

பது :—பந்து விளையாடினது போதுமா?

ஆவ :—உன் கையெல்லாம் செக்கச்செவேரென்று சிவந்து விட்டது. முகத்திலே முத்துப் போல் வியர்வை அரும்பியிருக்கிறது. சற்று உட்காரலாம், வா. (இருவரும் உட்காருகிறார்கள்.)

மது :—ஏன் விளையாட்டை நிறுத்திவிட்டீர்கள். இன்னும் சில நாளிலே அரசகுமாரிக்கு ஓடியாடி விளையாடும் கன்னிப்பருவம் கழிந்து போமே.

ஆவந் :—ஆமாம், விளையாடுவோம், வா, மகாசேனர் மருமகளே!

பது :—என்ன, ஆவந்திகே! நீயுமா பரிகாசம் செய்கிறாய்?

மது :—யார் அம்மா மகாசேனர்?

ஆவந் :—அவர் தான் உஜ்ஜயினி மன்னர்.

மது :—அந்த மன்னரின் மகனைத்தான் விவாகம் செய்து கொள்ளமாட்டேன் என்று ராஜகுமாரி சொல்லிவிட்டாளே.

ஆவ :—அப்படியா? அது எனக்குத் தெரியாது. ஏதோ தூதன் ஓலை கொண்டு வந்தான் என்று சொன்னார்களே, கலியாணம் நிச்சயமாயிருக்கும் என்று நினைத்தேன். ஆனால் இளவரசி விரும்புகிற பாக்கியவான் யாரோ?

ஆவந் :—என்ன, ஆவந்திகே, நீ சதா இளவரசியோடே இருக்கிறாய். இதுகூடவா தெரிந்து கொள்ளவில்லை? (மெல்லிய குரலில்) உதயண ராஜாதான். அவரது உயர்ந்த குணங்களைக் கேட்டது முதலே அவரையே காதலிக்கிறாள்.

ஆவந் :—அப்படி என்ன உயர்ந்த குணம் அவரிடத்தில்?

மது :—உதயணராஜா பரமதயாளு என்பது உலகப் பிரசித்தம். ஆனால் அவர் குரூபியோ என்னவோ? யார் கண்டார்கள்?

ஆவ :—குரூபியா? அவர் பேரழகு வாய்ந்தவரல்லவா?

பது :—ஆவந்திகே! இது உனக்கு எப்படித் தெரியும்?

ஆவ :—அவர் அழகு வாய்ந்தவர் என்றே எங்கள் உஜ்ஜயினியிலே எல்லாரும் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

பது :—ஆமாம்; அந்த ஊரிலே சிலகாலம் அவர் தங்கியிருந்தார் அல்லவா? அப்பொழுது அவரை எல்லாரும் பார்த்திருப்பார்கள். வடிவழகு என்பது யாரையும் வசீகரிக்கும் அல்லவா? (பதுமாவதியின் செவிலித்தாய் வருகிறாள்.) அதோ என்னை வளர்த்த செவிலித்தாய் வருகிறாள். அம்மா! நமஸ்கரிக்கிறேன்.

செவிலி :—பதுமாவதி! உனக்கு சகல மங்களமும் உண்டாகட்டும். உனக்கு விவாகம் நிச்சயமாயிருக்கிறது, அம்மா.

ஆவ :—மாப்பிள்ளை யாரோ?

செ :—வத்ஸ தேசத்து ராஜா, உதயண தேவர்.

ஆவ :—அவர் எங்கிருக்கிறார் இப்பொழுது?

செ :—நமது அரண்மனையிலேதான் இருக்கிறார்.

ஆவ :—இது என்ன அநியாயம்?

செ :—அநியாயமென்ன இதிலே. நமது பதுமாவதியை மணந்துகொள்வதற்கு யார்தான் சம்மதிக்கமாட்டார்கள்?

ஆவ :—வாசவதத்தை இறந்தபோது அவ்வளவு பிரலாபித்தவர் அதற்குள்ளேயே அவளை முற்றிலும் மறந்துவிட்டாரே! இதைத்தான் அநியாயம் என்றேன்.

செ :—சென்றது இனி மீளாது என்றே பெரியோர் மனதைத் தேற்றிக்கொள்வர். 'மாண்டார் வருவரோ, மாநிலத்தீர்' என்பதைக் கேட்டதில்லையா?

ஆவ :—அவர் தாமாகவே வந்து பதுமாவதியை மணக்க விரும்பினரா?

செ :—தாமாக வந்து வேண்டவில்லை. ஏதோ ராஜகாரியமாக இங்கே வந்தார். நமது மகாராஜாதான் அவருடைய குலத்தையும் குணத்தையும் ரூபலாவண்யத்தையும் யௌவனத்தையும் கண்டு தாமாகவே பதுமாவதியை அவருக்குக் கல்யாணஞ் செய்து தருவதாகச் சொன்னார். அவர் சற்று யோசனை செய்த பின்பே சம்மதித்தார். குழந்தாய், பத்மாவதி! இன்றே சுப நக்ஷத்திரமாம். ஆகையால் இன்றே திருமணம் நடத்த வேண்டுமென்பது மகாராணியவர்கள் உத்திரவு. சீக்கிரம் போவோம், வாருங்கள்.

அங்கம் 3.

(ஆவந்திகை தனியே உத்தியானத்தில் மரத்தடியிலே உட்கார்ந்து பாடிக்கொண்டிருக்கிறாள். அங்கே தோழி மதுகரிகை வருகிறாள்.)

மது :—ஆவந்திகை எங்கே? அதோ அசோக மரத்தடியிலே சோகமே வடிவெடுத்தாற் போல் உட்கார்ந்திருக்கிறாள். ஆவந்திகே! எவ்வளவு நேரமாக உங்களைத் தேடுவது?

ஆவ :—எதற்கு என்னைத் தேடவேண்டும், மதுகரிகே?

மது :—தாங்கள்தாம் குலம், குணம், எல்லாவற்றிலும் மிகச் சிறந்தவர்களாம். அதனாலே, மகாராணியவர்கள் தங்கள் கையாலேயே மணமாலை தொடுக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

ஆவ :—யாருக்கு இந்த மணமாலை?

மது :—இதென்ன கேள்வி? நமது இளவரசிக்குத்தான். ஏன் அம்மா சும்மா இருக்கிறீர்கள்? சும்மா இருப்பதற்கு இதுவா சமயம்? மணமகனார் மங்கள ஸ்நானம் செய்யப் போயிருக்கிறார். அவர் வருமுன் மாலை கட்டியாக வேண்டாமா?

ஆவ :—ஆகட்டும், பூக்கூடையை இங்கே கொடு. மதுகரிகே! நீ அவரைப் பார்த்தாயா?

மது :—பார்த்தேனே. இளவரசிக்கு வாய்த்த மணமகனைக் காணவேண்டுமென்று ஆசை இராதா?

ஆவ :—அவர் எப்படி இருக்கிறார்?

மது :—இவ்வளவு அழகு வாய்ந்தவரை நான் எங்கும் கண்டதேயில்லை.

ஆவ :—அவ்வளவு அழகுள்ளவரா?

மது :—கரும்பு வில்லையும் புஷ்ப பாணத்தையும் கையிலே கொடுத்துவிட்டால், அவர் ஸாக்ஷாத் மன்மதன்தான் என்று ஸத்தியம் செய்வேன்.

ஆவ :—போதும் இந்தப் பேச்சு.

மது :—ஏன் மனதில் ஆயாசப்படுகிறாய்?

ஆவ :—ஆயாசப்படவில்லை. ஆனாலும் பரபுருஷரைப் புகழ்வதும் புகழக் கேட்பதும் தவறல்லவா?

மது .—பேச்சுவாக்கிலே மாலை தொடுப்பது மறந்துபோயிற்றே.

ஆவ :—ஆமாம் அடி. இதோ ஒரு கிமிஷத்திலே மாலே கட்டுகிறேன். மதுகரிகே! இது என்ன பச்சிலே?

மது :—இதுதான் சுமங்கலீகரணம் என்பது. இதைச் சூட்டிக்கொண்டால் வெகு காலம் சுமங்கிலியாக வாழலாம்.

ஆவ :—நல்லது. இப்பச்சிலேயை அதிகமாய்ச் சேர்த்து மாலே கட்டுகிறேன். இப்பச்சிலேயின் பெயர் என்ன?

மது :—எங்கே அதைக் காட்டு. ஓ இதுவா? இதுதான் சக்களத்திகொல்லி.

ஆவ :—இது வேண்டவே வேண்டாம்.

மது :—ஏன் அம்மா?

ஆவ :—இவருடைய மனேவி ராணி வாசவதத்தைதான் இறந்துவிட்டாளே? சக்களத்தி இருந்தாலன்றே இப்பச்சிலேயை உபயோகிக்கவேண்டும்? இதோ தாதி நம்மைத் தேடிக்கொண்டு வருகிருள்; மாலேயும் கட்டி முடிந்தது.

தாதி :—அம்மா, ஆவந்திகை! மாலே கட்டி முடிந்ததா? மாலேயை இப்படிக் கொடு. மகாராணி அவசரப்படுகிருர்கள். மணமகனுர் மங்கள ஸ்நானஞ் செய்துவிட்டு விவாக மண்டபத்திற்கு வந்துவிட்டாரம்.

ஆவ :—இந்தா, மணமாலே.

தாதி :—ஆவந்திகை கெட்டிக்காரி. இவ்வளவு சீக்கிரத்தில் எவ்வளவு அழகாக மாலே கட்டிவிட்டாள், பார். (இருவரும் போகிருர்கள்.)

காட்சி 4.

(உத்தியானத்தில் பதுமாவதியும் ஆவந்திகையும் உலாவுகிருர்கள். தோழி அங்கே வருகிருள்.)

மது :—அரசகுமாரி, ஏன் இப்பொழுது உத்தியானத்திற்கு வந்தீர்கள்?

பது :—மதுகரிகே, சேபாலிகைச் செடி புஷ்பித்து விட்டதா?

மது :—அதோ, பவளங்கள் இடையிடையே கோத்த முத்துமாலேபோல் சேபாலிகைக் கொடி பூத்துப் பிரகாசிக்கிறது, பார்த்தீர்களா?

பது :—ஆனுல், இந்தப்பூக்களே நீ ஏன் பறித்துக் கொண்டு வரவில்லே?

மது :—இதோ பறித்துக்கொண்டு வருகிறேன். சற்று இந்தப் பளிங்குக்கல்லில் உட்கார்ந்திருங்கள்.

பது :—ஆவந்திகே, சற்று இங்கே உட்கார்ந்திருப்போம், வா.

மது :—இதோ பாருங்கள், அம்மா, கை நிறைய சேபாலிகைப்பூக் கொண்டு வந்திருக்கிறேன்.

பது :—ஆவந்திகே, இந்தப்பூக்கள் எவ்வளவு விசித்திரமாக இருக்கின்றன, பார்த்தாயா?

ஆவந் :—ஆமாம். மிக அழகாக இருக்கின்றன.

மது :—இன்னும் கொஞ்சம் பறித்துக் கொண்டு வரட்டுமா?

பது :—வேண்டாம், மதுகரிகை; போதும்.

ஆவந் :—ஏன் போதும் என்கிருய்?

பது :—கொடிகளிற் பூப்பறியாது இருந்தால் என் கணவர் இந்தப் பூக்களில் ஸமிருத்தியைப் பார்த்து என்னேக் கொண்டாடுவார்.

ஆவந் :—பதுமாவதி, மனதுக்கு இனிய வர்தானே உன் கணவர்?

பது :—அது என்னவோ எனக்குத் தெரியாது. ஆனுல் அவரை அரைக்ஷணம் பிரிந்தால் கூட என்னுல் சகிக்கமுடியவில்லே.

ஆவந் :—தங்கள் கணவருக்கு வீணே நன்ருக வருமாமே. தங்களுக்கு வீணே கற்றுக் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறதுதானே.

பது :—கேட்டேன்.

ஆவந் :—அவர் என்ன சொன்னுர்?

பது :—பெருமூச்சுவிட்டு வெறுமனே இருந்து விட்டார்.

ஆவந் :—அப்படியா?

பது :—வீணைப் பேச்செடுத்ததும் அவருக்கு ராணி வாசவதத்தையின் நினைவு. ஆனால் என்மேலுள்ள பிரியத்தால் கண்ணீரையும் சோகத்தையும் அடக்கிக் கொண்டுவிட்டார்.

(உதயணனும் வசந்தகனும் வருகிறார்கள்)

வச.—அரசே, இந்த புஷ்பங்கள் கீழே விழுந்திருப்பதால் இந்த இடம் எவ்வளவு ரமணீயமாக இருக்கிறது! இப்படி வாருங்கள்.

உதயணன் :—வசந்தகா, உஜ்ஜயினியிலே நான் வாசவதத்தையைக் கண்டபோதே காமதேவன் தன்னுடைய பஞ்சபாணங்களையும் என்மீது எறிந்துவிட்டானே; இன்று என்னை இவ்வாறு வருத்துவதற்கு ஆறாவது பாணம் அவனுக்கு எங்கிருந்து கிடைத்தது?

வச :—ராணி பதுமாவதி எங்கே சென்றாளோ தெரியவில்லையே. எங்கே தேடியும் காணவில்லை.

பது :— இது விதூஷகர் குரல் அல்லவா? ஆம். அதோ விதூஷகருடன் என் கணவர் வருகிறார். என் கணவரைக் காணச் செல்லாமல் உனக்காக நானும் இங்கேயே இந்த மாதவிப்பந்தலிலே மறைந்திருப்பேன். (ஆவந்திகையும், பதுமாவதியும் மாதவிப்பந்தலுள் மறைகிறார்கள்.)

வச :—அரசே, ராணி பதுமாவதி இங்கே வந்திருக்கவேண்டும்.

உதய :—அது எப்படி தெரிந்தது உனக்கு?

வச :—இதோ சேபாலிகை மலர்கள் கீழே சிதறிக் கிடக்கின்றன, பார்த்தீர்களா?

உதய :—(மலர்களைக் கையில் எடுத்து) இம் மலர்கள் எவ்வளவு விசித்திரமாக இருக்கின்றன. வசந்தகா! பதுமாவதி வருமளவும் இந்த மேடையிலே உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்போம், வா.

வச :—கோடை வெயிலால் இந்த மேடை சூடாகி இருக்கிறது. இங்கே உட்காரவேண்டாம். அந்த மாதவிப்பந்தலுக்குப் போவோம்.

உதய :—உன் இஷ்டம்; நீ முன்னாலேயே போ.

வச :—அப்படியே.

பது :—இந்த பாழாய்ப்போன விதூஷகர் நாம் மறைந்திருக்கும் இடத்திற்கு வருகிறாரே. நாம் என்ன செய்வோம், தோழி?

ஆவந் :—பயப்படாதீர்கள். நான் இந்தக் கொடியை ஆட்டினால் பூக்களிலே மொய்த்துக் கிடக்கும் வண்டுகள் மேலே கிளம்பிவிடும். வண்டுகளைக் கண்டால் இந்தப் பிராமணருக்குப் பயம். உள்ளே நுழையமாட்டார். (கொடியை ஆட்டுகிறாள்.)

வச :—அரசே, நில்லுங்கள். சற்று நிதானியுங்கள்: பின்னால் வராதீர்கள்.

உதய :—வந்தால் என்ன?

வச :—என்னையே கஷ்டப்படுத்தும் இந்தத் தேனீக்கள் தங்களைக் கண்டால் விடுமா? (தேனீக்களை வெருட்டுகிறார்)

உதய :—வசந்தகா, இந்தத் தேனீக்கள் மதுவுண்டு ரீங்காரம் செய்கின்றன. இவற்றை வெருட்டாதே. அதோ இவை காதலிகளோடு இன்புறுகின்றன. இவற்றைக்கலைப்பது மகா பாபம். என்னைப்போல இவைகளும் காதலிகளைப் பிரிந்து வருந்தவேண்டுமா?

வச :—இதோ திரும்பி வந்துவிட்டேன். இங்கேயே உட்காருவோம்.

ஆவந் :—அரசகுமாரி! நாம் கூண்டில் அடைபட்ட கிளிகள்போல் ஆனோமே. வெளியே வரும் வழியிலே அல்லவா இந்த வசந்தகரும் அரசரும் உட்கார்ந்து கொண்டு விட்டார்கள்.

வச :—அரசே, இந்த வனத்திலே யாரும் இல்லை. தனிமையிலே தங்களை ஒரு கேள்வி கேட்கவிரும்புகிறேன். கேட்கலாமா?

உதய :—உன் இஷ்டம்.

வச :—யாரிடம் தங்களுக்குப் பிரியம் அதிகம்? அந்த வாசவதத்தையிடமா? இந்த பதுமாவதியிடமா?

உதய :—என்ன சங்கடமிது?

பது :—என்ன சங்கடம் என் பிராணநாதருக்கு?

வச :—அரசே, என்ன பயப்படுகிறீகள்? அவளோ இறந்தொழிந்தாள். இவளோ காணப்படவில்லை.

உதய :—நீ ஒரு விசயரட்டை. உன்னிடம் ஒன்றுமே சொல்லக்கூடாது.

பது :—இந்த வார்த்தையே போதும், என் கணவருடைய உட்கருத்தை வெளிப்படுத்துவதற்கு.

பது :—அரசே, நான் அப்படி யாரிடமும் சொல்லமாட்டேன். வேண்டுமானல் சத்தியம் செய்து கொடுக்கிறேன்.

உத :—ஆனலும் எனக்குத் தைரியம் வரவில்லை.

பது :—என்ன அறிவீனம், இந்த வசந்தருக்கு. இவ்வளவு சொல்லியும் என் பிராணநாதருடைய கருத்தை இவர் அறிந்துகொள்ளவில்லையே.

வச :—என்னிடம் சொல்லமாட்டீரே? ஆனல் நீங்கள் இங்கிருந்து நகரக்கூடாது.

உதய :—என்னையுமா பலாத்காரம் செய்வாய்?

வச :—உம்மையுந் தான்.

உதய :—எங்கே, உம்முடைய பலத்தைப் பார்ப்போம்.

வச :—அரசே, க்ஷமிக்கவேண்டும். தங்களை பலாத்காரம் செய்வேனு? ஆனல் என் அன்பினுலே தங்களைக் கட்டுப்படுத்துவேன்.

உதய: —அன்பினலா? ஆனல் நான் கட்டுப்பட்டவன்தான். கவனித்துக் கேள். பதுமாவதியின் அழகு, பேச்சு, குணம்—இவையெல்லாம் என்னை இன்புறுத்துகின்றன. ஆயினும் வாசவதத்தை கவர்ந்துகொண்ட என் உள்ளத்தை இவளால் மீட்கமுடியாது. நீர் கேட்டதற்கு நான் சொல்லி விட்டேன். இனி நான் கேட்டதற்கு நீர் நேரான விடை யளிக்க வேண்டும். யார்மேல் உமக்குப் பிரியம் அதிகம்? அந்த வாசவதத்தை மேலா? இந்த பதுமாவதி மேலா?

வச :—ஏன் வீண் விவாதம்? இருவர்களுமே என் பிரியத்திற்குப் பாத்திரமானவர்கள்.

உதய :—போக்கிரிப்பிராம்மணு! என்னைப் பலவந்தப்படுத்தி என் கருத்தை அறிந்து கொண்டு இப்பொழுது என்னை ஏமாற்றப் பார்க்கிருய். நான் விடுவேனு?

வசந் :—விடமாட்டீரா? பலாத்காரம் செய்வீரா?

உதய :—ஆமாம்.

வசந் :—உம்மால் ஆவதைப் பாரும்.

உதய .—பிராம்மணேத்தமரே, க்ஷமிக்க வேண்டும்.

வசந் :—அப்படி வாரும் வழிக்கு. கவனித்துக் கேளும். ராணி வாசவதத்தையிடம் எனக்குப் பிரியந்தான். ஆனல் பதுமாவதியும் பல நற்குணங்கள் நிறைந்தவள். மேலும், ஒரு விசேஷமான குணம் அவளிடம் இருக்கிறது. 'வசந்தகர் எங்கே, வசந்தகர் எங்கே?' என்று அடிக்கடி என் வரவை எதிர்பார்த்து நிற்கிருள், அருமையான பக்ஷணங்களை வைத்துக்கொண்டு.

உதய :—அப்படியா? இதையெல்லாம் வாசவதத்தையிடம் சொல்லிக் கொடுக்கிறேன், பார்.

வச :—வாசவதத்தையிடமா? எங்கே இருக்கிருள் வாசவதத்தை? அவள் இறந்துபோய் எத்தனை காலம் ஆகிவிட்டது?

உதய :—ஆம். வாசவதத்தை இறந்துபோனுள். நான்தான் அதை மறந்து விட்டேன். அவள் பெயரைச் சொல்லித் தழும்

பேறிய இந்த நாக்கு அவள் இறந்து போன தையே மறந்துவிட்டது.

வச :—அரசே மனதைத் தைரியப்படுத்திக் கொள்ளும். தலைவிதியை நொந்து என்ன பயன்?

உதய :—நண்பா, என் மனம் படும்பாட்டை நீ அறியமாட்டாய். வேரூன்றி நிலைத்த காதலை வேரோடு பிடுங்கி எறிவது சாத்தியமா? நினைக்கும் போதெல்லாம் துக்கமே அதிகப்படுகிறது. நினைத்துக் கண்ணீர் பெருக்கிய பிறகு தான் மனம் சற்று ஆறுதல் அடைகிறது.

வச :—தங்கள் முகம் கண்ணீரால் நனைந்துவிட்டதே. இதோ முகத்தைக் கழுவுவதற்கு ஜலம் கொண்டுவருகிறேன்.

பது :—இதுதான் சமயம். நாம் இங்கிருந்து மெல்ல நழுவுவோம்.

ஆவந் :—காதலரைத் தனியே விட்டு என்னோடு வருவது சரியல்ல. நான் போகிறேன். நீ இங்கேயே இரு.

மது :—நானும் ஆவந்திகையோடு போகிறேன். நீங்கள் இருந்து வாருங்கள்.

பது :—நான் அவர் அருகிலே போகட்டுமா?

ஆவந் :—போய் வா, அம்மா.

(இருவரும் போகிறார்கள்)

பது :—வசந்தகரே, என்ன இது?

வச :—இது.........இது.........

பது :—சொல்லுமையா, ஏன் பயப்படுகிறீர்?

வச :—காற்றடித்து மகரந்தத்தூள் அரசர் கண்ணில் விழுந்துவிட்டது. அதனால் கண்ணீர் பெருகி அவர் முகத்தை நனைத்துவிட்டது. முகம் கழுவுவதற்கு தாமரையிலையில் தண்ணீர் கொண்டுபோகிறேன்.

பது :—அந்தத் தாமரையிலையை இப்படிக் கொடும். என் கணவருக்கு வெற்றி உண்டாகுக! இதோ முகத்தைச் சுத்தி செய்வதற்குத் தண்ணீர்.

உதய :—யாரது? என் பதுமாவதியா? வசந்தகரே, என்ன இது? (உதயணனிடம் காதோடு வசந்தகர் ஏதோ சொல்கிறார்.) அப்படியா? சரி, சரி. பதுமாவதி, இப்படி உட்காருவாய்.

பது :—உத்தரவுப்படி, நாதா. என்ன ஒரு விதமாக இருக்கிறீர்கள்?

உதய :—பதுமாவதி, காற்று அடித்து மகரந்தத்தை என் கண்களிலே தூவிவிட்டது. அதனாலே கண்ணீர் வடிந்து என் முகம் நனைந்து போயிற்று. வேறொன்றுமில்லை.

வச :—அரசே, நாழிகையாயிற்று. தர்சக மகாராஜா நமக்காகக் காத்திருப்பார். அரண்மனைக்குப் போவோம், வாருங்கள்.

காட்சி 5.

(தாதியும், மதுகரிகை என்னும் தோழியும் பிரவேசிக்கிறார்கள்.)

தாதி:—மதுகரிகே, இங்கே வா, சீக்கிரமாய்.

மது :—என்ன அவசரம், அம்மா?

தாதி :—இளவரசிக்குத் தலைவலி. நீ ஓடிப் போய் ஆவந்திகையை அழைத்து வா. இளவரசிக்குத் தலைவலி என்றால் போதும். அவள் உடனே ஓடிவருவாள்.

மது :—ஆவந்திகை என்னதற்கு?

தாதி :—அவளைக் கண்டாலே இளவரசிக்கு தலைவலி தீர்ந்துவிடும். அவள் நல்ல கதைகள் சொல்லி இளவரசியை உற்சாகப்படுத்துவாள்.

மது :—ஆவந்திகையை எங்கே வரச்சொல்ல வேண்டும்?

தாதி :—இளவரசி சமுத்திரக்கரையிலே உள்ள பள்ளியறையிலே இருப்பாள். இதோ வசந்தகரும் வருகிறார். வசந்தகரே, இளவரசி பதுமாவதிக்கு தலைவலி என்று அரசருக்குத் தெரியுமா?

வச :—எனக்கே தெரியாதே. அரசருக்கு எப்படித் தெரியும்? நான் போய்ச் சொல்லுகிறேன்.

தாதி:—நானும் தலைக்குப் பற்று அரைத்துக் கொண்டு வருகிறேன்.

வச :—பதுமாவதி தேவியை அரசர் எங்கே காணலாம்?

தாதி :—சமுத்திரக்கரையிலுள்ள பள்ளி யறையிலே.

வச :—இதோ, அரசரே வந்துவிட்டார்.

உதய :—(தனக்குள்) இன்று முழுவதும் ஏனோ வாசவதத்தையின் நினைவாகவே இருக்கிறது?

வச :—அரசே, சீக்கிரம் வாருங்கள்.

உதய :—யாரது? வசந்தகரா? வசந்தகரே, என்ன சமாசாரம்?

வச :—ராணி பதுமாவதிக்குத் தலைவலி.

உதய :—தலைவலியா? ராணி எங்கே இருக்கிறாள்?

வச :—சமுத்திரக்கரையிலே உள்ள பள்ளி யறையிலே.

உதய :—நண்பா, சீக்கிரம் அங்கே செல்வோம். (சென்று பள்ளியறையை அடைகிறார்கள்.)

வச :—நீங்கள் சற்றுநேரம் இந்தப் படுக்கையிலே சாய்ந்திருங்கள். ராணி வந்துவிடுவாள்.

உதய :—இதோ. நான் தூங்காதிருக்க ஏதாவது கதை சொல்லு.

வச :—அப்படியே. நான் கதை சொல்லிக்கொண்டே வருவேன். நீங்கள் அடிக்கடி ஊங் கொட்ட வேண்டும்.

வச :—ஒரேவொரு ஊராம்.

உதய :—ஊம்.

வச :—அந்த ஊருக்குப் பெயர் உஜ்ஜயினியாம்.

உதய :—உஜ்ஜயினியா?

வச :—இந்தக் கதை பிடிக்கவில்லை என்றால், வேறு கதை சொல்கிறேன்.

உதய :—உஜ்ஜயினிக் கதை எனக்குப் பிடிக்காது என்றில்லை. ஆனால் உஜ்ஜயினி என்றதும், வாசவதத்தை, உற்றாரையும் உறவினரையும் தோழிகளையும் பிரிந்ததால் உண்டான துக்கத்திலே என் மார்பு நனையும்படியாகக் கண்ணீர் வடித்தது ஞாபகத்திற்கு வருகிறது. என்னிடம் வீணை கற்கும்போது தந்தியை மீட்டாது என் முகத்தையே பார்த்துக்கொண்டு கைவிரலை ஆகாசத்திலே துழாவியதும் என் கண்முன் தோன்றுகிறது.

வச :—ஆனால் வேறு கதை சொல்லட்டுமா? பிரம்மதத்தம் என்றொரு ஊர். அங்கே காம்பிலியன் என்றொரு ராஜா.

உதய :—பிரம்மதத்தம் என்ற ஊரா? காம்பிலியம் என்ற ராஜாவா? என்ன உளறுகிறாய்? காம்பிலியம் என்பது ஊர். பிரம்மதத்தன் என்பவர் ராஜா.

வச :—ஆமாம். தவறாகச் சொல்லிவிட்டேன். சரியாக மனப்பாடம் செய்துகொள்ளுகிறேன். பிரம்மதத்தன் என்றொரு ராஜா. காம்பில்யம் என்றொரு ஊர். பிரம்மதத்தன் என்றொரு ராஜா; காம்பில்யம் என்றொரு ஊர். பிரம்மதத்தன் என்றொரு ராஜா. காம்பில்யம் என்றொரு ஊர். நண்பா, மனப்பாடம் ஆகிவிட்டது. சொல்லுகிறேன், பார்.

பிரம்மதத்தன் என்றொரு ராஜா. என்ன ஊம் கொட்டவில்லை. தூங்கிவிட்டாயா? குளிர்காற்று அடிக்கிறது. அரண்மனைக்குப் போய் போர்த்திக்கொள்ளப் போர்வை கொண்டு வருகிறேன்.

(வசந்தகன் போகிறான்)

(மதுகரிகையும், ஆவந்திகையும் வருகிறார்கள்)

மது :—அம்மா, ஆவந்திகை! இப்படி வாருங்கள். இதுதான் சமுத்திரக்கரைப் பள்ளியறை. இங்கேதான் அரசகுமாரி பதுமாவதி படுத்திருக்கிறாள். நீங்கள் உள்ளே போங்கள். நான் தலைக்குப் பற்றுமருந்து கொண்டு வருகிறேன்.

ஆவ :—சீக்கிரம் கொண்டுவா. ஈசா! இதுவா உன் கருணை? விரக தாபத்தால் வருந்தும் என் கணவருக்கு மருந்துபோல வந்த இந்தப் பதுமாவதிக்குமா உடம்புக்கு வரவேண்டும்.

இந்தப் பள்ளியறையிலே ஒரு விளக்கை மட்டும் மினுமினு என்று எரியவைத்துவிட்டுப் போய்விட்டார்களே. இங்கே யாரும் துணையில்லையே. இப்படியும் தனியே விட்டுப் போகலாமா? பாவம், பதுமாவதி அயர்ந்து தூங்குகிறாள். அவள் மீதுள்ள அன்பு என்னை அவள் பக்கத்திலே படுக்கையிலேயே இருக்கச்செய்கிறது. என்ன அதிசயம் இது? இவள் கிட்ட உட்கார்ந்ததும் எனது உள்ளம் பூரிக்கிறது.

இவள் மூச்சு விடுவது ஒழுங்காக இருப்பதைக் கவனித்தால் தலைவலி நீங்கி ஸ்வஸ்தமாய்த் தூங்குகிறாள் என்று தோன்றுகிறது. படுக்கையின் ஓரத்திலே இவள் படுத்திருப்பது என்னையும் பக்கத்திலே படுத்துக்கொள் என்பதுபோல இருக்கிறது. நானும் படுத்துக் கொள்கிறேன்.

உதய :—வாசவதத்தா, வாசவதத்தா!

ஆவந் :—என் பிராணேசருடைய குரல் அல்லவா இது? ஆம், பதுமாவதி அன்று. என் பிராணேசரே இவர். யாரேனும் என்னைப் பார்த்து விட்டார்களோ?

உதய :—ஆவந்தி ராஜகுமாரி!

ஆவந் :—இவர் கனவு காண்கிறார். நல்லவேளையாய் இங்கே யாரும் இல்லை. நான் சற்றுத் தங்கியிருந்து என் பிராணேசர் கூறும் இன்பமொழிகளை காதாரப் பருகுவேன். இவரையும் கண்ணாரக் கண்டு களிப்பேன்.

உதய :—பிராணநாயகி, என்னோடு ஒரு வார்த்தை பேசமாட்டாயா?

ஆவந் :—பிராணேசா?

உதய :—என்மீது கோபமா?

ஆவந் :—கோபம் இல்லை; துக்கம்தான்.

உதய :—நீ ஏன் அலங்காரம் செய்து கொள்ளவில்லை.

ஆவந் :—அலங்காரம் எதற்கு? (தனக்குள்) என் கணவருடைய வலது கை படுக்கையிலிருந்து நழுவிக் கீழே தொங்குகிறது. மெல்ல அதை எடுத்து வைக்கிறேன். (கையைப் படுக்கைமீது எடுத்து வைக்கிறாள்.)

யாராவது வந்துவிடப்போகிறார்கள். இனி இங்கே தாமதிக்கக்கூடாது. சீக்கிரம் போக வேண்டும்.

உதய :—வாசவதத்தே! போகாதே. நில், நில். (வாசவதத்தை போகிறாள்; உதயணன் படுக்கையினின்று எழுந்து அவளைத் தொடரும்போது வாசற் கதவு தலையிலே இடிக்கிறது.) ஆ! தூக்கத்திலே எழுந்து ஓடினதால் வாசற்கதவு தலையிலே இடித்துவிட்டது. வாசவதத்தையும் மறைந்துவிட்டாள். வாசவதத்தா, வாசவதத்தா!

(வசந்தகன் பிரவேசிக்கிறான்)

வசந் :—அரசே, வாசவதத்தையா? என்ன உளறுகிறீர்கள்?

உதய :—இல்லை, நண்பா, நான் உளறவில்லை. வாசவதத்தை சாகவில்லை. உயிரோடுதான் இருக்கிறாள். இப்பொழுதுகூட பார்த்தேன். என்னைப் படுக்கையிலிருந்து எழுப்பி விட்டுப் போனாள். அவள் தீயிலே எரிந்து போனாள் என்பது சுத்தப் பொய்.

வச :—நண்பரே, நீர் கண்டது கனவு. நான் உஜ்ஜயினிக்கதை சொன்னது முதல் நீங்கள் இப்படி வாசவதத்தையின் நினைவாகவே இருக்கிறீர்கள். அதனாலேதான் கனவிலே அவளைக் கண்டீர்கள். அல்லது, இது சித்தப் பிரமையோ என்னவோ?

உதய :—என்ன? நான் கண்டது கனவா? வாசவதத்தை என்னைத் தொட்டது கனவானால் நனவிலும் இப்படி மயிர்க்கூச்சு இருக்குமோ? இது கனவானால் என் வாழ்நாள் முழுவதும் இதே கனவாக இருக்கலாகாதா? சித்தப்பிரமையானால் அதில் அப்படியே மூழ்கியிருக்கக்கூடாதா?

வச :—அரசரே, இந்த ஊரிலே அவந்தி சுந்தரி என்றொரு தேவதை இருக்கிறாள். அந்த தேவதையை ஒரு வேளை கண்டீரோ, என்னவோ?

உதய :—இல்லை, நண்பா. நான் கண்டது தேவதை அல்ல. வாசவதத்தைதான். அவள் சுந்திரவதனம் வாடியிருந்தது. மை தீட்டாத அவள் கண்கள் மங்கலமாய் இருந்தன. வாரி

முடியாத அவள் கூந்தல் அலங்கோலமாக இருந்தது. (உதயணனும் வசந்தகனும் எழுந்து அரண்மனையை நோக்கி வருகிறார்கள்.)

உதய :—என் வீணையின் நாதம்போல இருக்கிறதே. எங்கிருந்து வருகிறது இந்த இனியநாதம். போய்ப் பார்ப்போம் வா.

(வழிப்போக்கன் வருகிறான்.)

வச :—யாரப்பா நீ? இங்கே வீணை வாசிக்கிறாய்?

வழிப்போக்கன் :—நான் ஒரு வழிப்போக்கன். நருமதைக்கரையில் ஒரு நாணற்புதரிலே இந்த வீணையைக் கண்டெடுத்தேன்.

உதய :—வசந்தகா. இது என் வீணை கோஷாவதி அல்லவா?

வசந் :—ஆமாம். இது மகாராஜாவின் வீணை தான்.

உதய :—என் அருமைக் கோஷாவதியைக் கண்டெடுத்துக் கொடுத்தான் இவன். தக்க சன்மானம் அளிப்பதற்கு இவனை அழைத்துச் செல்.

(வசந்தகனும், வழிப்போக்கனும் போகிறார்கள்.)

உதய :—(வீணையை மடியில் வைத்து மீட்டிக் கொண்டு) என் அருமை கோஷாவதி! உன்னையும் அவளையும் பிரிந்த எனக்கு நீ மறுபடியும் கிடைத்துவிட்டாய். அவள் கிடைப்பாளோ? கோஷாவதி, என் காதலியின் மார்மேலும் மடிமேலும் வைத்துச் சீராட்டப்பெற்ற நீ எப்படி நாணற்புதரிலே கிடந்தாய்? என்னைப் பிரிய நேரிட்டபோது விரகதாபத்தைப் போக்குவதற்கு தேவி உன்னையல்லவா துணை கொள்வாள்? அவளைவிட்டுப் பிரிவதற்கு நீ எவ்வாறு மனந்துணிந்தாய்?

வச :—இவ்வாறெல்லாம் வருந்துவதால் என்ன பயன்?

உதய :—இத்தனை நாள் அயர்ந்து கிடந்த என் காதலை இவ்வீணையின் நாதமானது தட்டி எழுப்பிவிட்டது. வீணையைக்காணும் பாக்கியத்தைப் பெற்ற நான் தேவியை மீண்டும் காணப்பெறேனா?

வச :—அரசே, தங்களைப் பார்க்க யாரோ வருகிறார்கள். தங்கள் தேவி வாசவதத்தையை வளர்த்தெடுத்த வசுந்தராதேவியும், உஜ்ஜயினி மந்திரி ரைப்பியரும் போலத் தோன்றுகிறார்கள்.

உதய :—வசுந்தராதேவியா? நண்பா, புனர் விவாகஞ்செய்து கொண்ட நான் மாமி வசுந்தராதேவியை எப்படிக் காண்பேன்? அதோ பதுமாவதியும் வருகிறாள். என்ன செய்வேன்?

பது :—பிராணேசா, உஜ்ஜயினியிலிருந்து என் உறவினர்கள் வந்திருக்கிறார்களாமே. அவர்களைக் காண்பதற்கு ஆசைப்படுகிறேன்.

உதய :—'என் உறவினர்' என்றாயே? உன் மனம் எவ்வளவு உதாரமானது.

பது :—ஒரு வேளை என்னைக் கண்டால் அவர்களுக்கு வருத்தமுண்டாகுமோ என்று பயப்படுகிறேன்.

உதய :—'என் உறவினர்' என்று கொண்டாடும் உன்னைக்காண அவர்களும் ஆசைப்படுவார்கள் அல்லவா?

ரைப்பியர் :—மகாராஜா, ஜயவிஜயபீவ! மகாசேன மகாராஜா தங்கள் க்ஷேமத்தையே ஸதா கோரிக்கொண்டிருக்கிறார்கள். வசுந்தரையையும் என்னையும் அவர்கள்தான் அனுப்பினார்கள்.

உதய :—வாரும், ரைப்பியரே, வாரும். இந்த ஆசனத்திலே வீற்றிரும். அம்மா வசுந்தரையே, உங்கள் அருமைப் பெண்ணை இழந்த மகாபாபி நான்.

வசு :—வருந்தாதே. அப்பா. இழந்த ராச்சியத்தை மீட்கலாம், மீட்டுவிட்டாய். இறந்த மனைவியை மீட்க யாரால் முடியும்? மனதைத் திடப்படுத்திக்கொள். உனக்கு ஆறுதலாக இருக்கவேண்டுமென்றே இதோ இந்த சித்திரப்படத்தைக் கொணர்ந்தேன். இது என் அருமை வாசவதத்தைக்கும் உனக்கும் விவாக மஹோத்ஸவத்தை நடத்துவதற்காக எழுதிய படம். இதைக்கொண்டு மனதை சமாதானப் படுத்திக்கொள். வேறு என்ன செய்யலாம்?

உதய :—(சித்திரத்தைப் பார்த்து) என் பிரிய நாயகி—

பது :—அம்மா வசுந்தராதேவி, என் பிராண நாதருடைய பிரிய நாயகியை நான் கண்டு கைகூப்பி வணங்க விரும்புகிறேன். படத்தை எனக்கும் காட்டவேண்டும்.

வசு :—இவள்தானே தேவி பதுமாவதி. இதோ பாரம்மா, தேவி வாசவதத்தையை.

பது :—(படத்தைப் பார்த்து) நமஸ்கரிக்கிறேன். நாதா, இது தேவியின் படம் தானே?

உதய :—ஆமாம். ஏன் இந்தப் பதற்றம்!

பது :—தேவி இறந்தது வாஸ்தவம்தானா? அல்லது அவள் ஆவந்திகையை என்ற பெயருடன் எனக்குத் தோழியாய் இருக்கிறாளா?

உதய :—ஆவந்திகையா? அவளை இங்கே கூப்பிடு. என் வாசவதத்தையை மீண்டும் காண்பேனா? பதுமாவதி, சற்றுப்பொறு. இந்த ஆவந்திகை ஒருவேளை பரஸ்திரீயானால்—

பது :—நானும் மறந்துபோனேன், இவளை என்னிடம் விட்டுச் சென்ற இவளுடைய தமையன் இவள் விவாகமானவள் என்றும் பர புருஷரைப் பார்க்கக்கூடாதென்றும் சொன்னார்.

கஞ் :—அரசகுமாரி, தங்களை காண்பதற்கு ஒரு சன்னியாசி வந்திருக்கிறார். அவரது சகோதரியைத் தங்களிடம் விட்டுச் சென்றனராம். இதோ அவரே வந்துவிட்டார்.

பது :—நாதா, இவர்தான் நாம் பேசிக் கொண்டிருந்த பெரியார். பெரியாரே நமஸ்கரிக்கிறேன்.

யூகி :—தீர்க்கசுமங்கலிபவ.

உதய :—நானும் நமஸ்கரிக்கிறேன்.

யூகி :—ஜயவிஜயீபவ. ராணியாரே, நான் தங்களிடம் விட்டுச் சென்ற என் சகோதரி க்ஷேமமா? அவளைக் கணவனிடம் சேர்க்கும் சமயம் நெருங்கிவிட்டது.

பது :—பெரியோரே, ஆவந்திகை தன் கணவனோடு சுகமாக வாழும் காலம் வாராதா என்று காத்திருக்கிறேன். அவளை அழைத்து வரச் சொல்லியிருக்கிறேன். (ஆவந்திகை வேஷம் பூண்ட வாசவதத்தை வருகிறாள்.)

ஆவந்திகை, அம்மா ஆவந்திகே, இதோ உன் தமையனார் வந்திருக்கிறார். உன்னைக் கணவரிடம் அழைத்துப்போக.

ஆவ :—கணவரிடமா?

உதய :—பதுமாவதி, ரூபம் ஒத்திருக்கிறது என்றாய்; குரலும் ஒத்திருக்கிறதே.

வச :—வாசவதத்தை! உன்னை வளர்த்த என்னையும் ஏமாற்றமுடியுமா?

யூகி :—அரசே, என்னை மன்னிக்க வேண்டும். நான்தான் தேவிக்கு இப்படி வேஷம் போட்டு தேவி பதுமாவதிக்குத் தோழியாக இங்கே இருக்கச் செய்தேன். ஜோஸ்யர்கள் தங்களுக்குக் கஷ்டகாலம் என்றும், தாங்கள் ராஜ்யத்தையும் தேவியையும் இழக்க நேரிடும் என்றும் பின்பு தேவி பதுமாவதியை மணந்தால் கஷ்டம் நீங்கும் என்றும் சொன்னார்கள். அவர்கள் வாக்கின்படி, முதலில் ராச்சியத்தை இழந்தீர்கள். தேவியை இழப்பதால் உண்டாகும் துக்கத்தை அனுபவித்தீர்கள். தேவி வாசவதத்தையும் பூமாதேவியைப் போல எல்லாக் கஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டிருந்தாள். பிறகு ஸ்ரீதேவியைப் போன்ற இந்தத் தேவியைப் பெற்று ராச்சியத்தையும் பெற்றீர்கள். இனி ஸ்ரீதேவி பூதேவி போன்ற இவ்விருவருடனும் ஸ்ரீமந் நாராயணனைப்போல விளங்குவீர்களாக. இனி வத்ஸம் அவந்தி, மகதம் ஆகிய மூன்று நாடுகளிலும் தங்கள் புகழ் பரவத் தாங்கள் நீடுழி வாழ்வீர்களாக.

உதய :—மந்திரி, நீர் செய்தவற்றிலே குற்றம் இருந்தாலன்றோ மன்னிப்புக் கேட்க வேண்டும். எல்லாம் உபகாரமாகவே செய்தீர்கள். எல்லாம் சுபமாகவே முடிந்தது.

ஐயரவாளின் மாப்பிள்ளை.

('வம்பன்' எழுதியது.)

ஐயரவாளின் பெயரையும் பெருமைகளையும் அறியாதவர்கள் இல்லை. அதனால் அவர்களுடைய பெயரைக் குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லை. ஐயரவாளின் மாப்பிள்ளையின் பெயரையும் பெருமைகளையும் அறிந்தவர்கள் இரண்டொருவர்கூட இருக்கமாட்டார்கள். மாப்பிள்ளை என்றால் மட்டுமே யாருக்கும் தெரியும். அதனால் அவருடைய பெயரையும் குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லை.

ஐயரவாளுக்கு ஒரேயொரு செல்வ மகள். அவளுக்கு வரன் தேடிய ஐயரவாள் அநேக பிள்ளைகளைப்பற்றி கலாசாலை உபாத்தியாயர்களிடம் விசாரித்திருந்தார். கலியாணம் நிச்சயமாயிற்று. ஐயரவாளின் மாப்பிள்ளை தன் உபாத்தியாயர் ஒருவருக்கு நேரிலே கலியாணக் காகிதம் கொண்டுபோய்க் கொடுத்தான். அவனுக்குக் கலாசாலையிலே வழங்கிய பெயர் ஒன்று; அடிப்பெயர் வேறு. அடிப்பெயரைப் பத்திரிகையிலே கண்ட அந்த உபாத்தியாயர் "நீயல்லவா ஐயரவாளின் மாப்பிள்ளை ஆகப் போகிறாய் என்று நினைத்தேன். வேறு யாரையோ ஐயரவாளின் மாப்பிள்ளையாகப்போட்டிருக்கிறதே" என்றார். அது கேட்ட ஐயரவாளின் மாப்பிள்ளை, "நான்தான், ஸார் ஐயரவாளின் மாப்பிள்ளை; இது என் அடிப்பெயர்" என்றான். ஆனால் அடிப்பெயரோடு, பள்ளிக்கூடப் பெயரும் அன்று முதல் மறைந்து போயிற்று என்னலாம். அவனுடைய உபாத்தியாயர்களுக்கும் கலாசாலை நண்பர்களுக்கும் அவன் பெயர் 'ஐயரவாளின் மாப்பிள்ளை' என்றாகிவிட்டது. 'ஐயரவர்கள் ஊரிலோ 'மாப்பிள்ளை' என்றாலே "ஐயரவாளின் மாப்பிள்ளையைத்தான் குறிக்கும்."

காலக்கிரமத்தில் ஐயரவாள் பூவுலகினின்று மறைந்தார். ஆனால் அவர் புகழுடம்பு மறையவில்லை. அவர் மாப்பிள்ளைக்கு ஐயரவாள் மாப்பிள்ளை என்ற பெயர் மாறவில்லை. இதற்கு நிதர்சனம் ஒரு சிறு சம்பவம். ஐயரவாள் மாப்பிள்ளை ஒரு தாற்காலிகவேலைக்கு மனுப் போட்டிருந்தார். அவருடைய பெயரையுடைய வேறொருவரும் அவ்வேலைக்கு மனுப் போட்டிருந்தார். வேலைக்குரிய ஆளைப் பொறுக்குவதற்கு ஒரு கமிட்டி; கமிட்டியின் காரியதரிசி ஐயரவாளின் மாப்பிள்ளை பெயரை வாசித்தார். உடனே பலர் பலமாக ஆமோதித்தார்கள். காரியதரிசி மெல்ல "இந்தப் பெயருடையவர்கள் இருவர் இருக்கிறார்கள்." என்றார். உடனே ஆமோதித்தவருள் ஒருவர் "ஆனால் இவரல்லவா ஐயரவாளின் மாப்பிள்ளை?" என்றார். ஆகக்கூடி, 'ஐயரவாள் மாப்பிள்ளை'க்கே அந்த வேலை கிடைத்தது என்று சொல்லவும் வேண்டுமா?

'ஐயரவாளின் மாப்பிள்ளை'க்கு மாப்பிள்ளைகள் வந்திருக்கிறார்கள். ஆனால் அவர் பெயர் மட்டும் மாறவில்லை. ஒரு வேளை அந்த மாப்பிள்ளைகள் தங்கள் மாமனாரை "மாப்பிள்ளை" என்று கூப்பிட்டாலும் நான் ஆச்சரியப்படமாட்டேன்.

இப்போது ஐயரவாளும் இல்லை; ஐயரவாளின் மாப்பிள்ளைக்கு மாப்பிள்ளைப் பட்டம் அளிக்கப் பிறந்த பெண்மணியும் இல்லை. ஆனால் இன்றும் அவரை எங்கேயாவது கலியாணக்கூட்டத்திலோ கச்சேரிகளிலோ கண்டால் அவருடைய உற்றார் உறவினர்கூட அவரைப் பிறருக்கு 'ஐயரவாளின் மாப்பிள்ளை' என்றே அறிமுகப்படுத்துகிறார்கள். அவர் இயற் பெயரையோ தங்களுக்குள்ள உறவு ஸம்பந்தத்தையோ சொல்லி அறிமுகப்படுத்தமாட்டார்கள். அதெல்லாம் அவர்களுக்கு ஞாபகமுண்டோ இல்லையோ? 'ஐயரவாளின் மாப்பிள்ளை'க்குக்கூட மறந்துபோயிருக்குமே அவரது இயற்பெயர்.



மொழிபெயர்ப்புப் பகுதி.

கடற்கன்னிகையும் யவனவீரனும்.

(வித்வான் கா. ப. வேங்கடகிருஷ்ணமாசார்யர் பாடியது.)

ஆங்கிலக் கவிஞர் ஸாமுவேல் டேனியல் என்பவர் சுமார் நான்கு நூற்றாண்டுகட்கு முன்னர் இயற்றிய 'யூலிஸிஸ்ஸும் ஸைரனும்' என்னும் கவியை யான் படித்தபோது, அப்புலவரின் அரிய சொற்சுவையும், பொருட்சுவையும் என் உள்ளத்தில் இன்பமூட்ட, அதன் பயனாக, இப்பாடலை எளிய இனிய தமிழில் யான் மொழிபெயர்த்தேன். இதில், என்னால் இயன்றவரை அப் புலவர்பெருமானின் உள்ளம் பொருந்துமாறு அமைத்திருப்பது, இதைப் படித்துப் பார்ப்போர்க்கு நன்கு புலனாகும்.

இச் சிறுநூல் "இன்பவாழ்க்கையினும் வீரவாழ்க்கையே சிறப்புடைத்து" என்பதை முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது. தான் இனிதாகக் காலங்கழிப்பதோடு நிற்காமல், தன் கண்ணிற்பட்டாரையும் அதே வாழ்க்கையில் ஈடுபடுமாறு தூண்டும் கடற்கன்னிகையின் தேனனைய சொற்களும், போர்முனைப்புகழையே விரும்பும் யவனவீரனின் வீரந்ததும்பும் வார்த்தைகளும் அவ்விருவரின் வாழ்க்கையின்கண்ணுள்ள இலட்சியங்களை நன்கு விளங்கும்.

நிலைமண்டில ஆசிரியப்பா.

கட. க :— வருக! பெருந்தகை யோனே! வருக!!
வருக! யவனவீர! வருக!!

ய. வீ :— அழகா ரணங்கே! எனையோ அழைத்தனை?

கட. க :— உனையே யழைத்தன னுறுவா யென்னிடம்.

ய. வீ :— எதுக் கழைத்தனை யாதர மெய்தவே?

கட. க :— என்னுட னெய்திநீ யிவ்விட மாள்குவை;
காற்றுந் திரைகளுங் கடுத்தெழுந் தெங்கும்
இன்னல் நிறைந்த துன்பப் பெருங்கடல்
மீதினி லெதற்கோ மிதவையிற் செல்குவை?
இவ்விட மிச்சையி னின்ப மெய்தலாம்.

ய. வீ :— நன்று நன்று நீ நவின்ற வாசகம்!

கட. க :— நன்மொழி நவின்றதில் நவையுண் டோவுரை?
ஈண்டி ருந்தியா மெதிருற நோக்கி
ஆழ்கடல் கடப்போ ரலேச்சலை யறிந்து,
உவகை பொங்கவே யுறுபகல் தன்னையும்
இனியநற் றுயிலி லிரவையுங் கழிக்கலாம்!

ய. வீ :— எழிலுறு நங்காய்! இயம்புமுன் மாற்றம்
வீர வாழ்க்கையர் விரும்புதற்காமோ?
இரும்புக ழெனுமதை யெளிதிற் பெறலுறின்
துன்பந் துறந்தியா னிருப்ப னவ்விடம்;
இக்கடல் மீதே யிருந்திடு மதையான்
இடையூ றெல்லா மெதிர்த்தே யெய்துவன்;
இன்னலினிடையே மன்னிடுங் கீர்த்தி!
சிற்றின் பத்துட் சிதைந்தே யுறைதல்
வீரர்க் கென்றுந் தீராப் பழியாம்.

கட. க :— அந்தோ! வீர! நொந்தே யலேந்து
பொய்ப்புகழ் தன்னை மெய்யெனப் போற்றி
ஏமாந் திடுத லேனோ புகல்வாய்.
புகழெனு மதுதான் புத்தியிற் றோன்றி
நாவில் நடந்து பூமியிற் பொலியுமே.
மற்றுமப் புகழ்தான் வந்த காரணமும்
ஆழ்ந்து நோக்கின் அரியவோ ரமைதியாம்.
பெருநிதி தன்னைப் பிரிந்திடச் செய்து பின்
ஓயா வலேச்சலி லுழன்றிட வீழ்த்தலே.

ய. வீ :— இன்சுவைப் பாவாய்! இவ்வுரை யறிவாய்!
மதிப்பும் உரையும் மாய்ந்தன வெனினும்,
ஆண்மை யாளர் அற்பச் செயலில்
வீணே காலங் கழிக்க வெறுப்பரே.
உழைப்பே யென்று முள்ள மகிழ்ச்சியை
உற்றிடச் செய்யும் உறு துணை யாகும்.
தொழிலிற் றுன்பந் தோன்றற் போலவே
சோம்பலிற் சோர்வு காண்டலு மியல்பே.

கட. க :— இன்பக் கடற்கரை யெய்த வேண்டின்
துன்ப வலேகளிற் றுயருற வேண்டுமே!
வந்தடை வளர்சுக வாழ்க்கையை வெறுத்தே
இன்ப மெய்துமு னிறப்போர் பலரே.
எவரும் பல்வகை யின்பத் துறைகளில்

சலிப்பே யடையார்; சதிரு மடைவரே:
தொழிலிற் பல்வகை சுவைதோன் றுதல்போல்
சுகத்திலும் பல்விதந் தூய்நலங் காணலாம்.

ய. வீ :— மேம்படு குணத்தோர் விரும்புவ சென்றும்
இடையூறு மின்னலு மினிதென மகிழ்ந்தே!
வேலை யின்மையில் விளையுஞ் சுகத்தைநீ
அடைதற் போலவ ரவைகளிற் பெறுவரே;
மேலைநாள் வீரச் செயலு மவர்க்கு
மட்டிலா மகிழ்ச்சியை மனத்திற் காட்டுமே.
ஆனல், சுகமோ, அகலும் நாளில்
தீதெனுந் தன்மையைத் தெளிய வுணர்த்துமே.

கட. க :— உமதெண் ணந்தானும் உலகோர் கொள்கையே
பழக்கத்திற் பிறந்தது வழக்கமா யிற்றே.
வழக்க மொன்றுதான் வகைமிகு திட்டங்கள்
இயற்கையின் மிகுந்து செயற்கையிற் செய்யுமே.
யாம்பயில் மகிழ்ச்சியால் யாங்கண் நோக்கினும்
கைம்பெண் ணெவருங் கதறுவா ரில்லை;
வெங்குருதி வீழாது; வீரர் உலகிலோ
இன்னல் பலவே; இன்பஞ் சிலவே.

ய. வீ :— இருப்பினு மிந்நா ளிருக்கும் நிலைமை
ஓய்வின்றி யோடு முளத்தையே நாடும்:
இப்பே ருளம்பெற்றோ ரிலங்கு காரணமும்
நவைமிகு வாழ்க்கையை நலம் பெறச் செய்யவே;
அவரா லன்றோ வாருயிர்க் குற்ற
இடுக்கண் பலவு மில்லா தொழியும்;
வஞ்சனை நிறைந்த வசையுறு வாழ்க்கையின்
வீரம் நிறைந்த போரே மேலாம்.

கட. க :— நன்று! நன்று!! நின் கருத்தினை யுணர்ந்தேன்
ஈண்டுனையடைத லென்று வியலாது;
ஆகவே, யானே அடைகுவ னுன்வழி;
சிறப்பும் செல்வமும் முன்பா லடைகுவன்:
வெல்ல முடியா மெல்லிய லாயினும்
வெற்றிநீர் பெறவே வெந்துய ரொழிப்பன்;
அழகிய மங்கைய ரமைத்த காரணம்
வெல்லவும் வணங்கவும் விரும்பி யென்பரே.

வெண்பா.

அழகா லவனியை யாளு மரிவை
குழமக னுள்ளங் கொளலே—யழகாம்;
கொளப்படுத லின்றேற் குணவதியா ளுள்ளங்
கொளப்படுத லென்றுங் குணம்.

புது சிருஷ்டியின் ஆரம்ப நிலைமைகள்.

(அரவிந்தர் எழுதியது—P. கோதண்டராமன் மொழிபெயர்த்தது.)

தற்காலப் போக்குகளும் முதன் முயற்சிகளும் ஒரு நிச்சயமற்ற, குழம்பிய நிலையிலிருக்கின்றன. இந்நிலையினுட் புகுந்து, புது சிருஷ்டியானது திட்டமாக இன்ன உருவங்களைத்தான் எடுத்துக்கொள்ளும் என முன்பு அறிய முயலுவதினால் பலன் ஏதாகிலும் ஏற்படுமோ வென்பதும் சந்தேகமே. ஒரு இசைக் கருவியில் சுருதி கூட்டுவதினாலெழும் தொனியைக் கொண்டே பாட்டை முன்னாடியே நிச்சியிப்பது எவ்விதம் இயலாதோ அவ்விதமாகவேதான் ஏதாவதொரு திசையில் நாம் சில பரிஷ்காரமான குறிப்புக்களையே காணலாம். ஆனால் இவையும் முதற் குறிப்புக்களாகவே இருக்கும். இவை சூசிப்பிக்கும் விஷயங்களுக்கு மேற்பட்டவை இன்னும் எவ்வளவோ மறைவாக இருக்கின்றன என நாம் உறுதியாக நம்பலாம். இவ்வுண்மையானது, சமயம், அத்யாத்மம், சிந்தனை, அறிவு, கவிதை கலை, சமூகம் அரசியல், ஆகிய இவை யெல்லாவற்றிற்கும் பொருந்தும். ஆரம்பத்தின் ஆரம்ப நிலையையே நாம் அநேகமாக எங்கும் காண்கிறோம்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகக் காணப்படுகின்றது. அதாவது, பாரத நாட்டில் பண்டைக் காலத்தில் இருந்ததைப் போலவே, எதிர்காலத்திலும் அத்தியாத்ம நோக்குதான் உண்மையான சிருஷ்டிக்குக் காரணமாக இருக்கும். அத்தியாத்மம் எனில், உலக வாழ்க்கையினின்றும் ஒதுங்கி தத்துவ விசாரணையில் சஞ்சரிக்கும் மனப்போக்கு என்றோ, செயலில் ஈடுபடாது கனவு காணும் ஒரு போக்கு என்றோ நாம் பொருள் கொள்ளவில்லை. நமது கலைஞான நாகரிகங்களை விமர்சனம் செய்யும் ஐரோப்பியர்கள் யாது கூறினும், பண்டைக் காலத்தில் பேராற்றலுடனும் பெருமையுடனும் விளங்கிய பாரத அன்னையின் போக்கு அவ்விதமாக இல்லை; அவளது எதிர்காலப்போக்கு அவ்விதம் இருக்கப்போவதில்லை.

அவளது புத்தியின் போக்கில் தத்துவ விசாரணை என்பது சத்திவாய்ந்த ஒரு அம்சமாக எப்போதும் விளங்குமென்பதில் சந்தேகமே கிடையாது. அவ்வழியில் தனக்குள்ள பெரிய சக்திகளை அவள் என்றும் இழக்கமாட்டாள் என்று நாம் நம்பியிருக்கலாம். ஆனால் அவளது தத்துவ விசாரணையின் இயற்கையான போக்கே வேறு.

நவஐரோப்பாவில், பௌதிக சாஸ்திர உண்மைகளை ஆதாரமாகக் கொண்டு அவைகளை மனோநீதியில் விரிவான பொது விதிகளுக்குள் கொண்டுவரும் முறையே தத்துவம் என்னும் பெயருடன் கொஞ்ச காலம் வழங்கி வந்தது. இந்திய தத்தவ ஞானம் இதனின் மாறுபட்டது. அவ்விதமாகவே பிரெஞ்சுக்காரர்களின் ஆழ்ந்த, ஒளிதிகழ்ந்த கருத்தின் அமைப்புக்களினின்றும், ஜர்மனியரின் புத்தியின் போக்கினின்றும் அது மாறுபட்டதாகும். தனது மூலாம்சத்தில் அது எப்போதும் புத்தியின் மூலமாக ஆத்மானுபூதியை அடைவதற்கான ஒரு முயற்சியாகும். பிற்காலங்களில் அது வாழ்க்கையினின்று வெகு தூரம் விலகிநின்ற போதிலும், அந்தர்ஞானத்துடன் மிளிர்ந்த பிரதம தத்வத்திலும் சரி, அதன் பிற்கால வளர்ச்சிகளில் ஒன்றாய் புத்தறிவின் ஆற்றலுடனும் சிருஷ்டிசக்தியுடனும் இந்திய தத்துவம் விளங்கிய காலத்தைச் சேர்ந்ததாயுமுள்ள கீதையிலும் சரி, அது அவ்விதமாக இல்லை. பௌத்தசமயக் கொள்கைதான் முதன் முதலாக வாழ்க்கையின் பயனில் உண்மையாக ஐயம் கொண்டது. ஆனால் அதுவுங்கூட தனது புத்தியின் போக்கில் மட்டுமே அவ்விதமிருந்தது. அது செய்கையில் ஈடுபட்டிருக்கையில் தனது நீதி தர்ம அத்யாத்ம முறைகளின் மூலமாக மானிடவாழ்க்கைக்குப் புது விதமான மதிப்புக்களையும், அதீத ஆற்றலையும், மிகவும் இதமான லட்சியப்போக்கையும் அளித்தது. மேலும் வாழ்க்கையின் உட்பொருளை விளக்கும் கலைகளிலும், சமூகத்திலும், அரசியலி

லும் தனது சிருஷ்டிக்கும் ஆற்றலைக்காட்டி யது. சைதன்னியத்தின் உண்மையைப் பிரத் யட்சமாக அறிவதும் அதன் வழி வாழ்க்கை யை இயக்குவதும் திருத்தியமைப்பதுமே இந் திய புத்தியின் இயற்கையான போக்காகும். அது ஆரோக்கியமாகவும் பெருமையுடனும் வலுவுடனும் விளங்கும் காலங்களிலெல்லாம் அது என்றும் இந்த சைதன்னிய வழியிலேயே செல்ல வேண்டியதாக இருக்கும்.

பாரத நாட்டில் வாழ்க்கையின் பேரியக்கங் களெல்லாம் ஒரு புது அத்யாத்ம கருத்துட னும், பெரும்பாலும் ஒரு புது சமயத்தை நிறு வும் ஒரு முயற்சியாகவும் ஆரம்பித்திருக்கின் றன. புதிதாகவந்த ஐரோப்பிய நாகரீகம் புத் தியையும் பகுத்தறிவையும் அடிப்படையாகக் கொண்டது, அது பெரும்பாலும் சமயத்திற்கு நேர்விரோதமாயும், பதினெட்டு பத்தொன்ப தாம் நூற்றாண்டுகளில் மேன்மேலும் வியாபித் திருந்த சர்வசமபாவத்திலிருந்தும் லௌகிகப் போக்கிலிருந்தும் தனது உயர் லட்சியத்தைப் பெற்றதாயும் இருந்துவந்தது. இத்தகைய நா கரீகமும் ஆதிக்கமுமே பாரத நாட்டில் ஆரம் பத்திலிருந்தே சமயச்சீர்திருத்த முயற்சிகளைத் துரிதப்படுத்துவனவாகவும் புதிய சமயங்களை அமைப்பதற்கு ஊக்கமளிப்பனவாகவும் இருந் தனவெனில், இதைவிட அதிசயமான விஷ யம் வேறொன்றுமில்லை. கருத்துக்களும் சமூ கமும் புது அமைப்பு பெறவேண்டுமெனில், அப்புது அமைப்பு அத்தியாத்மத்தை ஆதார மாகக் கொண்டே ஆரம்பமாகவேண்டும் என் பதும், அது தொடக்கத்திலிருந்தே சமய நோக்கு கொண்டதாயும் சமய வடிவம் தாங் கியதாயும் இருத்தல் வேண்டும் என்பதுமே இந்திய புத்தியின் இயல்பாக இருந்தது.

பிரம்ம சமாஜத்தை எடுத்துக் கொள் வோம். அது ஆரம்பத்தில் ஒரு விரிவான சர்வசமபாவத்துடன் விளங்கியது. சற்றேறக் குறைய எல்லா மதங்களிலுமுள்ள விஷயங் களை அது தேர்ந்தெடுத்துத் தொகுக்க முனைய றது. அது வேதாந்தத்திலிருந்து பெற்ற முதல் ஆவேசத்தையும், ஆங்கிலேய 'யூனிடேரிய னிஸம்' என்னும் கிருஸ்துவ சமயப் பிரிவு ஒன்றில் காணப்படுவதைப் போன்ற சில புற அமைப்புக்களையும் இயல்புகளையும், கிருஸ்துவ மதக்கொள்கையின் ஒரு சிறு அம்சத்தையும், பகுத்தறிவையும் மன அறிவையும் அதிகமா கக்கொண்டிருந்த ஒரு சமயப்போக்கையும் ஒன்று சேர்த்தது. ஆயினும் வேதாந்தத்தைப் புதிய முறையில் விளக்கும் ஒரு முயற்சியாக அது ஆரம்பித்தது என்பது குறிப்பிடத் தக் கது. வைதீகமுறைகளை எதிர்த்துக்கிளம்பிய ஒரு இயக்கமாக அதைக் கருதலாமாயினும், அது தேசீய சம்பிரதாயம், குணவிசேஷம், இவைகளை யொட்டி ஒழுகி வந்திருப்பதில் தான் அதன் முறையில் அதிசயம் இருக்கின் றது. உதாரணமாக, ஆதி இயக்கத்திலிருந்து தனித்தனியாகப் பிரிந்த மூன்று சமாஜங்களும் அதன் வளர்ச்சியின் மூன்று நிலைகளைக் குறிக் கின்றன. இம்மூன்று நிலைகளும் இந்திய சம யப் போக்கின் மூன்று சாதாரணமான அம்சங் களாகிய ஞானம், அல்லது தத்துவ ஆராய்ச்சி, பக்தி அல்லது தீவிர உள்ள நெகிழ்ச்சியுடன் கூடிய அன்பு, கருமம் அல்லது தீவிரமாக வினைபுரியும் அத்தியாத்மப்போக்கு என்பவை களுக்கு ஒத்தனவாய் இருக்கின்றன.

பாஞ்சாலத்தில் கிளம்பிய ஆரிய சமாஜ மானது வேத உண்மையின் புதிய விளக்கத் தை ஆதாரமாகக் கொண்டதாகவும், வாழ்க் கை சம்பந்தமான பழைய வேததத்துவங் களைத் தற்கால நிலைமைகளுக்குப் பிரயோகிக் கும் ஒரு முயற்சியாகவும் விளங்குகிறது.

ராமகிருஷ்ண—விவேகானந்த இயக்கமா னது பண்டை சமய நோக்குகள், ஆத்மானுப வங்கள் இவற்றின் ஒரு விரிவான தொகுப் பாக இருந்துவருகின்றது. அது பழைய துற வியலுக்கும் சந்நியாச சங்க முறைமைக்கும் புத்துயிரளித்து அவைகளை மீண்டும் உறு திப்படுத்துவதுடன், தீவிர லோகோபகாரக் கருத்தையும் மதவியாபகம் செய்யும் உற்சா கத்தையும் மேற்கொண்டு விளங்குகிறது.

வைதிக ஹிந்து தர்மத்தை உயிர்ப்பிக்கும் ஓர் இயக்கத்தையும் காண்கிறோம். ஆனால் அது இப்போதிருப்பதைவிட இருபது முப் பது வருஷங்களுக்கு முன் தீவிரமாக நடந்து வந்தது.

பாரத நாட்டின் இதர பகுதிகளும் மேற் சொன்னபடி ஆங்காங்கு நடைபெற்ற பெரிய

சங்கங்களின் அதிர்ச்சிகளை உணர்ந்தோ அல்லது தங்களுக்குள்ளேயே நடைபெற்ற சிறு இயக்கங்களினால் உள்ளக் கலக்கமடைந்தோ வந்திருக்கின்றன. வங்காளத்தில் சமீபத்தில் ஒரு நவீன வைஷ்ணவ சமய இயக்கம் கிளம்பியிருக்கிறது. ஆரம்பகால சிருஷ்டியின் வேலை இன்னும் முடியவில்லை என்பதையே இது காட்டுகின்றது, பாரதநாடு முழுமையிலுமே பழைய சமயம் பிரிவுகளும் சாதாரண முறைகளும் புது ஜீவசக்தி பெற்றும் தங்கள் தங்களது தனித்தன்மையை வெளிப்படையாக மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டும் செயலாற்றியும் வருகின்றன. இப்போது ஆரவாரத்தில் இஸ்லாம் மதமும் சமீபகாலந்தொட்டு பங்கெடுத்துக்கொண்டு வருகின்றது. பல காலமாக இந்நாட்டில் உறங்கிக் கொண்டிருந்த முஸ்லிம் மக்கள் விழிப்படைவதற்கு முன்னும் அதன் பின்னும் ஆதி இஸ்லாமிய லட்சியங்களை மீண்டும் உயிர்ப்பிக்கவும் புது வழிகளில் இறங்கவும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த இயக்கங்களில் எதுவேனும் அல்லது எல்லாமே நிலையாக நிற்காமலிருக்கலாம். பண்டைப் பெருமையை மீண்டும் பெற்று எதிர்காலத்தை நோக்கிச்செல்லும் இந்திய அத்தியாத்மமானது தனது உண்மையான சொரூபத்தை யடைவதற்காக ஆயத்தஞ்செய்து கொள்ளும் வழிகளாக மட்டுமே இவையெல்லாம் இருக்கலாம். ஏனெனில், பாரதநாடு எல்லாச் சமயங்களும் ஒருங்கே சந்திக்கும் ஒரு தலமாகும். அவைகளுள் இந்து சமயம் ஒன்றே விரிவான பல அம்சங்கள் சேர்ந்த ஒரு கலப்பாகும். அதை ஒரு சமயம் என அவ்வளவாகக் கொள்வதற்கில்லை. பல திறப்பட்டதாயும், சூக்குமமாயும், ஒன்று சேர்க்கப்பட்டதாயும் உள்ள அத்தியாத்ம சிந்தனை, அனுபவம், ஆர்வம், இவற்றின் ஒரு மகத்தான தொகுதியென்றே அதைக் கூறலாம்.

இக்கலக்கங்கள், கொந்தளிப்புகளினின்றெல்லாம் முடிவாக வரக்கிடப்பது இன்னும் எதிர்காலத்தில் மறைந்திருக்கிறது. வினைபுரிய உந்துவதாயும், புதிதாயும், பலன் தரத்தக்கதாயுமுள்ள முயற்சிகள் பல காணப்படுகின்றன. பழைய வடிவ அமைப்புக்களின் ஜீவசக்தி பெரிதும் உயிர்ப்பிக்கப்பட்டு வருகின்றது. ஒரு புது ஆராய்ச்சி காணப்படுகின்றது. அவ்வவற்றிற்குரிய பழைய இடம் மீண்டும் அவ்வவற்றிற்கு அளிக்கப்படுகின்றது. பழைய சாதனை முறைகள், பழைய பிரமாணங்கள், வேதங்கள், இவை மீண்டும் அவலம்பிக்கப்படுகின்றன. வேதம், வேதாந்தம், புராணம், யோகம், சமீபகாலந்தொட்டு, தந்திரம், இவை ஒவ்வொன்றும், பூரணமாக இல்லாவிடினும் ஒரு மாதிரியாகவாவது, அறிந்துகொள்ளப்பட்டும், பயிலப்பட்டும், சிந்தனையிலும் வாழ்க்கையிலும் பயனளிக்குமாறும் செய்யப்பட்டு வருகின்றன. விரிவடைந்து கொண்டே போகும் உண்மையானது மேன்மேலும் வளர்ச்சியும் பெற்றுவருகின்றது. பழைய கருத்துக்கள் புது உருவம் தாங்கி புது அனுபவங்கள் பெற்று வருகின்றன.

இவற்றின் இறுதியான முடிவு யாதாயிருப்பினும், இந்த அத்தியாத்ம முயற்சியும் சமயக் கொந்தளிப்பும் நவபாரதத்தின் பிரதான அம்சங்களாக விளங்கிவருவது கண்கூடு. இந்தத் துறைகளில் ஆக்கவேலையைவிட விமர்சன வேலையே சமீபகாலம்வரையிலும் அதிகமாயிருந்து வரினும், இத்துறையில் மட்டும் ஒவ்வொரு பிரேரணையும் சிருஷ்டிக்கும் ஆற்றல் வாய்ந்ததாகவே முற்றிலும் இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. விசேஷமாக, எங்குமே, சைதன்னியம் வாழ்வின்மீதுள்ள பிடியை மீண்டும் பெற்று வருவதையும், சமுதாயத்தின் புதுவாழ்க்கைக்கு ஆத்மஞானத்தை மீண்டும் ஆதாரமாக்குமாறு வற்புறுத்தி வரும் பிரேரணை தெளிவாக இருப்பதையும் நாம் பார்க்கிறோம். துறவறமும் சந்நியாச சங்கமுறைமையும் கூட தனித்து ஒதுங்கி நின்று சிந்தனாலோகத்தில் ஆழ்ந்திராமல், சமய விபாகம், கல்வி, லோகோபகாரம், என்னும் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. சமீபத்தில் சிந்தனையாளர்களிற் சிறந்தோர் வாழ்க்கையின் அவசியத்தை சுய உணர்வுடனும் உறுதியுடனும் மேன்மேலும் வற்புறுத்தி வருவது வெளிப்படை.

இதுவே சமீப எதிர்காலத்தின் மிக முக்கியமான அறிகுறியாக விளங்குகிறது. வடிவ அமைப்புகளினின்று விடுதலை யடைந்து அத்

தியாத்மத்தின் ஆழங்களுக்குச் செல்வதிலும், அந்த அத்தியாத்மம் மீண்டும் வாழ்க்கையில் வியாபிப்பதிலும் தான் பாரத நாட்டின் மறு மலர்ச்சியின் இரகசியமிருக்கின்றது.

ஆனால், வாழ்க்கையைச் சமாளிக்கவும் அதை ஒரு கட்டுக்குள் கொண்டுவரவும் இந்த அத்தியாத்மமானது எத்தகைய பேராக்க மளிக்கும் கருத்துக்களையும் எத்தகைய மகத்தான நிச்சயமான சாதனங்களையும் கையாளக் கூடும் என்பது இன்னும் சரியாகத் தெரியவில்லை, ஏனெனில், இந்நவ இந்தியாவின் சிந்தனை இன்னும் பூரண உருவைப் பெறுமலும் நிச்சயமற்றும் இருந்து வருகின்றது.

சமயங்கள், சமயக் கோட்பாடுகள், சமய ஸ்தாபனங்கள், இவையெல்லாம் அத்தியாத்மப் பிரேரணையின் சகஜமான புறச்சின்னங்களேயாகும். சமயமானது தீவிர செயலின் மூலமாகத் தனது அந்தரங்கச் சக்தியைக் கண்டுபிடிக்கும் ஒரு முயற்சியே. அது வாழ்க்கையில் சிந்தனையை விதைக்கும் போதும், புதிய அனுபவங்களுக்கு வழி திறந்துவிடும் அதன் லட்சியங்களை புத்தி ஒப்புக்கொண்டும் ஜீவன் சிரணம் செய்ய முயன்றும் வரும்போதும், அதன் இயக்கம் விரிவடைகிறது.

பாரத நாட்டில் தத்துவஞானமானது ஆத்ம ஞானத்தையும் ஆத்மானுபவத்தையும் வளப்படுத்தும் ஓர் அறிவுச்சாதனமாக இருந்துவருகிறது. ஆனால் தத்துவ அறிவு இன்னும் தனது புது ஆக்கவேலையைத் திட்டமாக ஆரம்பிக்கவில்லை. அது தனது சிந்தனை, ஆர்வம் இவற்றின் வரையறைகளைப் பிரத்யட்சமாகவும் துரிதமாகவும் விரிவுபடுத்தக்கூடிய ஒரு புதிய விளக்கத்தைச் செய்யாமல், தனது பண்டைச் செல்வங்களை மறுவிளக்கம் செய்வதிலேயே கருத்தூன்றி யிருந்து வருகிறது. ஐரோப்பிய தத்துவஞானத்தின் தொடர்பினால் யாதொரு பலன் தரத்தக்க விளைவும் ஏற்படவில்லை; ஏனெனில், ஐரோப்பியாவின் பழைய தத்துவங்களில், இவ்வழியில் பெரிதும் பிரயோசனமாயிருக்கக்கூடியதோ, அல்லது பாரதநாடு தனது அத்தியாத்ம இயல்புக்கும் மேதைக்கும் மிகவும் பொருத்தமான உருவங்களில் ஏற்கெனவே விளக்கியிராத முக்கியமான விஷயமோ, யாதொன்றுமில்லை. சமீபத்தில் நியெட்சே, பெர்க்ஸன், ஜேம்ஸ் என்பவர்களின் சிந்தனைகள் அங்குமிங்கும் சில சிந்தனையாளர்களின் கருத்தை மிகவும் கவர்ந்திருக்கின்றனவாயினும், அவைகளின் போக்கு பெரிதும் பிராண நிலையையே பாதிப்பதாயும், மானிட லௌகிக விவகாரங்களுடன் சம்பந்தப்பட்டதாயு மிருக்கின்றது. ஆகவே உண்மையான இந்திய தத்துவஞானமானது அத்தியாத்ம நாட்டத்தின் பலனாக ஏற்படும் ஆத்மானுபவத்திலிருந்துதான் விகசிக்கமுடியும். சென்ற நூற்றாண்டில் நடைபெற்ற எல்லா சமய இயக்கங்களும் இந்நாட்டத்தைப் பொதுவாக்க உதவியாயிருந்தன. இந்திய தத்துவம், ஐரோப்பிய தத்துவத்தைப்போல முற்றிலும் பகுத்தறிவினின்றே, பௌதிக சாஸ்திர ஞானம், சிந்தனைகள், இவற்றின் பயனாகவோ ஏற்படமுடியாது.

மேலும் பாரத நாட்டில் 19-ம் நூற்றாண்டில் புதிய விமர்சன சிந்தனையைத் தயார்செய்யும் ஆற்றல் அதிகமாகக் காணப்படவில்லை. புதிதாகச் சிருஷ்டிக்கும் சக்தியைப் பெரிதும் உடையவராயிருந்தவர்களின் நோக்கு வெறும் இலக்கியத்தின்பால் சென்றது. அவர்கள் நூதனக்கருத்துக்களை ஜீரணிப்பதிலும் இந்தியமாக்குவதிலுமே கவனஞ் செலுத்தினர். இப்பொழுதுதான் இன்னுமதிகச் சக்திவாய்ந்த சிந்தனையின் போக்கு ஒன்று ஆரம்பித்து வருகிறது. ஆயினும் இன்னும் எல்லாமே நிச்சயமற்றும், ஒரு பிரகாசத்தின் தெளிவற்ற முதற் குறிப்பாகவுமே இருக்கின்றது.

இதற்கு நேர்மாறாக, கவிதை, இலக்கியம், கலை, பௌதிக சாஸ்திரம் ஆகிய இவைகளில் நிச்சயமான ஆரம்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மற்ற பல துறைகளிலும் போலவே இத்துறைகளிலும் சமீபத்தில் வங்க நாடே பாரத சக்தியின் பிரதான சோதனைக் குகையாக இருந்து வருகின்றது. பாரத சக்தியானவள், ஜீவன் ததும்பும் புதுச்சக்திகளை உருப்படுத்தவும் தனது முதலுருவங்களையும் ஆவேசங்களையும் வளர்க்கவும் அப்பிரதேசத்தையே பொறுக்கி யெடுத்திருக்கிறாள். பாரத நாட்டின் மற்ற பிரதேசங்களிலும் பல ஆக்கவேலை

கள் நடந்து வருகின்றன. இங்குமங்கும் சிறந்த, திறமையும் மேதாவிலாசமும் படைத்த கவியோ, எழுத்தாளனோ தோன்றி வருவதைக் காண்கிறோம். ஆனால் வங்காளத்தில் தான் முக்கியமானதாயும், தனிச்சிறப்பும் உருவமும் கொண்டதாயும், நன்கமைந்ததாயும், விருத்தி யடைந்துகொண்டே வருவதாயும் உள்ள பெருந்தொகையான இலக்கியமொன்று ஏற்கெனவே இருந்துவருகின்றது. இப்பொழுது அங்கே புதிதாகச் சிருஷ்டிக்கப்பட்டதாயும், ஞான ஆவேசம் பொருந்தியதாயும், நுண்மையான அழகும் திருஷ்டியும் கொண்டதாயும், பெருவாரியாயும் உள்ள ஒரு கலையும் தோன்றியிருக்கிறது. இரு சிறப்பு வாய்ந்த விஞ்ஞானிகளும் அங்கு தோன்றியுள்ளனர். அவர்களில் ஒருவர் ஒரு புதிய விஞ்ஞான உண்மையைக் கண்டுபிடித்திருப்பதால் உலகக்கீர்த்தியை யடைந்திருக்கிறார். மேலும், உலக விஞ்ஞான சாஸ்திரத்தில் இடம்பெறத் தக்க ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள வாலிபக் கோஷ்டியும் அங்குண்டு. ஆகவே, இந்திய மேதை எத்திசையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறதென்பதை இங்கு தான் நாம் காணக்கூடும். வங்க ஓவியர்களின் கலையானது பங்கிமின் வசனத்தையும் தாகுரின் கவிதையையும்விட விசேஷ மதிப்புடையதாயிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. வங்க கவிதை இன்னும் தனக்குரிய மார்க்கத்தைத் தேடிக்கொண்டும் அதை இன்னும் திட்டமாக அடையாமலும் இருந்துவருகின்றது. ஆனால் வங்கத்தின் மூலமாக தனக்குரிய வழியைக் கண்டுபிடித்து விட்டது.

அந்நிய கலாசாரம் மேலோங்கியும், மக்கள் தங்களது வழியைக் கண்டுபிடிக்கத் தடுமாறிக்கொண்டும், நிச்சயமற்றும் இருந்துவருகையிலேயே இப்புது இலக்கியம் ஆரம்பித்து விட்டதுதான் இந்நிலைக்கு ஓரளவு காரணமாக இருந்தது. அதுசமயம் இந்திய நுண்கலையானது—இதில் அசந்தர்ப்பமான ஒரு உபநாடகமாகவும், அபத்தமாகவும், திறமையற்றதாகவும் மலடாய் நசிக்கவேண்டியதாகவுமிருந்த ரவிவர்மாவின் கலையைச் சேர்க்கவில்லை—முற்றிலும் அமைதியாக இருந்தது. பின்னர் தனது சுயரூபத்தைத் திரும்பவும் அடைந்து ஒளிபெற்று மேன்மை யடையக்கூடிய நிலையிலிருக்கையிலேதான் அது வேலை செய்ய ஆரம்பித்தது.

மேலும், சிற்பக்கலையே வரம்புக்குட்பட்ட ஒரு கலையாகும். அது தனது உருவ அமைப்புகளிலும் உட்கருத்துகளிலும் குறுகிய அளவும் பரப்பும் கொண்டது. அது இவ்விதமிருப்பதினாலேயே, சிந்தனையிலும் அதன் வெளிப்பாட்டிலும் லாகவமான பல மாறுதல்களைக் கொண்ட இலக்கியத்தைவிட மிகவும் தெளிவாக குறிப்பாலுணர்த்தும் இயல்பையுடையதாக இருக்கிறது. பொருள்களின் ரூபத்தையும் மேலாகத் தோன்றும் அவற்றின் கருத்தையும் மட்டும் வெளிப்படுத்துவதோடு நிற்காமல், அவற்றின் மறைவான உட்கருத்தையும் சிவனையும் வெளிப்படுத்துவதையே தங்களது விசேஷ வேலையாகக் கொண்டிருப்பதில்தான் வங்கக் கலைஞர்களின் முழுவன்மையும் உள்ளது. அவர்களது கலை அந்தர்ஞானம் பெற்றது; அதன் உருவங்கள் அவ்வந்தர்ஞானத்தின் சந்தமேயாகும். உற்றறியும் புத்தியினால் அமைக்கப்படும் புறவிதிகளை அது லட்சியம் செய்வதில்லை. அது முடிவுற்ற பொருளில் முடிவற்ற, சொல்லரிய நுட்பங்களைக் கண்டு குறிப்பாலுணர்த்துகிறது. கேவலம் பௌதிகமயமான புற வாழ்க்கையின் மீதும் புற இயற்கையின்மீதும் தனது நோக்கைத் திருப்பி, அவை மறைத்து நிற்கும் வேறொரு வாழ்க்கைக்கும் இயற்கைக்குமுரிய கதிகள், வர்ணங்கள், சந்தங்கள், சொரூபங்கள் ஆகியவற்றை அவற்றின்மீது பதியுபடி செய்கிறது. இது இந்தியக்கலையின் சநாதனமான உட்கருத்தேயாயினும். இது புதுமுறையில் பிரயோகிக்கப்படுகிறது. இது பாவங்களையும் இதிகாச புராணங்களையும் சூசனைக் குறிகளையும் அதிகமாகக் கொண்டிராமல், நேராகவும் சூக்குமமாகவும் உருவமெடுத்து நுட்பமாகச் சூசிப்பித்துக் காட்டும் ஒரு முயற்சியாக இருக்கிறது.

இக்கலையானது உண்மையாகவே ஒரு புது சிருஷ்டியாகும். இவ்விதம் திறந்துவிடப்பட்ட புதிய வழியை பாரதநாட்டின் இதர பிரதேசங்களின் கலாமேதையும் பின்பற்றிச் செல்லுமென நாம் எதிர்பார்க்கலாம். ஆனால்

இவ்விதம் பின்பற்றப்படும்போது அது இதர லட்சணங்களையும் கொண்டு விளங்குமென்றும், புறவெளிப்பாட்டிற்குரிய இதர வழிகளையும் கண்டுபிடிக்குமென்றும் நாம் எதிர்பார்க்கலாம்; ஏனெனில் கல்கத்தா ஓவியர்கள் கலைக்குக் கொடுத்துள்ள விசேஷரூபமும் பாவமும் வங்கநாட்டின் சுபாவத்திற்குமட்டுமே நெருங்கிய தொடர்பையுடையனவாக இருக்கின்றன. பாரத சமுதாய மதியின் ஒற்றுமையும் அதற்குள்ளடங்கிய இதர பிரதேசங்களின் மதியின் வளமிகுந்த வேறுபாடுகளும் ஒன்றுசேர்ந்து பாரத அன்னையைப் பெருமைப்படுத்துகின்றன. அவளது கலைச்சிருஷ்டியின் புனருத்தாரணத்தில் இப் பெருமை பிரதிபலித்து விளங்குமென நாம் எதிர்பார்க்கலாம்.

வங்கக் கவிதையும் இலக்கியமும் இரண்டு வேறான பருவங்களைக் கடந்து மூன்றாவது பருவத்திற்குள் நுழைய ஆயத்தமாகி வருவதைப் போற் காணப்படுகிறது. இம் மூன்றாவது பருவத்தின் லட்சணங்கள் எவ்விதமிருக்குமென நாம் இன்னும் சரியாகச் சொல்லுவதற்கில்லை. ஆரம்பத்தில் இக்கவிதையும் இலக்கியமும் ஐரோப்பிய, பெரும்பாலும் ஆங்கிலேய, கலைகளினால் வசீகரிக்கப்பட்டும், அவற்றின் நவீனச் செய்யுள் வசன வடிவங்களையும், இலக்கியக் கருத்துக்களையும், கலை சிருஷ்டியின் நியதிகளையும் அப்படியே சுவீகரித்தும் வந்தன. யதேஷ்டமாயும் உல்லாசமாயும் சிருஷ்டித்துவந்த காலம் அது. அது சமயம் பலதிறப்பட்ட கவிவாணர்கள் தோன்றலாயினர். அவர்களில் ஓரிருவர் மகா மேதாவிலாசம் படைத்தவர்கள்; மற்றவர்கள் அபூர்வ கவிதாசக்தியை யுடையவர்கள். அழகும் சிறப்பும் வாய்ந்த பல சிருஷ்டிகள் உண்டாயின. உண்மையாகவே கலைமகள் கலைக் கடலின் மடையைத் திறந்துவிட்டாள்.

இப் புது சிருஷ்டியானது வெறும் நகல் செய்யும் வேலையாக இல்லை. அன்னியக் கலையின் ஆதிக்கம் எங்குமே காணப்படுகிறது என்பது உண்மையே யாயினும், அக்கலையை இது அப்படியே நகல் செய்யவோ அல்லது அதன் ஆதிக்கத்திற்கு அடியோடு உட்படவோ இல்லை; அது சீரணிக்கப்பட்டு தன் மயமாக்கப்பட்டது. வங்கஜாதியின் குணவிசேஷமும் அதற்கு இயற்கையாகவுள்ள சௌந்தரிய ஞானத்தின் போக்கும் அதைக் கையாண்டு தங்களது ஜீவசக்திக்குத் தக்கபடி வாக்கின் அச்சில் வார்த்துக் கொண்டன.

ஆயினும், முக்கியாம்சம் சுய ஆன்மாவுக்கு முற்றிலும் சகஜமானதாய் இராததால், அது உள்ளீடற்றதாகக் காணப்படுகின்றது. ஆரம்பத்திலிருந்தே வங்கக் கவிதா சிருஷ்டியானது தனது வடிவத்திலும் வெளிப்பாட்டிலும் ஒரு அதிசய வசீகரத்தையும் நுண்மையான கலை யழகையும் அடைந்திருந்தது என்பது உண்மையாயினும், அது வெளிப்படுத்தின விஷயம் என்னவோ அவ்வளவு சத்துள்ளதாயில்லை. ஒருவன் சுயமாகச் சிந்தனை செய்து சுயேச்சையாகச் சிருஷ்டிக்காமல் வேறொருவனது சிந்தனையையும் உருவ அமைப்பையும் சீரணிப்பானானால், அவனது முயற்சியானது மெலிவுற்றதாயும், ஒரு கவிக்குள்ள இயற்கையான ஆற்றலிலிருந்து நாம் எதிர்பார்க்கக்கூடிய பெருமை யற்றதாயும் இருக்குமல்லவா? இதை நாம் எவ்விதம் தவிர்க்கமுடியும்?

அந்த நிலைமை முடிந்து எத்தனையோ காலமாய்விட்டது. அதற்குரிய காலத்தை அது கடந்துவிட்டது. அதன் வேலைப்பாடு பழைய இலக்கியத்தில் இடம் பெற்றுவிட்டது. அதன் சிருஷ்டிகர்த்தர்களில் ஒருவர் அதன் வசன நடையை மாட்சிமையுடன் முதன்முதலாக உருவப்படுத்தினார். புதிதாகப் படைக்கவல்ல மேதையும் பழுதற்ற கலைப்பிரசாதமும் அவரிடம் மிகவும் உன்னதமாகச் சேர்ந்திருந்தன. மற்றொருவர் சிருஷ்டியின் சோபை கடைசியாக மங்கலாகிக்கொண்டு வரும்போதுதான் உதித்தாராயினும், அதற்குப் பின்னும் இருந்து கவிதையின் வேறொரு ரீதியையும் இன்னுமோர் கம்பீரமான வாக்கையும் வெளிப்படுத்தினார். இவர்கள் இருவருமே வங்கத்தின் உண்மையான சீவனை மலர்ச்சி யடையும்படி செய்தனர். இன்று பங்கிம் சந்திரரின் சிருஷ்டி பழமையாய்ப் போய்விட்டது; ஏனெனில், ஏனைய இலக்கிய சிருஷ்டிகளைவிட அதிகமாக அதுவே வங்காளத்தின் நவீன அறிவை உருப்படுத்தி, ஏற்கெனவே அதனுடன் ஐக்கியமாய் விட்டது. ரவீந்திரரின் சிருஷ்டி தற்சமயம் தலைசிறந்து விளங்கிக்கொண்டிருக்கிறது.

ஆயினும், எதிர்காலத்தில் தனக்கு அப்பாலும் செல்லக்கூடிய ஒரு வளர்ச்சிக்கு அது வழி திறந்து விட்டிருக்கிறது. பாரதஜீவன் புது உருவங்கள் தாங்கி மேன்மேலும் மறுமலர்ச்சி யடைந்து வருவதை இவை இரண்டுமே காட்டுகின்றன; இவை இரண்டுமே வைகறையின் வாக்குகளெனத் திகழ்கின்றன. மேலும் இவை தாம் அனுபவத்தில் அடைவதோடு நின்றுவிடாமல் இன்னும் மேலே செல்லவும், தாம் உண்மையாக எழுப்பும் உணர்ச்சிகளுக்கும் நினைவுகளுக்கும் அப்பாலுள்ள விஷயங்களை விளிக்கவும் சூசிப்பிக்கவும் நாடுகின்றன.

தற்சமயம் ஒரு புது முயற்சி ஆயத்தமாகி வருவதைக் காண்கிறோம். அது ஒரு பக்கம் தாகுரின் ஆதிக்கமண்டலத்திலிருந்து மெல்ல மெல்ல விரிந்து கொண்டும், மற்றொரு பக்கம் அதற்கு நேர் எதிராகக் கிளம்பி, ஞான ஆவேசத்திலும் ஆக்கவேலையிலும் தேசியத்தன்மை இன்னும் அதிகமாக விளங்கவேண்டுமென வற்புறுத்திக் கொண்டும் வருகின்றது. இதிலிருந்து என்ன வெளிவரப்போகிறதோ, இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. மொத்தத்தில் இயக்கம் என்னமோ நவீன நுண்கலை செல்லும் வழியிலேதான் போய்க்கொண்டிருக்கிறது. ஆயினும் சிந்தனையின் வாய்மொழிக்கும் சொல்லின் புறவெளிப்பாட்டுக்கும் சுபாவமாகவுள்ள நானாவித நோக்கங்களும் சொல்லின் அமைவும் இதில் இன்னும் அதிகமாகவே காணப்படுகின்றன. விஷயங்களுக்கு ஒரு உறுதியான போக்கைக் கொடுக்கவல்ல மொழியையுடைய மிக உன்னதமான மேதாவி இன்னும் தோன்றவில்லை. ஆயினும், உறுதியற்ற இவ்வாக்குகளிலிருந்துங்கூட, மகத்தான கற்பனையும் அந்தர் ஞானமும் வாய்ந்ததாயும் புது இந்திய ரகத்தைச் சேர்ந்ததாயுமுள்ள இலக்கியமொன்று உருவாகி வெளிவர இருக்கிறது என்னும் ஒரு நம்பிக்கை ஏற்கெனவே மங்கலாகக் காணப்படுகிறது.

இவ்விதமாக, மனத்திற்குரிய விஷயங்களில் ஒரு குறுகிய எல்லைக்குள் சில நிச்சயமான ஆரம்பங்கள் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஆனால் பாரத சமுதாயத்தின் புறவாழ்க்கையைப் பொறுத்தமட்டில் நிலைமை இன்னும் மிகவும் நிச்சயமற்றதாயும் குழப்பமாகவுமே இருக்கின்றது. இதற்கும் பெரும்பாலும் காரணமாயிருப்பது அரசியல் நிலைமைகளேயாகும். பண்டைக்காலத்தில் இருந்த ஜீவ ஓட்டம் அவைகளுக்கு இன்று இல்லை. அவை இன்னும் எதிர்காலத்தை நோக்கிச் செல்லக்கூடியவையாயுமில்லை. அலைபோல் பொங்கும் ஆர்வத்தின் ஏற்றமும், நோக்கம் நிறைவேறாமையின் வற்றமும் மாறி மாறி வருவதினால் விளையும் தாபமும் தளர்ச்சியும் சமுதாயவாழ்வில் ஒரு புதுப்பிறப்பு திடமாக அமைவதற்கு ஏற்றனவாக இல்லை. ஐரோப்பிய ராஜீயக் கருத்துக்களை அரைகுறையாக ஜீரணித்து அவைகளை நகல் செய்துவந்த முதற்பருவம் முடிந்துவிட்டது. இவ்வளவுதான் நாம் தெளிவாகக் காணக்கூடிய விஷயங்கள்.

பத்து வருஷங்களுக்கு முன் ஏற்பட்ட இயக்கத்தின் அதிர்ச்சியினால் மக்களிடையே வேறொரு அரசியல்—நோக்கு விழிப்புற்றிருக்கிறது. அது தன் உட்கருத்தில் ஆழ்ந்த தேசியத்தன்மை வாய்ந்ததாகும். அது தேசாபிமானத்தை ஒரு மதமாகக் கொண்டு அரசியலில் பழைய சமயக்கொள்கைகளையும் தத்துவ ஞானத்தையும் பிரயோகித்து வருகின்றது. நாட்டை அன்னை யெனவும் சக்தி எனவும் அது வழிபடுகிறது. இந்தியமேதைக்குச் சுபாவமாயுள்ள ஆத்ம சிந்தனையையும் பிரேரணையையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு ஜனநாயகக் கருத்தை அது அமைக்க முயலுகிறது. தனது சுயவெளிப்பாட்டில் அது பலமடையாமலும் நிச்சயமற்றதாயும் இருக்கிறது. பழைய கால தற்கால நிலைமைகளுக்கு விரோதமாகக் கிளம்புவதற்கு ஒழுங்காக முயற்சிசெய்து வரினும், அது தனது ஆக்கவேலை முறைகளை முன்னேறும்படி செய்வதில் உடனே வெற்றி பெறவில்லை. ஆயினும் அது மக்களைத் தூண்டி எழுப்பி அவர்களது அரசியல் சிந்தனைகளுக்கும் வாழ்க்கைக்கும் ஒரு திட்டமான போக்கைத் தந்திருக்கின்றது. பாரத சமுதாயமானது தனது சித்தம் இன்னது என்பதை முற்றிலும் உணர்ந்து தனது வளர்ச்சியை நிர்ணயிக்கவல்ல சக்தியைப் போதுமான அளவு பெற்ற பின்னரே இவைகளின் பலாபலன்கள் புலனாகும்.

இந்திய சமூகம் இன்னுமதிகமான குழப்பத்தில் இருக்கிறது. சுற்றுப்புற நிலைமைகளின் இறுக்கத்தினால் பழைய அமைப்புகள் தவிடு பொடியாய்க் கொண்டுவருகின்றன. அவைகளின் ஜீவனும் மெய்ப்பொருளும் அவைகளை விட்டு மேன்மேலும் விலகிக் கொண்டிருக்கின்றன. ஆயினும், சிந்தனையும் சித்தமும் செயலற்றிருப்பதாலும், நீண்ட கால சகவாசத்தின் மீதுள்ள பாசம் இன்னும் விடாமல் இருப்பதாலும், புதியது பிறப்பதற்கு இன்னும் சக்தியற்றிருப்பதாலும், சமூக அமைப்பின் முகப்பு மட்டும் அப்படியே நிற்கின்றது. பல விஷயங்கள் நமது கண்ணுக்குப் புலனாகாமல் மெல்ல மெல்ல அழிந்து வருகின்றன. இந்நிலையில் சமூகத்தைச் சரியான வழியில் சீர்திருத்தியமைப்பது இன்னும் சாத்தியமில்லை.

சமூக மாறுதல் இயக்கமொன்று பலத்த கோஷங்களிடையே ஆரம்பித்ததை நாம் அறிவோம். சீர்திருத்த நோக்கங்கொண்ட சமாஜங்களைப் போன்று சமய ஆதரவேற்பட்ட இடங்களிலேதான் அது பலன் தரக்கூடியதாயிருந்தது. அது சில சமயம் மேனாட்டு உதாரணங்களையும் லட்சியங்களையும், சில சமயம் பண்டைக்கால மேதை அல்லது ரசத்தையும் தனக்கு ஆதாரவாகக் கொண்டிருந்தது. ஆனால் அத்தகைய இயக்கம் மக்களின் அந்தரங்க ஜீவனைத் தொட முடியவில்லை; குறித்த சில விஷயங்களைத் தவிர்த்து, பொதுவாக அதற்கு உறுதியான உண்மை இல்லை. ஆகவே, அது மக்களைத் தன்னோடு இழுத்துச் செல்ல முற்றிலும் தவறிவிட்டது.

பூர்வ வைதீக நிலைமையை வலியுறுத்தி அதை உயிர்ப்பிக்கும் இயக்கம் ஒன்றும் ஏற்பட்டது. ஆனால் தனது பிரேரணையில் அது உறுதியாக நிற்கவில்லை; அது வெறும் கொள்கையாகவும் மனோபாவமாகவும் மட்டுமே இருந்தது. அது வாழ்க்கைகளின் மகத்தான விஷயங்களையும் சக்திகளையும் தொடவில்லை.

சமுதாயத்தின் சீவசக்தி இன்று தேசிய கலாசாரத்தில் வெளிப்படையாக இராவிடினும் உள்ளுறையாக உள்ள பொருள்களைக் கிரகித்து வருகின்றது. ஆகவே சமூகக் கருத்துக்களும் அமைப்புகளும் புத்துரு பெறவேண்டியதின் அவசியத்தை மக்கள் மேன்மேலும் உணர்ந்து வருகின்றனர். ஆனால் போதுமான மனவுறுதியோ, நிறைவேற்றுதற்குரிய சாதனமோ இன்னும் ஏற்படவில்லை. தேசிய வாழ்வு இன்னும் அதிகமாக விடுதலையடைய ஆரம்பிக்கும்போதுதான் மறுமலர்ச்சியின் சக்தியானது சமூகமனைத்தையும் விழிப்புற்ற மக்களின் வினைகளையும் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவருவது சாத்தியம் ஆகும்.

புஸ்தக விமர்சனம்

ஸ்ரீ குருவசனரமணமாலா :—(வடமொழி) மூலம். விலை. 0–8–0. (2) குருரமண வசன மாலை. தமிழ் மொழிபெயர்ப்பு. (வசனம்) விலை. 0–12–0. Dr. கி. லக்ஷ்மணசர்மா. பி. ஏ., பி. எல்., என். டி. அவர்கள் இயற்றியன. (The New Light Publishing House Pudukottah.)

ஆர்யா விருத்தத்திலே 349 சுலோகங்களைக் கொண்டது 'ஸ்ரீ குருவசனமாலா' என்னும் வடமொழிநூல். இதனுள் 286 சுலோகங்கள் பாரத்வாஜி முகவைக் கண்ண முருகனார் இயற்றிய குருவாசகக் கோவை என்னும் நூலினின்று பொறுக்கியெடுத்த 290 வெண்பாக்களின் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளன. மற்றை 63 சுலோகங்களும் ஸ்ரீரமண மகர்ஷியின் உபதேசமொழிகளையே பின்பற்றி அமைந்துள்ளன. தாம் எழுதிய வடமொழி சுலோகங்களைத் தாமே தமிழ் வசன நடையிலே மொழிபெயர்த்துத் தனி நூலாக அச்சிட்டிருப்பதால் தமிழ் மூல வெண்பாக்களை வடமொழியிலே அமைக்கும்போது ஸ்ரீலட்மண சர்மா செய்துள்ள மாறுபாடுகளையெல்லாம் எளிதிற் கண்டுகொள்ளலாம். இதற்கு உதவுமாறு குருரமணவசனமாலைச் சுலோகங்களுக்கு நேரான 'குருவாசகக் கோவை' யின் செய்யுள் எண்களின் அட்டவணையொன்று தமிழ் மொழிபெயர்ப்பிலே சேர்க்கப்பட்டுள்ளது. மகர்ஷியின் சரித்திரமும் உபதேசசாரமும் முன்னுரையாக தமிழ் வசனத்திலே விவரிக்கப்பட்டுள்ளன.

குருவாசகக் கோவைப்பாடல்களிலே சிலவற்றையும் அவற்றிற்கு நேரான வடமொழி சுலோகங்களையும் மொழிபெயர்ப்புகளையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

ஞான முயிர்த் தொகைக்கு நல்க லரனுக
வானம் வழங்க லரியென்பர்—ஞான
உரனே பரனுவொளிர்விசும்பாமொன்றே
அரனே டரியென் றறி

என்பது கோவையிலுள்ள வெண்பா. அதற்கு நேரான வடமொழிச் சுலோகத்தின் பொருள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

''முக்தியை விஷ்ணு தருவார்; ஞானத்தை சிவன் தருவார்'' என்று சொல்லப்படுகிறது; உண்மையில் ஞானமே முக்தியாவதால், விஷ்ணு சிவன் எனப்படுவார் இருவரும் ஒன்றே.

இது போலவே

எழா வதுருசியா வெண்ணுவார் மற்றெதற்கும்
தாழாத வார்வருசி தாமுணரார்—ஊழானே
பேத ருசியாய பிறருசிக்குப் பெட்பளிக்கும்
ஆதிருசி யாதமவ் வன்பு

என்னும் வெண்பா, வடமொழிச் சுலோகத்திலே பின்வரும் பொருள் பெறுகின்றது :—

''அன்பு என்பது ஏழாவது சுவை என்று அஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள்; அது சரியல்ல; மற்றெல்லாச் சுவைகளுக்கும் சுவை தரும் ஆதி சுவையே அன்பு.

இக் கருத்துரையிலே மூலவெண்பாவிலுள்ள நயமான பகுதி யொன்று விடுபட்டுள்ளது. பிற ருசிகள் எல்லாம் பேதருசிகள். அவை அவ்வாறு பேதப்படுவதற்குக் காரணம் ஊழ். ஊழாலே பேதருசியானவற்றிற்கு அடிப்படையாய் அவற்றிற்கு பெட்பு அளிப்பது அன்பு என்னும் ஏக ருசி'' என்னும் அழகிய விவரணம் வடமொழிச் சுலோகத்திலே அமையவில்லை. இதற்குக் காரணம் விருத்தத்தின் அளவுபாடே என்று கொள்ளவேண்டும். இக் காரணம் பற்றியே சில சுலோகங்கள் ஒவ்வொன்றும் இரண்டு வெண்பாக்களின் கருத்தைக் கொண்டு அமையவும் சில இடங்களில் ஒரு வெண்பாவின் கருத்தை இரண்டு சுலோகங்களில் அமையவும் நேர்ந்துள்ளது. உதாரணமாக,

உழுவலன் புக்கிடனு வுற்றபே ரின்பாய்
விழுமியமெய்ஞ் ஞான விசும்பாய்—எழுவாய்
அழிவிலா வான்மநிலை யாம்பூன்ற நின்று
நழுவலே காலனென நாடு.

(400-ம் பக்கம் பார்க்க.)